Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து


(C/1325)

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 10 ஞாயிற்றுக்கிழமை (22.04.2012) பக்கங்கள் 20 ஓசை - 204



பெண்ணின் உயிரைக் குடித்தது! (17)

புதிய இடத்தில் பள்ளிவாசல்



(09)



சேமிப்பால் சிறக்கும் வாழ்வு (04)



உள்ளூரிலேயே வேலை வாய்ப்பு (15)



போலியான பேஸ்புக் கணக்கு... (18)

# பரிந்துரைகளை அமுல்படுத்த சுஷ்மாவும் வலியுறுத்து



(கொழும்பு)

ஜெனிவாவில் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் இலங்கைக்கு எதிரானது அல்லவென, இந்திய நாடாளுமன்றக் குழுவின் தலைவியான சுஷ்மா சுவராஜ் தெரிவித்தார். இலங்கைக்கான தமது ஆறு நாள் பயணத்தை நிறைவுசெய்து நேற்றைய தினம் கொழும்பு தாஜ்சமுத்திரா ஹோட்டலில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமானது கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்தும்படியே கூறுகின்றது. இந்த ஆணைக்குழு இலங்கை அரசினால் நியமிக்கப்பட்டதொன்றாகும். எனவே இலங்கையின் சொந்த ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்தும்படியே ஐ.நா. மனித உரிமை தீர்மானம் கூறுகின்றது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சுப் பதவி கேட்கிறார் சனத்

(கொழும்பு)

தமக்கு அமைச்சர் பதவிகளை வழங்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் சனத் ஜயசூரிய உட்பட நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சனத் ஜயசூரிய, காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான நிஷாந்த முத்துஹெட்டிகம, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சரத் வீரசேகர, மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான லக்ஷ்மன் வசந்த பெரேரா ஆகியோர் இது தொடர்பாக ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளனர்.

அமைச்சர் பதவிக்காக தாம் நீண்ட காலமாக காத்திருப்பதாகவும் தமது செயற்பாடுகள் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் தாம் பெற்ற வாக்குகள் ஆகியவற்றை கருத்திற்கொண்டு தாம்

(19) ஆம் பக்கம் பார்க்க

## இந்தியக் குழுவின் வருகையில் சந்தேகம் கொள்ளும் ஜே.வி.பி.

(கொழும்பு)

தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க வந்தவர்கள் போல, இந்திய எம்.பிக்கள் குழுவினர் காணப்படவில்லையென ஜே.வி.பி. சந்தேகம் வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளதாவது, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை மீள்குடியேற்றி அவர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு எதிர்க்கட்சிகளும், சிவில் அமைப்புகளும் தெரிவித்து வந்தபோது அவற்றை நிறைவேற்றாத அரசாங்கம் இன்று இந்தியாவின் முன்னால் தலை சாய்க்க வேண்டியுள்ளது.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் வடக்கு, கிழக்கு, தெற்கு என சகலரும் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழலாம் என்ற எண்ணத்தில் இருந்தனர். எனினும் யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் பாதுகாப்பை

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா.தூதுவர் பதவிக்கு எரிக் சொல்ஹெய்ம்?

(ஒஸ்லோ)

நோர்வேயில் அண்மையில் நடந்த அமைச்சரவை மாற்றத்தின் போது, பதவியிழந்த இலங்கைக்கான முன்னாள் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஐ.நாவுக்கான தூதுவர் பதவிக்கு நியமிக்கப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தீவிர அரசியலில் இருந்து விலகி, இராஜதந்திரப் பணியில் இணைந்து கொள்ளும் நோக்கில் அவர் முக்கியத்துவம் மிக்க ஐ.நாவுக்கான தூதுவர் பதவிக்கான போட்டியில் குதித்துள்ளார்.

நியுயோர்க்கில் ஐ.நாவுக்கான நோர்வேயின் தூதுவராகப் பணியாற்றும் மோர்டென் வெற்லன்ட் தனது நான்கு ஆண்டு கால பதவிக்காலத்தை முடித்து ஒஸ்லோ திரும்பவுள்ளார்.

இந்த நிலையில் ஐ.நாவுக்கான தூதுவர் பதவிக்கு எரிக் சொல்ஹெய்ம் போட்டியிடவுள்ளார். இவருடன் சேர்ந்து மேலும் மூவர் போட்டியில் உள்ளனர். எனினும் இந்தப் பதவிக்கு எரிக் சொல்ஹெய்ம் நியமிக்கப்படலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பெற்றோல் விலை அதிகரிக்கும்?

அடுத்த சில தினங்களில் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 158 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ரூபாவின் பெறுமதி மதிப்பிறக்கம் செய்யப்பட்டதை தொடர்ந்து, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்படுத்த வேண்டிய கட்டாய நிலை மற்றும் ஈரானில் நிலவும் அமைதியற்ற சூழ்நிலை போன்ற காரணங்களினால் இந்த விலை அதிகரிப்பை ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் உள்ளதாக தெரியவருகிறது. பெற்றோலைத் தொடர்ந்து ஒரு லீற்றர் டீசலின் விலையும் 5 ரூபா முதல் 8 ரூபாவினால் அதிகரிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

## இ.போ.ச. ஊழியரின் கொடுப்பனவு வழங்கல்

இலங்கை போக்குவரத்து சபை சேவையாளர்களின் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்க தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளதாக தொழில் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார். இதன்படி இந்த ஊக்குவிப்பு கொடுப்பனவின் முதல் கட்ட கொடுப்பனவு, எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## தம்புள்ளை பள்ளிவாசல் நேற்று திறக்கப்பட்டது



(கொழும்பு)

தம்புள்ளை புனித பூமியாகையால் அங்குள்ள பள்ளிவாசலை அகற்ற வேண்டுமெனத் தெரிவித்து நேற்று முன்தினம் பௌத்த பிக்குகள் உட்பட பலரால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தையடுத்து பொலிஸாரால் சீல் வைக்கப்பட்ட குறித்த பள்ளிவாசல் நேற்றைய தினம் மீளவும் திறக்கப்பட்டது.

அமைச்சர்கள் ஏ.எச்.எம்.பௌஸி, றிசாட் பதியுதீன் நாடாளுமன்ற உறுப்பினர் ஹினைஸ் பாருக், ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸிலின் தலைவரும் முஸ்லிம் மீடியா போரம் தலைவருமான என்.எம். அமீன் ஆகியோர் கொண்ட குழு நேற்றுக் காலை இப்பள்ளிவாசலை பார்வையிட்டதுடன் அப்பகுதி மக்களையும் சந்தித்துப் பேசியது. இக்குழுவினர் பள்ளிவாசலை அடையும் முன்னர் பள்ளிவாசல் திறக்கப்பட்டு தூய்மையாக்கும்

(19) ஆம் பக்கம் பார்க்க

## அரசின் தந்திரங்களை முறியடிக்க வேண்டுமாம்

### கூறுகிறார் சம்பந்தன் எம்.பி.

இலங்கை தமிழ்பேசும் மக்களின் குரலை ஐ.நா. முதல் தடவையாக அங்கீகரித்துள்ளது. இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக் காண்பதற்கு நல்ல வாய்ப்பு ஒன்று கிடைத்திருக்கின்றது.


இதனை புத்திசாலித்தனமாக பயன்படுத்தி அரசாங்கத்தின் தந்திரங்களை முறியடிக்க வேண்டும் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சம்பந்தன் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பில் அரசாங்கம் இனி எவ்வித சாக்கும் போக்கும் கூறி தப்பித்துக் கொள்ள முடியாது. சர்வதேச நாடுகளின் பிடிக்குள் இலங்கை சிக்கியுள்ளது.

தமிழ்பேசும் மக்களுக்கென ஒரு அரசியல் முறைமை ஏற்படுத்தப்பட வேண்டும். அதன் மூலம்தான் எம்மை நாமே ஆளும் அதிகாரத்தை பெறமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். திருகோணமலை மாவட்டத்துக்கான நான்கு நாள் சுற்றுப்பயணத்தை நேற்றுக் காலை ஆரம்பித்த சம்பந்தன் எம்.பி, திருகோணமலை மாவட்டத்தின் வடக்கு எல்லைக் கிராமமான தென்னமரவடி,

(19) ஆம் பக்கம் பார்க்க

# 17 ஆண்டுகளுக்குப் பின் யாழில் கம்பன் விழா சிறப்புற ஆரம்பம்



(யாழ். நிருபர்)

கம்பனின் கவித்துவத்தை, ஆற்றலை யாழ்ப்பாணக் குடாநாட்டில் பரப்பிய பெருமை கம்பன் கழகத்திற்கு உண்டு. கம்பன் விழாக்களுக்கு யாழ்ப்பாணத்தில் நீண்ட பாரம்பரியம் உண்டு. 17 ஆண்டு இடைவெளிக்குப் பின் மீண்டும் யாழ்ப்பாணத்தில் கம்பன் விழா நடைபெறுவது மகிழ்ச்சி தருகிறது.

இவ்வாறு நேற்றுக் காலை யாழ்ப்பாணக் கம்பன் கழகம் நல்லூரில் நடத்திய கம்பன் விழாவில் தொடக்கவுரை நிகழ்த்திய பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

இன்று யாழ்ப்பாணத்தில் கம்பன் விழா இனிக்கிறது. மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்று இன்று நல்லூரில் கம்பன் குடும்பம் கூடியிருக்கிறது.

இன்றைய இளைய தலைமுறையினர் கம்பராமாயணத்தை படிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. அவர்களுக்குத் தெரிந்தது எல்லாம் புதுக்கவிதையும், புரியாணியும்தான். எந்தக் காலத்திற்கும் எந்தச் சமூகத்திற்கும் பொருந்தக்கூடிய அறம், வாழ்வியல், பண்பாடு என்பவற்றை கம்பன் இராமாயணத்தில் அற்புதமாக எடுத்துச் சொல்லியிருக்கிறான்.

கம்பராமாயணத்தை படிப்பவர்கள் வாழ்க்கையில் எந்தப் பிரச்சினைகளையும், சிக்கல்களையும் இலகுவாகத் தீர்வு கண்டு தமது வாழ்வினை நல்ல முறையில் அமைத்துக் கொள்ள முடியும்.

தமிழ்மக்களின் வாழ்வியல் அம்சங்களை உணர்வு ரீதியாக எடுத்துச் சொன்னவன் கம்பன். தமிழ் கவித்துவத்தின் பேர் எல்லையைத் தொட்டவன் கம்பன். கம்பனின் கவித்துவத்தை, இரசனையை நாம் எந்தக் காலத்திலும் இழந்து விடமுடியாது.

கம்பன் தனது கவிதைகளின் ஊடாக சாதாரண மனிதர்களின் பொதுவான பிரச்சினைகளை மட்டுமன்றி தனிமனித சிக்கல்களையும் எடுத்துக் காட்டினான்.

கம்பனின் கவிதைகளை படிக்குந்தோறும் புதிது புதிதாக கருத்துக்கள் எழும். கம்பன் தனது கவித்துவம் மிக்க கமராவால் பாத்திரங்களின் உள்ளங்களை தத்ரூபமாக படம் பிடித்துக் காட்டியவன். இன்றைய சமூகம் கம்பனுடைய இராமாயணத்தை படித்து தமது வாழ்வினை செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

தொழிலதிபர் இ.ச.பே.நாகரத்தினம் மங்கல விளக்கேற்றி விழாவினை ஆரம்பித்து வைத்தார். திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் கடவுள் வாழ்த்து இசைக்க லோ.துஷிகரன் வரவேற்புரை நிகழ்த்தினார். மேல் நீதிமன்ற நீதியரசர் ஜே.விஸ்வநாதன் தலைமையுரை நிகழ்த்தினார்.

கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் பேரழகனான இராமன் யார் என்ற தலைப்பில் சுழலும் சொற்போர் இடம்பெற்றது.

கு.பாலசண்முகன், ச.லலீசன், கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன், த.இராமலிங்கம், புலவர் இரா.சண்முக வடிவேல் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (10)

# 'குழந்தையும் தேசமும்' நூல் அறிமுக விழா



(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் சி.சிவசேகரத்தின் 'குழந்தையும் தேசமும்' சிறுகதை தொகுதி நூல் அறிமுக விழா நேற்று பி.ப. 3.30 மணியளவில் ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. தாயகம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் கா.தணிகாசலம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

அறிமுக உரையை தேசிய கலை இலக்கிய பேரவையின் தலைவர் சோ.தேவராஜா, நூல் விமர்சனத்தை யாழ். பல்கலைக் கழக சமூகத்துறை விரிவுரையாளர் இராஜேஸ்கண்ணா எழுத்தாளர் கருணாகரன் ஆகியோரும் நிகழ்த்தியிருந்தனர்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்டத்தில் மூத்த எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (எஸ்)

## இலவச வைத்திய முகாம்

(வடமராட்சி)

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா மகா சமாதி எய்திய முதலாம் ஆண்டு நினைவு நாளில் வடமராட்சி ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையங்கள் இணைந்து நடத்தும் இலவச வைத்திய சேவை நாளை நண்பகல் 12.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை பருத்தித்துறை சத்ய சாய் மெடிக்கல் வைத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைகளைச் சேர்ந்த வைத்திய நிபுணர்களால் வைத்திய ஆலோசனைகளும், சிகிச்சைகளும் வழங்கப்படவுள்ளது. (116)

## வடமராட்சியில் இன்று கம்பன் விழா

(வடமராட்சி)

வடமராட்சி கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா இன்று காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 12.30 மணிவரையும், மாலை 2.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணிவரையும் நெல்லியடி நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை நிகழ்வில் கம்பனின் ஏற்றமிகு கூற்றுக்கள் எனும் தலைப்பில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் சிறப்புரையாற்றுவார்.

அமரர் மன்னவன் கந்தப்புவை நினைவுகூர்ந்து பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா உரை நிகழ்த்துவார். தொடர்ந்து இ.ஜெயராஜ் தலைமையில் பட்டிமன்றம் இடம்பெறும். (116)

# டெங்கைக் கட்டுப்படுத்த நகர்ப் பகுதியில் சிரமதானம்



(யாழ்ப்பாணம்)

டெங்கு வாரத்தினை முன்னிட்டு டெங்கு நோயை தடுப்பதற்கான நடவடிக்கைகள் பல்வேறு இடங்களிலும் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் யாழ். சிறைச்சாலை மற்றும் யாழ். மாநகர சபை இணைந்து யாழ். பிரதான பஸ் நிலையம் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை ஆகிய இடங்களில் பல்வேறு சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர்.

யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் செனரத் பண்டார தலைமையில் நடைபெற்ற இச்சிரமதானப் பணியில் யாழ். சிறைச்சாலை கைதிகள் நலன்புரிச் சங்க அதிகாரி பாலகிருஷ்ணன் சுசிதரன் மற்றும் பிரதம சிறைச்சாலை அதிகாரி இந்திரகுமார் ஆகியோரின் ஒருங்கிணைப்பின் கீழ் கைதிகளின் உதவியுடன் பஸ் நிலைய சுற்றாடலில் காணப்பட்ட பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுப் பொருட்கள் மற்றும் புல், பூண்டுகளையும், குப்பை கூழங்களையும் அகற்றியதுடன், வாய்க்கால்கள், வீதிகள், பஸ் தரிப்பிட கட்டடங்களில் காணப்பட்ட குப்பை கூழங்களை அகற்றியும் சிரமதானப் பணியை மேற்கொண்டனர்.

இச்சிரமதானப் பணியில் யாழ். மாநகர சபை செயலாளர் பற்குணராஜா, யாழ். போதனா வைத்தியசாலை பிரதம பணிப்பாளர் பவானந்தராஜா உட்பட யாழ். சிறைச்சாலைக் கைதிகள் நலன்புரிச் சங்க தலைவி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், யாழ். மாநகர சபை பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.சிவநாதன், யாழ். மாநகர சபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நா.ரகுகுமார் மற்றும் பலர் கலந்துகொண்டு தமது ஒத்துழைப்பினை வழங்கினர். (எஸ்)

## சின்னஞ் சிறு செய்திகள்

### இன்று விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் இன்று காலை 10.00 மணிக்கு யாழ். மாநகர சபை முதல்வரின் அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே சனசமூக நிலையங்கள், பொது அமைப்புக்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரை இக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கேட்டுக்கொண்டுள்ளார். (54)

### செயற்குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் இன்று மு.ப. 10.00 மணிக்கு யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக சங்கத்தின் செயலாளர் கந்தசத்தியதாசன் அறிவித்துள்ளார்.

சைவப்புலவர், இளஞ் சைவப்புலவர் தேர்வு நடத்துவது தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளதால் செயற்குழு உறுப்பினர்களை தவறாது கூட்டத்திற்கு சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (06)

### அரச ஊழியருக்கான ஆக்கத்திறன் போட்டி

(வடமராட்சி)

தேசிய கலாசார அலுவல்கள் அமைச்சினால் அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டி இவ்வாண்டும் நடைபெறவுள்ளது.

இதில் சிறுகதை, பாடல், கவிதை, சிறுவர் கதை, குறுநாடகம், சித்திரம் ஆகிய விடயங்களில் போட்டிகள் நடைபெறும்.

எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதிக்கு முன்பாக பிரதேச செயலக கலாசார பிரிவுடன் தொடர்புகொண்டு போட்டியில் பங்குபற்ற முடியும். (116)

### இன்று கொடியேற்றம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெற்று எதிர்வரும் வைகாசி 6 ஆம் திகதி பௌர்ணமியன்று தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

உற்சவ நாட்களில் சு.ஜெயகோபாலசாமியினால் 'உற்சவமும் நாமும்', 'மாரியின் மகிமை', எனும் விடயங்கள் பற்றி மாலை 6.00 மணிக்கு தொடர் சொற்பொழிவு இடம்பெறும். (116)


## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்


சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1350)

### கணினி திருத்தம்
(Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன. அழையுங்கள் 0779086737 (C/1351)


## மிருதங்க அரங்கேற்றம்



(யாழ்ப்பாணம்)

கலாபூஷணம் மா.சிதம்பரநாதனின் மாணவனும் சோமராஜ் ஜெயந்தா தம்பதியரின் புதல்வனுமான செல்வன் சோ.நிலோத்தமனின் மிருதங்க அரங்கேற்றம் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு இன்று பி.ப. 2.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயர் சு.ஜெபநேசன், பேராசிரியர் கா.குகபாலன், வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (06)

நல்ல குறிக்கோளை அடைவதற்காகத் தொடர்ந்து முயலும் மனிதனின் செயற்பாடே பிற்காலத்தில் அனைவரும் படிக்கும் வரலாறாக மாறுகிறது.
-கார்ல் மார்க்ஸ்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## புலம்பெயர்ந்தோர் பிரச்சினை!

இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் புலம்பெயர்ந்து சென்று வெளிநாடுகளில் உள்ள தமிழர்களின் எண்ணிக்கை இன்று பத்து லட்சத்தைத் தாண்டிவிட்டதாகச் சொல்கிறார்கள். அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் மனிதவளம் பற்றாக்குறை என்பதால் வந்தாரை வரவேற்கும் பண்பை அந்நாடுகளில் சட்டமாகவும் இயற்றி வைத்திருக்கிறார்கள்.

இதுதவிர, பல்லின மக்களின் கூட்டுவாழ்க்கை சார்ந்த மானுட இலட்சியமும் இந்த வரவேற்புக்குக் காரணம். வெவ்வேறு மக்கள் குழுக்களின் கலாசாரத்தை, மனிதப் பழக்கங்களை, வாழ்க்கை முறைகளை ஒருங்கிணைத்த வானவில் அழகை உருவாக்குவது மனித மேன்மையாகப் பார்க்கப்படுகிறது.

எனவே புலம்பெயர்ந்து செல்பவர்கள் வரவேற்கப்பட்டார்கள். சொந்த நாட்டில் நன்கு வாழமுடியாது என நினைத்தவர்களுக்கு இந்த மேற்கு நாடுகள் சொர்க்கமாக தோன்றியது. இங்கிலாந்தில் இருந்து வந்தவர்கள் உருவாக்கிய நாடு அமெரிக்கா. எனவே அந்த நாடு வேற்று நாட்டினர் வருகையைத் தடுக்கவில்லை. வருடா வருடம் 'கிறீன் கார்ட்'களை வழங்கியது.

பிரச்சினைக்குப் பின்னர் நம்மில் பெரும்பான்மையோரைத் தாங்கிக் கொண்டது கனடா. அதற்கு முன்பே சீனர்கள் சென்றுவிட்டார்கள். வருடத்திற்கு இத்தனை பேர் என்று கட்டாய வரவேற்பளிக்கிறது அந்த நாடும்.

அடுத்த சொர்க்கம் ஐரோப்பா. வந்தேறிகள் என்று ஒதுக்காமல் உரிமைகளும் சலுகைகளும் வழங்கும் தாராளமான சட்டங்கள் அங்கு அமுலில் உள்ளன. மொத்த மக்கள் 73 கோடியில் பத்து சதவீதம் புலம்பெயர்ந்து சென்று குடியேறியோர்தான். நான்கு கோடி மக்கள் வசிக்கும் ஸ்பெயினில் 14 சதவீதத்துக்கு மேல் வெளிநாட்டினர்.

ஐரோப்பிய நாடுகளின் சராசரி சனத்தொகை எட்டு கோடிக்குக் கீழே என்பதால் பரவலாக நடமாடும் வெளிநாட்டினர் பளிச்சென்று தெரிகிறார்கள். இது இப்போது அங்கு நெருடலை உருவாக்கியிருக்கிறது.

சமீபகாலமாக, வந்து குடியேறிய வெளிநாட்டினருக்கு எதிரான உணர்வு பரவுவதை அறிய முடிகிறது. "வேறுபட்ட கலாசாரங்களைச் சேர்ந்தவர்கள் மகிழ்ச்சியுடன் சேர்ந்து வாழ முடியும் என்ற நம்பிக்கை பொய்த்துவிட்டது" என ஜேர்மனி அதிபர் ஏஞ்சலா மோர்கல் 2010 இல் பிரகடனம் செய்தார்.

"வெவ்வேறு கலாசாரங்களை சேர்ந்தவர்கள் இங்குள்ள மக்களுடன் இணைந்துவாழ அரசு அளித்த ஊக்கம் வீணாகிப் போனது; வந்தவர்கள் தமக்குள் ஒன்று சேராமலும் தேசிய நீரோட்டத்தில் இணையாமலும் தீவுகளாகிவிட்டனர்" என்கிறார் இங்கிலாந்துப் பிரதமர் டேவிட் கமரூன்.

பிரான்சில் வெளிநாட்டினர் எண்ணிக்கை அதிகமாகி விட்டதாக ஜனாதிபதி நிக்கலஸ் சர்கோசி பேசியிருக்கிறார். நாட்டின் ஜனாதிபதி இப்படிப் பேசுகிறாரே என்று முன்புபோல் அங்கு யாரும் அதிர்ச்சி அடையவில்லை. தேர்தலில் சர்கோசி மீண்டும் போட்டியிடுகிறார். வெற்றி பெற்றால், வெளிநாட்டினர் எண்ணிக்கை பாதியாகும் என வாக்குறுதி அளித்துள்ளார்.

வெளிநாட்டினர் வேலைவாய்ப்புகளை பறிப்பதாக அமெரிக்கர்கள் நினைப்பதுபோல் ஐரோப்பியர்கள் கருதவில்லை. ஆனால், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு இவர்கள் எந்த வகையிலும் பங்களிக்கவில்லை என்கின்றனர். சுகாதாரம், வாழ்க்கை முறை, விதிகளை மதிப்பது, உள்ளூர் கலாசாரத்தை சுவீகரிப்பது போன்ற பல விஷயங்களில் குடியேறிகள் அந்நியர்களாகவே தொடர்வதாக குறை சொல்கின்றனர்.

வலதுசாரிகள் மட்டும் சொல்லிக் கொண்டிருந்ததை இப்போது ஏனைய தலைவர்களும் எதிரொலிக்க ஆரம்பித்திருப்பது ஐரோப்பாவில் அமைதியற்ற சூழ்நிலை உருவாவதற்கான அறிகுறி. அந்தக் கண்டத்துடன் இது நின்றுவிடப் போவதில்லை.

# தமிழ் மொழியில் முறைப்பாடுகள் பதிவு யாழ்.பொலிஸ் நிலையங்களில் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பிற்கமைய யாழ்.மாவட்டத்தில் அமைந்திருக்கும் அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் தமிழ் மொழி மூலம் முறைப்பாடுகளைப் பதிவு செய்யக்கூடிய தமிழ் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக யாழ்.பொலிஸ் பெறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்துள்ளார்.

நேற்று முற்பகல் அமைச்சரின் யாழ்.அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு யாழ்.மக்களுக்கான பொலிஸ் சேவை குறித்தும், குற்றச் செயல்கள் குறித்தும் கருத்துத்தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இந்த பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வருட முற்பகுதியில் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றின் போது யாழ்.பொலிஸ நிலையங்களில் தமிழ் மொழி மூலமாக முறைப்பாடுகள் பதிவு செய்யப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு பொதுமக்களால். முன்வைக்கப்பட்டிருந்தது. இதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமிழ் மொழியில் முறைப்பாடுகளைப் பதிவு செய்யவல்ல தமிழ்ப் பொலிஸாரை யாழ். பொலிஸ் நிலையங்களில் நியமிக்கும்படி பணித்தார். இதற்கமயவே தற்சமயம் அவ்வாறு தமிழ் மொழி பொலிஸார் நியமிக்கப்பட்டிருக்கின்றனர் என்று தெரிவித்தார்.

அவ்வாறு பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழி மூலம் முறைப்பாடுகள் எடுக்காத பொலிஸ நிலையங்கள் குறித்து தம்மிடம் தெரியப்படுத்தினால் அதற்குரிய நடவடிக்கை எடுப்பதாகவும அவர் உறுதியளித்தார்.

அடையாள அட்டை தொலைந்தவர்கள் மேலும் முறைப்பாடு எடுப்பதற்கு தட்டச்சு செலவாக 300 ரூபா செலுத்தத் தேவையில்லை அதனை அந்தந்த பொலிஸ் நிலையங்களே பெறுப்பேற்கும் எனவும் யாழ்.பொலிஸ் நிலையப் பெறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (பா)

## வலயமட்டத்தில் முன்னணி யோகபுரம் பாடசாலைக்கு பாராட்டு

(சுன்னாகம்)

துணுக்காய் கல்வி வலயம் பாடசாலைகளில் யோகபுரம் மகா வித்தியாலம் கல்விப் பொது சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் முன்னணியில் திகழ்கிறது.

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. (சா/த) பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியா கிய நிலையில் துணுக்காய் வலயத்தில் இருபதி ற்கும் மேற்பட்ட மாணவர்கள் உயர்தர வகுப்பு கற்பதற்குரிய உயர் பெறுபேறுகளைப் பெற்றுள்ளமை குறிப் பிடத்தக்கது.

ஆங்கில பாடத்தில் பத்து மாணவர்கள் சித்தியடைந்துள்ளமை மற்றுமொரு அம்சமாகும். இப்பாடசாலையில் உயர்தர கணித, விஞ்ஞான வகுப்புக்களை ஆரம்பிப்பது பற்றி இம்மாத ஆரம்பத்தில் சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்கள், மாணவர்கள் துணுக்காய் கல்விப் பணிப்பாளரைச் சந்தித்து கலந்துரையாடினர். இதேவேளை, ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் இப் பாடசாலை இணைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (148)

## பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

ஐந்து சந்திப்பகுதியில் கஞ்சா வைத்திருந்த நபரை 10 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல யாழ்.நீதவான் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

குறித்த இளைஞர் அண்மையில் யாழ்ப்பாணப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

மேற்படி வழக்கினை நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட யாழ். நீதவான நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா மேற்படி இளைஞருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறும் உத்தரவிட்டார். (எஸ்)

## ஷில்ப - 2012 தேசிய கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் நெறிப்படுத்தலின் கீழ் 'ஷில்ப -2012' இற்கான தேசிய கண்காட்சியும் வர்த்தக சந்தையும் ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்படவுள்ளதாக கைத்தொழில் அபிவிருத்திச் சபை அறிவித்துள்ளது.

இக் கண்காட்சிக்காக சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிற்துறை சுயதொழில் முயற்சியாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கைத்தொழில் துறையில் முக்கியமாக 15 துறைகளின் கீழ் இவ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை யாழ். மாவட்ட செயலகத்திற்கு அருகில் அமைந்துள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபை கட்டடத்தில் அமைந்துள்ள கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பப்படிவங்களை மே மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் முழுமையாகப் பூரணப்படுத்தி அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி ஆரம்பிக்கும் இக் கண்காட்சி 31 ஆம் திகதி மற்றும் செப்ரெம்பர் 1, 2 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளது.

இத் தேசியக் கண்காட்சியில் ஜனாதிபதி விருதுக்குத் தகுதி பெறும் தொழில் முயற்சியாளர்கள் மாகாணம் மற்றும் மாவட்டத்திற்குத் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை அறிவித்துள்ளது. (எஸ்)

## காணாமற்போனோர் விவகாரம் இந்தியக்குழு கவனம் செலுத்தாதது ஏன்?

(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டு இலங்கை வந்த இந்திய எம்.பி.க்கள் குழு, எம்மை ஏன் சந்திக்கவில்லை என்று காணாமற்போனோரை தேடியறியும் குழு, கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பில் அவ்வமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

காணாமல் போனோர் தொடர்பான விடயமே தமிழ் மக்களை வாட்டி வதைக்கும் மிகப்பெரிய பிரச்சினையாக இன்று உள்ளது. எந்தவொரு தூதுக்குழுவினரிடமும் மக்கள் அதனையே கேட்கின்றனர். அண்மையில் இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய நாடாளுமன்றக் குழுவிடமும், காணாமல் போன தமது உறவுகளையே அம்மக்கள் கேட்டுள்ளனர்.

காணாமல் போனோரை தேடியறியும் குழு, காணாமல் போனவர்கள் தொடர்பாக பல போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. எம்மிடம் 5000 இற்கும் மேற்பட்ட காணாமல் போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகள் உள்ளன.

இந்திய எம்.பி.க்கள் குழு, எமது அமைப்புடன் இந்த விடயம் தொடர்பாக எதுவித கலந்துரையாடலையும் நடத்த முன்வராதது எமக்கு வியப்பை அளிக்கின்றது. தமிழ் மக்களின் துயரங்கள் ஏன்ன என்று அறிவதற்காகவே தாம் இலங்கை வந்ததாக இந்திய நாடாளுமன்றக் குழுவினர் தெரிவித்திருந்தனர். உண்மையில் தமிழ் மக்களின் விடயங்களில் இந்தத் தூதுக் குழுவிற்கு அதிக அக்கறை இருக்குமானால் அவர்கள் எமது அமைப்புடனும் ஏனைய மனித உரிமை அமைப்புக்களையும் அழைத்து சந்திப்பை ஏற்படுத்தியிருப்பார்கள்.

ஆனால் அவர்கள் அதனைச் செய்யவில்லை. எனவே வழமை போன்று இலங்கை அரசாங்கத்தை காப்பாற்றும் முயற்சியாகவே. இந்த தூதுக்குழுவின் வருகையும் நடந்துள்ளது என்பதாகவே நாம் எண்ண வேண்டியுள்ளது. காணாமல் போனோரை தேடியறியும் குழு, தொடர்ந்தும் காணாமல் போனவர்கள் தொடர்பான போராட்டங்களை எதிர்காலத்தில் மேற்கொள்ள உள்ளது. அரசாங்கம், காணாமல் போனவர்கள் தொடர்பாக காத்திரமான பதிலை முன்வைக்கும் வரை எமது போராட்டம் தொடரும். அதேவேளை, அரசியல் கைதிகள் தொடர்பாகவும் நாம் போராட்டங்களை முன்னெடுக்க உள்ளோம் என்று காணாமல் போனோரை தேடியறியும் குழுவின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# சேமிப்பு பலமானால் வாழ்வு சிறப்படையும்

(புத்தூர்)

எதிர்காலம் சிறப்பானதாக அமைய வேண்டுமாக இருந்தால் எமது சேமிப்புக்கள் பலமானதாக அமைய வேண்டும் என்று புத்தூர் கலைமதி சனசமூக நிலையத்தின் போசகர் செல்வம் கதிர்காமநாதன் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி மற்றும் இதர வங்கியின் ஏற்பாட்டில் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் மகளிர் குழுக்களுக்கான கடன் வழங்கல் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் கலைமதி மக்கள் பொதுமண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



மேலும் அவர் தெரிவிக்கையில், ஆரம்ப காலங்களில் எங்கள் கிராமம் ஒரு பின்தங்கிய நிலையில் காணப்பட்டது. இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளையினர் எமது கிராமத்தை இலங்கை வங்கி எழுச்சிக் கிராமமாக மாற்றி இங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியிருக்கிறார்கள். இதற்காக இலங்கை வங்கியின் முகாமையாளர் புவனேந்திரனிற்கு எமது கிராமம் கடமைப்பட்டுள்ளது என்றார்.

இன்று இலங்கையின் பொருளாதாரம் ஒரு ஸ்த்திரம் அற்ற தன்மையில் காணப்படுகின்றது. பண வீக்கம், விலையேற்றம் போன்ற காரணிகள் இலங்கையின் பொருளாதாரத்தில் பெருமதாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. இதனால் இன்னும் இரண்டு வருடங்களில் சோமாலியா, உகண்டா போன்ற நாடுகளைப் போன்ற நிலை இங்கும் ஏற்படலாம். இதனால் எமது எதிர்காலத்திற்கான சேமிப்பை 'இன்றே நாங்கள் ஆரம்பிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

கலைமதி சனசமூக நிலையத்தால் க.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கருத்துரைகளை இலங்கை மத்திய வங்கியின் வறுமை ஒழிப்புத் திட்ட அதிகாரி ரமேஸ் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினார். தொடர்ந்து மகளிர் குழுக்களுக்கான கடன் வழங்குவது தொடர்பான நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு இந்த நிர்வாகத்தின் மூலம் பெண்களின் வாழ்வாதாரம் மேம்படுத்த முடியும் என்று இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. (02)

## வான் மோதி சிறுமி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஹயஸ் வான் மோதியதில் சிறுமி படுகாயம் அடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உரும்பிராய் கிருஸ்ணர் கோவிலடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை 6 மணிக்கு தனது வீட்டிலிருந்து முன்னால் உள்ள வீட்டிற்குச் சென்ற பி.சுதா நிலா (வயது-5) என்ற சிறுமியே படுகாயம் அடைந்துள்ளார்.

ஹயஸ் வான் சாரதி யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றார். (எஸ்)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 17ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா நடைபெற்று வருகின்றது.

இதில் எதிர்வரும் மே மாதம முதலாம் திகதி கைலாயவாகனமும், 2ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 3 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 4ஆம் திகதி காலை இரதோற்சவமும், மறுநாள் காலை தீர்த்தோற்சவமும், மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது.

## மதுபோதையில் கலாட்டா 7000 ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் வீதியில் நின்று போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த நபருக்கு 7 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு யாழ்.நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

நாவாந்துறையைச் சேர்ந்த இளைஞரே யாழ்.பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார். அபராதம் கட்டத் தவறிய பட்டசத்தில் 2 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தார். (எஸ்)

## இணக்க முயற்சிகளில் சமாதான நீதவான்கள்

(யாழ்ப்பாணம்)

ஆலய நிர்வாகங்கள் மற்றும அமைப்புகளில் ஏற்படும் சிக்கல்களினைத் தவிர்க்க இணக்க முயற்ச்சிகளில் சமாதான நீதவான்களின் சங்கம் நல்லிணக்க அடிப்படையில் ஈடுபட்டு வருகின்றது.

இத்தகைய முயற்சியின் அடிபபடையில் அண்மையில் யாழ்.ஈச்சமோட்டை - கலட்டிப் புலம் அருள்மிகு ஸ்ரீஞானவைரவர் தேவஸ்தான பரிபாலன சபைக்கு எதிராக சமதான நீதவான்கள், மனித உரிமைகள் அமைப்புக்கு உபயகாரர்களினால் கொடுக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பாக உபயகாரர்களுடன் ஆலய பரிபாலன சபையுடனும் கலந்துரையாடி சமரச இணக்கப்பாட்டினை சமாதான நீதவான்களின், மனித உரிமை அமைப்பு ஏற்படுத்தியிருந்தது.

மேலும் இவ்வாலய கும்பாபிஷேக கணக்கு விபரங்கள் சம்பந்தமாகத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பாக கும்பாபிஷேக கணக்கு சம்பந்தமாகக் கலந்துரையாடல் மேற்கொளளவதற்காக யாழ்.ஈச்சமோட்டை கலட்டிப்புலம் அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான பரிபாலன சபையினால் விசேட பொதுச் சபைக் கூட்டத்திற்கு இன்று ஞாயிற்றுக்கிழமை 2.30 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (42)

## பயணிகள் பேருந்துச் சேவை மருதங்கேணிக்கு வேண்டும்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து போதிய பேருந்துச் சேவைகள் கிடைக்கப்பெறுவதில்லை என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஆழியவளை, கட்டைக்காடு ஆகிய இடங்களுக்கு யாழ். இ.போ.ச. பேருந்துச் சேவை, யாழ்.தனியாா பேருந்துச் சேவை ஒழுங்காக நடைபெறாததால் பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் தூர இடங்களுக்குச் சென்று தமது தேவைகளைக் கவனிக்க முடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் யாழ்.மருதங்கேணி பேருந்துச் சேவையை சீராக்கித் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (100)

## புதிய தொழிற்பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் "திவிநெகும" திட்டத்தில் புதிய தொழிற் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கைத்தொழில் அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

10 இலட்சம் ரூபா செலவில் நடத்தப்படவுள்ள மனைப் பொருளாதார அலகுகளை உருவாக்குதல், தேசிய வேலைத் திட்டத்தில் முக அலங்காரம் மற்றும் பனைசார் உற்பத்திக் கைவினைப் பொருட்கள் உற்பத்தி ஆகிய நெறிகள் என்பன ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறிகள் இந்த மாதத்தின் இறுதி வாரத்தில் யாழ். நகரை அண்மித்த பகுதியில் ஆரமபிக்கப்படவுள்ளதாகவும், ஆரம்பிக்கும் திகதிகள், நேரம் என்பன பின்னர் அறிவிக்கப்படுமெனவும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் முகாமையாளர் தொவித்துள்ளார்.

அதேவேளை, உணவுசார் உற்பத்தி மற்றும் தையல் பயிற்சி நெறிகள் முடிவடைந்துள்ள வேளையில் அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் அண்மையில் இடம்பெறவுள்ளதாகவும் முகாமையாளர் மேலும் தெரிவித்தார். (எஸ்)

## உலகத் தமிழ் இலக்கிய மாநாடு

(யாழ்ப்பாணம்)

கொழும்புத் தமிழ்ச் சங்கம் தனது 70 ஆம் ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு இவ்வாண்டு யூன் மாதம் 2, 3, 4 ஆம் திகதிகளில் உலகத் தமிழ் இலக்கிய மாநாடு ஒன்றை நடத்தவுள்ளது.

இம்மாநாட்டின் முன்னோடி நிகழ்ச்சியாக நவீன தமிழ் இலக்கியப் போக்கின் திருப்புமுனையாக அமைந்த மகாகவி பாரதியாரைக் கௌரவிக்கும் வகையில் பாரதி விழா ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை பாரதியார் சங்கத்துடன் இணைந்து நடத்தப்படும் மேற்படி பாரதி விழா எதிர் வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி தமிழ்ச் சங்க மண்டபத்தில் இடம்பெறும்.

மாநாட்டு ஆய்வரங்குகளில் சமர்ப்பிக்கவென சிறுவர் இலக்கியம், புனைக்கதை, கவிதை, கட்டுரை, ஆவணப்படுத்தல், விமர்சனம், நிகழ்த்து கலைகள் இலக்கியக் கோட்பாடுகள், பெணணியம் இதழியல், இணையமும் வலைப்பதிவுகளும் முதலான விடயங்கள் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

ஆய்வாளர்கள் தாம் சமர்ப்பிக்க விரும்பும் ஆய்வுக் கட்டுரையின் சுருக்கத்தை 300 சொற்களுக்கு மேற்படாத வகையில் எழுதி அனுப்பி வைக்க வேண்டும்.

இம்மாநாட்டில் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. இம்மலருக்கு கட்டுரை சமர்ப்பிக்க விரும்புவோர் மாநாட்டின் தொனிப்பொருளுக்கு அமைய மேற்குறிப்பிட்ட விடயப்பரப்புக்களில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து எழுதலாம். இவற்றை இம் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவகையில் கட்டுரைகளைத் தட்டச்சுச் செய்து மின்னஞ்சலில் அனுப்ப வேண்டும். மலரில் கட்டுரை இடம்பெற்றால் கட்டுரையாளருக்கு மலரின் பிரதியும் சான்றிதழும் அனுப்பி வைக்கப்படும்.

கட்டுரைகள் அனுப்புவதற்கான முகவரி இலக்கியக் குழுச் செயலாளர், 7, 57 ஆவது ஒழுங்கை, கொழும்பு-6. மேலதிக விபரங்களுக்கு sangamconference 2012@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலமும், 0777306506 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலமும் தொடர்பு கொள்ள முடியும். (44)

## கணக்காளர் சேவை போட்டிப் பரீட்சைக்குத் தயாராகுதல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கணக்காளர் சேவை நியமனத்துக்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ளது.

இதற்கான பயிற்சி வகுப்புக்கள் இலங்கை கணக்காளர் சேவை கணக்காளரினால் சனி, ஞாயிறு பொதுவிடுமுறை நாட்களில் யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறை வீதியில் உள்ள செங்குந்தா இந்துக் கல்லூரியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இதில் கணக்காளர் நியமனத்துக்கு விண்ணப்பித்தவர்கள் இவ்வகுப்புக்களில் கலந்துகொள்ள முடியும் என விவசாய அமைச்சின் வடமாகாண பிரதம கணக்காளர் என்.இராசநாயகம் அறிவித்துள்ளார்.

## கஞ்சா வேட்டை



(சுன்னாகம்)

சுன்னாகத்திற்கும், கந்தரோடைக்கும் இடைப்பட்ட பகுதியில் பொலிஸாரினால் கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டது.

சுன்னாகம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்படி கஞ்சா நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டதுடன், சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டார்கள்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜி.டி.ஆர்.கங்கநாத் தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினரே கஞ்சாச் செடிகளுடன் சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர். (148)

# அடிப்படை கட்டுமானங்களை ஆரம்பித்து வைத்தார் அமைச்சர்



(இளவாலை)

இளவாலை சேந்தான்குளம் பகுதியின் அடிப்படைகட்டுமானப் பணிகளை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் சம்பிரதாயப்பூர்வமாக தொடக்கிவைத்தார்.

மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக சேந்தான் குளம் பகுதிக்கு நேற்றைய விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அவர்கள் கட்டுமானபபணிகளை ஆரம்பித்து வைத்தார்.

சேந்தான்குளம் கடற்கரைப் பகுதியில் படகு இறங்கு துறைக்கேற்ற வகையில் ஆழமாக்கும் பணியினை தொடக்கி வைத்ததுடன் அப்பகுதியில் புதிதாக அமையப் பெறவுள்ள மீன்களுக்கான ஏலம் கூறும் நிலையக் கட்டிடத்திற்கான அடிக்கல்லையும் நாட்டிவைத்ததுடன், இளவாலை காங்கேசன்துறை பிரதான வீதியிலிருந்து கடற்கரைக்குச் செல்லும் வீதியின் புனரமைப்புப் பணிகளையும் தொடக்கி வைத்த அமைச்சர் அவர்கள் அங்கு புதித்ாக அமையப்பெறவுள்ள பொது நோக்கு மண்டபம் மற்றும் படகு திருத்தும் நிலையம் ஆகிய வற்றுக்கான அடிக்கற்களையும் நாட்டி வைத்தார்.


அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் முயற்சியின் பலனாக 12.5 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்படவுள்ள மேற்படி வேலைத்திட்டங்களை அவுஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் ஐ.ஓ.எம் நிறுவனம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

சேந்தான்குளம் மீனவர்களுக்கான சமூகப் பொருளாதார அபிவிருத்தித் திட்டத்திற்கு அமைய வலிவடக்குப் பிரதேச செயலகத்தின் வழிகாட்டலுடன் இத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

1990ம் ஆண்டு இடம்பெயர்ந்த இப்பகுதி மக்கள யுத்தம் முடிவுக்கு வந்துள்ள நிலையில் மீண்டும் தமது சொந்த இடங்களில் கடந்த ஆண்டு முதல் மீளக்குடியேறி வருகின்றனர்.

இதுவரையில் 107 குடும்பங்கள் மீளக்குடியேறி வாழ்ந்து வரும் நிலையில் அம்மக்கள் தாம எதிர்நோக்கி வரும் தற்காலிக மற்றும் நிரந்தர வீட்டுத் திட்டம் மின்சாரம் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகள் தொடர்பாக தமது கோரிக்கைகளை முன்வைத்தனர்.

அவை தொடர்பில் ஆராய்ந்தறிந்து கொண்ட அமைச்ர் அவர்கள் கோரிக்கைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதாக உறுதிமொழி வழங்கினார். இதன்போது வலி வடக்கு பிரதேச செயலர் சிறீமோகனன் பிரதேச உதவி திட்டமிடல் பணிப்பாளர் சிவகுமாரன ஈ.பி.டி.பி.யின் வலி.வடக்கு பிரதேச இணைப்பாளர் அன்பு உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



கொக்குவில் சத்திய சாயி சேவா நிறுவனத்தினர் புதுவருட தினத்தையொட்டி ஆனைக்கோட்டை முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்திற்கு உடு புடவைகள் வழங்கும் நிகழ்வு முதியோர் சங்க தலைவர் கீதபொன்கலன் தலைமையில் இடம் பெற்ற போது சாயி நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் முதியோர்களுக்கு உடுபுடவை வழங்குவதைக் காணலாம். (104)

# வீதியில் குவியும் திண்மக்கழிவுகள் பாதசாரிகளுக்கு தினசரி துன்பம்

## பிரதேச சபையின் கண்களில் மண்

(கொக்குவில்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட அம்பட்டப்பாலச் சந்தியில் குப்பைகள் மற்றும் துர்நாற்றம் வீசக்கூடிய கழிவுப் பொருட்கள் குவிக்கப்பட்டிருப்பதால் அப்பகுதிகளில் பயணிக்கும் மக்கள் சுகாதார மற்றும் விபத்துச் சம்பவங்களையும் எதிர்நோக்க வேண்டியிருப்பதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

நந்தாவில் அம்மன் கோயிலின் மேற்குப்புறமாகவுள்ள வீதியும் ஆடியபாதம் வீதியும் சந்திக்கும் இடத்தி லேயே பெருமளவு குப்பைகள் கொட்டப்பட்டிருப்பதுடன் துர்நாற்றம் வீசக்கூடிய கழிவுப் பொருட்களும் கொட்டப்பட்டுள்ளன.

பெருமளவு மக்களினதும் அப்பகுதி பிரதேச சபை உறுப்பினர்களதும் போக்குவரத்துப் பாதையாக விளங்கும் இப்பகுதிகளில் பெருமளவான குப்பைகள் கொட்டப்பட்டு வீதியில் சிதறுண்டு கிடப்பது எவர் கண்ணிலும் படவில்லையா என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இக்கழிவுப்பொருட்களை அவ்விடத்தில் கொட்டுவது அப்பகுதியை அண்மித்த மக்களே கொட்டுவதாகவும் இதனால் ஏற்படப்போகும் அவலம் காரணமான சுகாதார சீர்கேட்டையும் விபத்துக்களையும் அவர்கள் சிந்திப்பதாக தெரிவிக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதே வேளை ஏற்கனவே பிரதேச சபையினால் குப்பைகள் கொட்டுவதற்கென்று அறிவிக்கப்பட்டிருந்த இடங்களில் தற்போது குப்பை கொட்ட வேண்டாம் என பிரதேசசபைத் தலைவர் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் குப்பை கொட்டுவதற்கு என அறிவிக் கப்பட்டிருந்த இடங்களில் குப்பை கொட்டுவதற்குத் தடை என விளம்பரப் பலகைகள் அமைத்து மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டுமென பிரதேச மக்கள் பிரதேச சபையினருக்கு சுட்டிக் காட்டியுள்ளனர்.

# முதலாம் இடம்

(வடமராட்சி)

பருத்தித்துறை பல.நோ.கூ. சங்கம் கடந்த வருடம் 2011 ஆம் ஆண்டில் புதிய அங்கத்தவர்களாக 1230 பேரை இணைத்துக் கொண்டதில் இச்சங்கம் யாழ்.மாவட்டத்தில் முதலாமிடத்தை பெற்றுக் கொண்டுள்ளது.

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையளாரினால் பிரகடனப்படுத்தப்பட்டதை அடுத்து மேற்குறித்த புதிய அங்கத்தவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

இதனை அடுத்து இச்சங்கம் இவ்விடத்தில் முதல் சங்கமாக திகழ்ந்துள்ளது. மேலும் இச்சங்கத்திற்கு அண்மையில் ஏற்பட்ட எரிபொருள் விலையெற்றத்தை அடுத்து 10 இலட்சம் ரூபா இலாபமாக கிடைத்துள்ளது. (100)

# கமக்கார அமைப்புக்களின் தேர்தல்கள்

(முழங்காவில்)

பூநகரி பிரதேசத்தில் உள்ள 20 கமக்கார அமைப்புக்களும் எதிர்வரும் 24ஆம் திகதியுடன் கலைக்கப்பட்டு புதிய நிர்வாகிகளைத் தெரிவதற்கான தேர்தல்கள் கட்டம் கட்டமாக நடத்தப்படவுள்ளன.

மே மாதம் முதல் வாரத்தில் இருந்து அவ்வவ் பிரதேசங்களில நடத்தப்படவிருக்கும் தேர்தல் திகதிகள் பூநகரி கமநல சேவை அலுவலர் ந.சுந்தரமூர்த்தி அவர்களால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மே மாதத்தில் தேர்தல் நடை பெறவிருக்கும் கமக்கார அமைப்புக்களின் பெயரும் திகதியும் அறிவிக்கப்படுகின்றது.

3.05.2012இல் நேரடம்பன் கமக்கார அமைப்பு, 10.2012இல் முக்கொம்பன் கமக்கார அமைப்பு, 14.05.2012இல் சின்னப்பல்லவராயன்கட்டு கமக்கார அமைப்பு, 17.05.2012இல் சாமிப்புலம் கமக்கார அமைப்பு, 21.5.2012இல் நல்லூர் கமக்கார அமைப்பு, 28.05.2012இல் ஆலங்கேணி கமக்கார அமைப்பு, 31.05.2012 இல் கொல்லகுறிச்சி கமக்கார அமைப்பு. ஏனைய 13 கமக்கார அமைப்புக்களின் தேர்தல்கள் யூன் மாதம் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (112)

# கூட்டுறவு தினத்தை முன்னிட்டு அங்கத்தவர்களுக்கு நிரந்தர வீடுகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பாக கூட்டுறவு ஆணையாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அறிவுறுததல்களை அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த வருடம் நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டுத்திட்டத்தை போன்று இவ்வருடமும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு யாழ்.மாவட்டத்தில் 5 வீடுகளை புதிதாக அமைத்துக் கொடுப்பதற்கும் உறுப்பினர்களின் வீடுகளை புனரமைத்துக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை வடமாகாண பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடவடிக்கை எடுத்துள்ளது.

புதிய 5 வீடுகளை புனரமைப்பு செய்து வருவதற்கு தெல்லிப்பளை, பண்டத்தரிப்பு, காரைநகர், மானிப்பாய், யாழ்ப்பாணம் ஆகிய பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் கடந்த வருடம் சங்கங்கள் மாகாண மட்டங்களில் பங்கு பற்றி வெற்றியீட்டியது போல இம்முறையும் மிகக் கூடுதலான சங்கங்கள் பங்கு பற்றி வெற்றி பெறவேண்டும் எனவும் இதற்கான குழுத்தலைவராக கூட்டுறவு அலுவலர் கி.தயாளன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாவட்ட மட்டத்தை பிரதிபலிக்கக் கூடியதாகவும் உறுப்பினர்களை ஊக்கப்படுத்துவதற்காகவும் பனந்தொழில் வல்லுனர்களுக்கிடையே மரம் ஏறும் போட்டியை நடத்தி அவர்களை கௌரவிப்பதென மற்றும் அங்கத்தவர்களை கூடுதலாக சங்கத்தில் இணைத்துக் கொள்ளுதல், கிரிக்கற் போட்டி, மரம் நடுகைத் திட்டம், சித்த மருத்துவ மூலிகை உற்பத்திகளை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# முரசின் இன்றைய பலன்

(12.04.2012 - ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் சித்திரை மாதம் 10 ஆம் திகதி. பிரதமை முற்பகல் 3.22 வரை.
நட்சத்திரம் பரணி பின்னிரவு 3.19 வரை. சித்தயோகம், சித்தப்பரணி
இராகுகாலம் 4.30 - 6.00 வரை. சுபநேரம் 9.00 - 10.30 வரை.
எமகண்டம் 12.00 - 1.30 வரை. குளிகைகாலம் 3.00 - 4.30 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | உறவினர் சகாயம், நிதானமும் எச்சரிக்கையும், உறவினருடன் அனுசரி, பிரயாணங்கள். |
| ரிஷபம் | தானதர்ம ஈடுபாடு, சொத்துகள் சேரும், இருப்பிட சௌகர்யம், குடும்பத்தில் ஒற்றுமை. |
| மிதுனம் | மனதிருப்தி, பிணைபோக வேண்டாம், அவதானம் வேண்டும், இடமாற்றம் வரும். |
| கடகம் | மதிப்பு உயரும், விருந்துபசாரங்கள், உறவினர் அனுசரணை, பொன்பொருள் சேரும். |
| சிம்மம் | அரசாங்க நன்மை, உடல்ஆரோக்கியம், சகோதர வழியில் உதவிகள், வாழ்கையில் முன்னேற்றம். |
| கன்னி | முன் தினம் போல் அவதானம் நன்று, தொழிலில் முன்னேற்றம், பெற்றோரால் உதவி. |
| துலாம் | எதிலும் இழுபறி, முன்னேச்சரிக்கை அவசியம், மறைமுக எதிர்ப்புகள், குடும்பத்தில் குழப்பம். |
| விருச்சிகம் | சிறு பயணம், குடும்பச்சொத்து தேடிவரும், திடீர் தனவரவுகள், பயண அலைச்சல். |
| தனுசு | ஸ்திரிகளால் நன்மை, உடல் உபாதைகள், பதவி உயர்வு கிட்டும், குடும்பத்தில் இணக்கம். |
| மகரம் | போட்டிகள், தொழில் வளம் பெருகும், நினைத்த காரியம் நிறைவேறும், உறவினர் உதவுவார். |
| கும்பம் | எதிரிகளால் தொல்லை, வருவாயில் உதவி, காரியனுகூலம், பொன்பொருள் சேரும். |
| மீனம் | இருப்பிட வசதிகள், சுபகாரியங்கள் கைகூடும, முன்னெச்சரிக்கை அவசியம், பிரச்சினைகள் தீரும் |

## தோல்வி வேதனை

இரண்டாவது சுற்று ஆட்டத்தில் ஏற்பட்ட தோல்வி மிகுந்த வேதனை அளிக்கிறது என இந்தியாவின் பட்மின்ரன் வீராங்கனை சாய்னா நேவால் தெரிவித்தார். இருப்பினும் அடுத்து வரும் தொடர்களில் சிறப்பான முறையில் ஆடி வலுவான ஆட்டத்த திறனைப் பெற்றுக் கொள்வேன் எனவும் தெரிவித்தார்.

## முன்பள்ளி விளையாட்டு

(ஊரெழு)

ஊரெழு பாரதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறும்.

பாரதி சனசமூக நிலையத் தலைவர் முருகன் சுவீந்திரநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலி. கிழக்குப் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும், வலி. கிழக்கு ஈ.பி.டி.பி. இணைப்பாளருமான இ. ஐங்கரன் கலந்து கொள்கிறார்.

(135)

## விளையாட்டைத் தடுத்த உபாதை

அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர்களான பீற்றர் சிடில் மற்றும் ஜேம்ஸ் பற்றின்சன் இருவரும் உபாதைகள் காரணமாக அவுஸ்ரேலியாவுக்குத் திரும்பியுள்ளனர்.

நாளை ஆரம்பிக்கவுள்ள மூன்றாவது டெஸ்ட் போட்டியில் பங்குபற்றும் உடற்தகுதியை இருவரும் கொண்டிராத காரணத்தினாலேயே இருவரும் அவுஸ்ரேலியாவுக்குத் திரும்பியுள்ளனர்.

முதலாவது டெஸ்ற் போட்டியில் பங்குபற்றிய பீற்றர் சிடில் முதுகு உபாதை குறித்து முறையிட்டதன் காரணமாக இரண்டாவது போட்டியில் பங்குபற்றியிருக்கவில்லை. அத்தோடு முதலாவது போட்டியில் பங்குபற்றிய றயன் ஹரிஸிற்கு இரண்டாவது போட்டியில் ஓய்வு வழங்கப்பட்டது.

இருவரின் இடங்களுக்கும் ஜேம்ஸ் பற்றின்சன் மற்றும் சுழற்பந்து வீச்சாளர் மைக்கல் பியர் ஆகியோர் இரண்டாவது போட்டிக்கு இணைக்கப்பட்டனர். எனினும் இரண்டாவது போட்டியில் பங்குபற்றிய ஜேம்ஸ் பற்றின்சன் போட்டியின் மூன்றாவது நாளில் பந்தொன்றை எல்லைக் கோட்டுக்கு அருகில் இருந்து எறிய முற்பட்டபோது சமநிலை குலைந்ததன் காரணமாக முதுகு உபாதைக்கு உள்ளாகினார்.


இதன் காரணமாக இருவரும் மூன்றாவது போட்டிக்கான அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

## ஒலிபரப்பு உரிமம் வென்றது கூட்டுத்தாபனம்

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள ருவெண்ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுத்தொடரின் உத்தியோகபூர்வ ஒலிபரப்பு உரிமத்தை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் பெற்றுள்ளது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நெடுங்காலமாக கிரிக்கெட் போட்டிகள் உள்ளிட்ட பல விளையாட்டு நிகழ்ச்சிகளை நேர்முக வர்ணனை செய்து நேயர்கள் மத்தியில் அபிமானத்தை வென்றுள்ளதுடன் இந்தத் துறையில் அனுபவம் வாய்ந்ததாகத் திகழ்கிறது.

இம்முறை ஐ.சி.சி. ருவெண்ரி போட்டிகளை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பந்துக்கு பந்து வர்ணனை செய்ய தேசிய வானொலி நடவடிக்கை எடுத்துள்ளது.



ஐ.சி.சி. ருவெண்ரி 20 உலகக் கிண்ண சுற்றுத்தொடர் செப்டெம்பர் மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமாகி ஒக்டோபர் 7ஆம் திகதி வரை இலங்கையில் நடைபெறும். முதலாவது போட்டி செப்டெம்பர் 18ஆம் திகதி அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்தப் போட்டியில் இலங்கை அணி, சிம்பாப்வேயை எதிர்கொள்கிறது.

சுற்றுத்தொடரில் மொத்தமாக 27 போட்டிகள் உள்ளடங்குகின்றன. இந்தப் போட்டிகள் அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானம், கொழும்பு ஆர். பிரேம தாஸ சர்வதேச கிரிக்கெட் மைதானம், கண்டி பள்ளேகல கிரிக்கெட் மைதானம் ஆகியவற்றில் நடைபெற[illegible] முதலாவது அரையிறுதிப் போட்டி ஒக்டோபர் 4ஆம் திகதி யும், இரண்டாவது அரையிறுதிப் போட்டி ஒக்டோபர் 5ஆம் திகதியும் இறுதிப் போட்டி ஒக்டோபர் 7ஆம் திகதியும் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சதம் அடித்ததில் மகிழ்ச்சி

(புதுடில்லி)

ருவென்ரி 20 வரலாற்றில் முதன்முறையாக சதம் அடித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இதனை என்றும் மறக்க முடியாது என இங்கிலாந்து அணியின் அதிரடி வீரர் பீற்றர்சன் தெரிவித்தார்.

ருவென்ரி 20 போட்டியில் சதம் அடிப்பதுஎளிதான காரியமல்ல. முழுத்திறமையை வெளிப்படுத்தி, ஒவ்வொரு பந்தையும் வீணடிக்காமல் ஓட்டங்கள் எடுத்தால் தான், சதம் அடிக்க முடியும்.

இப்போட்டியில் சேவக், ஜெயவர்தனா, ராஸ் டெய்லர் என அடுத்தடுத்து முக்கிய விக்கெட்டுக்கள் சரிந்ததால், என் மீது சுமை அதிகரித்தது. இதனால் எனது விக்கெட்டை பாதுகாத்து திட்டமிட்டு விளையாடினேன். சமீபத்தில் இலங்கையில் நடந்த டெஸ்ட் தொடரில் சிறப்பாக விளையாடியதால், ஐ.பி.எல்., தொடரிலும் சாதிக்க முடிகிறது.

இத்தொடரில் எங்கள் அணியின் இளம் சுழற்பந்துவீச்சாளர் நதீம் சிறப்பாக பந்துவீசி விக்கெட் வீழ்த்துகிறார். இவரது செயற்பாடு அருமையாக உள்ளது. இவர், இந்திய அணியின் சிறந்த சுழற்பந்துவீச்சாளராக வலம் வர அதிக வாய்ப்பு உள்ளது. முக்கிய விக்கெட்டுக்களை விரைவில் வீழ்த்தி, வெற்றிக்கு பக்கபலமாக இருப்பது பாராட்டுக்குரியது.

டெக்கான் அணிக்கு எனது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன். டெக்கான் அணியினர் சிறப்பாக விளையாடிய போதிலும், வெற்றி பெற முடியாதது ஏமாற்றமாக இருக்கும். இது மிக நீண்ட தொடர் என்பதால், விரைவில் எழுச்சி பெற வாய்ப்பு உள்ளது. ஏனெனில் டெக்கான் அணியில் திறமையான வீரர்கள் நிறைய உள்ளனர். அதனைப் பயன்படுத்தி இத்தொடரில் எமது இலக்கை அடைய உறுதியுடன் போராடுவோம். அது எங்களால் முடியும். எனவும் தெரிவித்தார்.



## 20 சத வீத அபராதம்

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் பயிற்றுவிப்பாளர் ஒற்றிஸ் கிப்ஸனுக்கு சர்வதேசக் கிரிக்கெட் சபையால் போட்டி ஊதியத்தில் 20 சதவீத அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போது, நடுவர் மீள்பரிசீலனைத் திட்டம் தொடர்பாக அவர் தெரிவித்த கருத்துக்களுக்காகவே இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சர்வதேசக் கிரிக்கெட் சபை விதிகளின் படி முதலாம் பிரிவு ஒழுக்க விதிகளை ஒற்றிஸ் கிப்ஸன் மீறியுள்ளதாகவும், பொருத்தமற்ற கருத்துப் பரிமாற்றம் என்ற அந்தக் குற்றத்தை ஒற்றிஸ் கிப்ஸன் ஏற்றுக் கொண்டுள்ளதன் காரணமாக அவருக்கு 20 சதவீத தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இத்தொடர் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் ஊடகங்களில் எதிர்மறையான கருத்துக்களை வெளியிடுவதில்லை என வீரர் களும், பயிற்றுவிப்பாளர்களும் ஏற்றுக் கொண்டிருந்ததாகத் தெரிவித்த போட்டி மத்தியஸ்தர் ஜெஃப் குறோ, தனது பிழையை ஒற்றிஸ் கிப்ஸன் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இரண்டாவது டெஸ்ட் போட்டியின் நடுவே கருத்துத் தெரிவித்த ஒற்றிஸ் கிப்ஸன், நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தை சர்வதேசக் கிரிக்கெட் சபை அமுல்படுத்த விரும்பினால் அதைத் தொடர்ச்சியான, ஒழுங்கான முறையில் அமுல்படுத்த வேண்டும் எனத் தெரிவித்ததோடு, நடுவர் மீள்பரிசீலனைத் திட்டம் தொடர்பாகத் தான் தெரிவிக்க விரும்புபவற்றைத் தெரிவிக்க முடியாது எனவும், அவ்வாறு தெரிவித்தால் சர்வதேசக் கிரிக்கெட் சபை தன்னை பதவியிலிருந்து நீக்கவோ அல்லது தடை செய்யவோ அல்லது வேறு ஏதாவதோ செய்யும் என எண்ணுவதாகத் தெரிவித்திருந்தார்.

ஒற்றிஸ் கிப்ஸன் தொடர்பாக முறைப்பாட்டை கள நடுவர்களான மராயஸ் எரஸ்மஸ், இயன் கூல்ட் மற்றும் மூன்றாம் நடுவரான றொனி ஹில் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

## அதிர்ச்சித் தோல்வி


(லண்டன்)

சம்பியன்ஸ் லீக் தொடரின், அரையிறுதியின் முதல் போட்டியில் பார்சிலோனா அணி அதிர்ச்சித் தோல்வியடைந்தது.

சம்பியன்ஸ் லீக் கால்பந்துத் தொடர் அரையிறுதியின் முதல் லீக் போட்டியில் பார்சிலோனா, செல்சியா அணிகள் மோதின. போட்டியின் தொடக்கத்தில் இருந்தே முன்னிலை பெற இரு அணிகளும் போராடின. 45ஆவது நிமிடத்தில் செல்சியாவின் ராமிரெஸ் அடித்து தந்த பந்தை, கோலாக மாற்றினார் துரோபா.

இரண்டாவது பாதியில் இரு அணியினரும் முரட்டு ஆட்டத்தில் இறங்கினர். 28, 86ஆவது நிமிடங்களில் மெஸ்சி அடித்த கோல் வாய்ப்பு வீணானது. முடிவில், 1-0 என்ற கோல் கணக்கில் செல்சியா அணி வெற்றி பெற்றது.

இதனால், நடப்பு சம் பியன் பார்சிலோனா அணி, நாளை மறுதினம் நடக்கும் இரண்டாவது அரையிறுதியில் அதிக கோல் வித்தியாசத்தில் வென்றால் தான், இறுதிப் போட்டிக்கு முன்னேற முடியும்.



## இறுதிச் சுற்றுக்குத் தகுதி

மொனாகோ ரென்னிஸ் போட்டிகளின் இறுதிச் சுற்றுக்கு ஸ்பெயினின் நடால் மற்றும் ஜோகோவிச் தகுதிபெற்றுள்ளார்.

கஸகஸ்தானின் மிகாயல் குக்கியை 2-0 என்ற நேர் செட் கணக்கில் தோற்கடித்து, நடால் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

உபாதைக்குள்ளானதன் பின்னர் ஸ்பெயினின் ரபாயல் நடால் கலந்துகொள்ளும் முதலாவது ரென்னிஸ் போட்டி இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் உக்ரேனின் அலெக்சாண்டர் டொல்கபொலவ்வை, 2-1 என்ற செட் கணக்கில் வென்று கோஜோவிச் இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார். இதில் சம்பியன் பட்டம் வெல்வதே இலக்கு என ஜோகோவிச் தெரிவித்தார்.

## 5 விக்கெட்டுக்களால் பெங்களூர் வெற்றி

(பெங்களூர்)

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கெதிரான போட்டியில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 20 ஓவர்களில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது. டேவிட் ஹசி 41 ஓட்டங்களைப் பெற்றதுடன், அசார் மஹ[illegible] ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் சகீர்கான் மற்றும் அன்று மெக் டொனால்ட் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 164 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 19.3 ஓவர்களில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் அதிரடியாக ஆடிய கிறிஸ் கெய்ல் 56 பந்துகளில் 87 ஓட்டங்களையும், ஏ.பி.டி வில்லியஸ் 39 பந்துகளில் 52 ஓட்டங்கைளையும் பெற்றனர். பந்துவீச்சில் பர்விந்தர் அவானா நான்கு விக்கெட்டுக்களையும், பியுஸ் சல்வா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக கிறிஸ் கெய்ல் தெரிவுசெய்யப்பட்டார்.

## நீக்கப்பட்டார் பிஷே

(போர்ட் ஆப் ஸ்பெயின் )

அவுஸ்ரேலிய அணியுடன் 3ஆவது டெஸ்ட் போட்டியில் மோதவுள்ள மேற்கிந்தியத்தீவு அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. சுழற்பந்து வீச்சாளர் தேவேந்திர பிஷே நீக்கப்பட்டு, கயானாவை சேர்ந்த பட்ஸ்மன் ஆசாத் புடாடின் (26) சேர்க்கப்பட்டுள்ளார்.

சமீபத்தில் நடந்த உள்ளூர் போட்டிகளில் இவர் 576 ஓட்டங்கள் (சராசரி: 48.00) குவித்ததை அடுத்து தேசிய அணியில் வாய்ப்புக்கிடைத்துள்ளது. இந்த வாய்ப்பை சிறப்பான முறையில் பயன்படுத்தி அணியில் தொடர்ந்து இடம்பிடிக்க முயற்சிப்போன் என ஆசாத் புடாடின் தெரிவித்தார்.

அணி விபரம்: டரன் சம்மி (கப்டன்), அட்ரியன் பரத், கார்ல்டன் பாஹ், கிரெய்க் பிராத்வெயிட், டரன் பிராவோ, சந்தர்பால், நரசிங் தியோநரைன், பிடல் எட்வர்ட்ஸ், ஆசாத் புடாடின், கியரான் பாவெல், ரவி ராம்பால், கெமார் றோச், ஷேன் ஷில்லிங்போர்ட்..

# பருத்தித்துறை, யாழ்ப்பாணம் இறுதிப் போட்டியில் மோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டுச் செயலகத்தினால் நடத்தப்படும் பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான மாவட்ட மட்ட கால பந்துத் தொடரின் இறுதிப் போட்டிக்கு யாழ். பிரதேச செயலக அணியும், பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் தகுதி பெற்றுள்ளன.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணியும், கரவெட்டிப் பிரதேச செயலக அணியும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடி ரசிகர்களை மகிழ்வித்தனர். இருப்பினும் யாழ்ப்பாண பிரதேச செயலக அணியின் அற்புதமான ஆட்டத்திற்கு தாக்குப்பிடிக்க முடியாது கரவெட்டி பிரதேச செயலக அணி தோல்வியைச் சந்தித்து. இறுதியில் 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணி இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றது.

இதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியும், கோப்பாய் பிரதேச செயலக அணியும் மோதின.

இதில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## நாளை நெல்லியடியில் பெண்கள் கரப்பந்து

யாழ். மாவட்ட பாடசாலைகள் அணிகளுக்கிடையிலான மாவட்ட மட்ட பெண்கள் கரப்பந்து போட்டி நாளை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ள இக்கரப்பந்தாட்டப் போட்டி 15, 17,19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டி குறித்த போட்டி அட்டவணை ஏற்கனவே பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், பங்குகொள்ளும் அணிகளை குறித்த நேரத்திற்கு வந்து போட்டி சிறப்புற இடம்பெற ஒத்துழைப்புத் தருமாறும் போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (12)

## பாரம்பரிய விளையாட்டு பூநகரியில் இன்று

(முழங்காவில்)

தமிழ்-சிங்களப் புத்தாண்டு தினத்தையொட்டி பூநகரியில் அமைந்துள்ள 661ஆவது படைப் பிரிவின் ஏற்பாட்டில் பூநகரி பிரதேசத்திற்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா இன்று பூநகரி கோட்டை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாரம்பரிய விளையாட்டுக்கள், சறுக்குமரம் ஏறுதல், தலையணைப் போர், சங்கீதக் கதிரை, கயிறுமுத்தல் போன்ற பல போட்டி நிகழ்வுகளும், சிங்கள - தமிழ் பிரபல இசைக் கலைஞர்கள் கலந்து கொள்ளும் இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப்பிரதேச இளைஞர், யுவதிகள் இப்போட்டிகளில் பங்குகொண்டு தமது திறமைகளை வெளிக்கொணருமாறும் அவர்கள் கேட்டுள்ளனர். (112)

# வலய மட்ட கரம் போட்டி வெற்றிபெற்ற பாடசாலைகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கான கரம் போட்டிகள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

வட மாகாண உடற்கல்வி கல்விப் பணிப்பாளர் மு.நடராசா தலைமையில் ஆண், பெண் இரு பாலாருக்குமாக இப்போட்டிகள் இடம்பெற்றன.

இதில், பெண்களுக்கான 15 வயதுப் பிரிவுப் போட்டியில் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் முதலாம் இடத்தினையும், ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை இரண்டாம் இடத்தினையும், உடுவில மான்ஸ் மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொணடன.

இதேவேளை, பெண்களுக்கான 19 வயதுப் பிரிவுப் போட்டியில் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம் முதலாம் இடத்தினையும் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை இரண்டாம் இடத்தினையும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொணடன.

ஆண்களுக்கான 15 வயதுப் பிரிவுப் போட்டியில் மான்ஸ் மகாவித்தியாலயம் முதலாம் இடத்தினையும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி இரண்டாம் இடத்தினையும், வயாவிளான் மத்திய மகா வித்தியால யம் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன.

ஆண்களுக்கான 19 வயதுப் பிரிவு போட்டியில் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம் முதலாம் இடத்தினையும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி இரண்டாம் இடத்தினையும் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன.

# மத்திய கல்லூரி, சென் பற்றிக்ஸை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது ஸ்கந்தா



ஜனக்ஷன்

(சுன்னாகம்)

மத்திய கல்லூரி மற்றும், சென் பற்றிக்ஸ் கல்லூரி அணிகளை வென்ற சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணியினால் நடத்தப்பட்ட அணிக்கு ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர் கிரிக்கெட் போட்டியிலேயே சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த 12ஆம் திகதி நடைபெற்ற முதல் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியுடன் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி வெற்றி ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின் 62 ஓட்டங்களைப பெற்றது இதில் அதிரடியாக ஆடிய கே. றொபேட் றிஷான் 24, ஜே. ஜனக்ஷன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். உதிரிகளாக 18 ஓட்டங்கள் பெற்றப்பட்டது.

பதிலுக்கு 63 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் கோகுலன் 17, விதுசன், யூலியன் தலா 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிரோஜன் ஏழு ஓட்டங்களைக்கொடுத்து மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

தொடர்ந்து நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியுடன் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதறகமைய முதலில் ஆடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி நிர்ணயிக்கப்பட்ட ஐந்து ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜனக்ஷன் நிரோஜன் ஆட்டமிழக்காது தலா 26, 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிதர்சன், லிவிங்ரன் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 54 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 15 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வி அடைந்தது. இதில் ரியூடர் மட்டுமே ஒன்பது ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் நிரோஜன் இரண்டு, ஜனக்ஷன், சஞ்சயன் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இதேவேளை இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ள அதேவேளை, இந்த இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (44)

# தேசிய இளைஞர் மன்றத்தால் தேசிய மட்ட கிரிக்கெட் பயிற்சி

(மஹரகம)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் விளையாட்டுப் பிரிவு கடின பந்து கிரிக்கெட் பயிற்சி முகாமொன்றினை மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மைதானத்தில் நடாத்தவுள்ளது.

29 வயதுக்குட்பட்டவர்களைக் கொண்டு அமையவுள்ள இந்தப் பயிற்சி முகாமில் வழங்கப்படும் பயிற்சியின் மூலம் தமது திறமைகளை வெளிக்காட்டும் இளைஞர்கள் தேசிய ரீதியில் அமைக்கப்படவுள்ள கிரிக்கெட் குழுவில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

தெரிவு செய்யப்படும் கிரிக்கெட் வீரர்களுக்கான பயிற்சிகள் மாலை வேளையிலும் சனி, ஞாயிறு ஆகிய விடுமுறை தினங்களிலும் நடைபெறவுள்ளன. வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள கிரிக்கெட் துறையில் பிரகாசிக்கும் இளைஞர்களுக்கு தேசிய மட்டத்தில் விளையாடுவதற்கான சந்தர்ப்பம் ஒன்றை வழங்குவதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பயிற்சி முகாம் குறித்து கருத்து வெளியிட்ட இளைஞர் சேவை மன்ற அதிகாரி ஒருவர், இவ்வாறு பயிற்சி முகாம் உருவாக்கப்பட்டு வெற்றிகரமாக இயங்க வைக்க நாம் முழு முயற்சியையும் எடுத்துள்ளோம். இதன் மூலம் இளம்வீரர்களை இனங்காணும் ஒரு சந்தர்ப்பமாக இது நிச்சயம் அமையும் என்றே நாம் எதிர்பார்க்கின்றோம் எனத் தெரிவித்தார்.

# தெல்லிப்பளை பிரதேச மட்ட இளைஞர் கரப்பந்து காங்கேசன்துறை ஐக்கியம், இளஞ்சுடர் சம்பியன்



இளஞ்சுடர் அணி



காங்கேசன்துறை ஐக்கியம்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை பிரதேச பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் பெண்கள் பிரிவில் காங்கேசன்துறை ஐக்கியம் அணியும், ஆண்கள் பிரிவில் அளவெட்டி மத்திய இளைஞர் அணியும் சம்பியனானது.

இப்போட்டித் தொடர் கடந்த 16ஆம் திகதி தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் பெண் பிரிவின் இறுதிப் போட்டிக்கு காங்கேசன்துறை ஐக்கிய இளைஞர் அணியும், அளவெட்டி இளங்கதிர் இளைஞர் அணியும் மோதின.

சிறப்பான முறையில் ஆடிய காங்கேசன்துறை ஐக்கிய இளைஞர் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற ஆண்கள் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் அளவெட்டி மத்திய இளைஞர் அணியும் இளவாலை இளஞ்சுடர் அணியும் மோதின.

இதில் மிகச் சிறப்பான முறையில் ஆடிய இளவாலை இளஞ்சுடர் இளைஞர் அணி 3-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (93)

# கன்னி வெடி

- ஹரி வெங்கட் -

**ரயில்** சீறிப் பாய்ந்தது. எதிரே அமர்ந்திருந்த வயதான தம்பதிகளின் கேள்விகளில் எங்களைக் குறித்து அறிந்து கொள்ளும் ஆர்வம் தெரிந்தது. கேள்விகள் சேலத்துடன் ஓய்ந்தன. எங்களைப் பிரியும்போது அவர்கள் முகத்தில் சோகம் தெரிந்தது.

சேலத்தில் இறங்கும் முன் அந்த முதிய தம்பதி என்னை சில நிமிட திகிலில் ஆழ்த்தி விட்ட பிறகே இறங்கிச் சென்றனர்.

ரயில் சேலத்தை விட்டு கிளம்பிய சில நிமிடங்களில் அவர்கள் அமர்ந்திருந்த இருக்கையின் கீழே ஒரு சிறிய பெட்டி இருப்பதைக்கண்டேன். நிச்சயமாக அது எங்களுடையதல்ல. பக்கத்தில் இருப்பவர்களுடையதும் அல்ல என்று அறிந்துகொண்டேன். பின்பு வேறு யாருடையதாக இருக்க முடியும்?

பதற்ற சூழலுக்கு உரித்தான ஜுர வேகத்தில் இயங்கிய் என் மனம் தன்னுடைய அனைத்துத் திறனையும் உபயோகித்து பல சாத்தியங்களை அடுக்கியபடி இருந்தது. மனதில் பல கேள்விகள். "வெடிகுண்டாக இருக்குமோ?" இதற்கு மேல் மனம் துளியும் நகரவில்லை. அங்கேயே நின்று கொண்டது.

அடுத்த பெட்டியிலிருந்தவர்களிடம் சென்று விசாரித்தபோது ஒருவர் மட்டும் அசட்டுச் சிரிப்புடன் பாய்ந்துவந்து அது தன்னுடையது தான் என்று சொல்லி விட்டு அந்தப் பெட்டியை ஒருமுறை தடவிப் பார்த்துவிட்டுச் சென்றார். மனம் ஆசுவாசமடைந்தது.

என் மனம் பதறியதற்கு ஒரு காரணம் இருந்தது. ரயில் நிலையங்களும், ரயில்களும் கடந்த பத்து வருடங்களில் தொடர்ந்து தீவிரவாதிகளின் இலக்காகி வருகின்றன. ஸ்பெயின் ரியல் மாட்ரிட் சம்பவம், மும்பையில் சமீபத்திய தாக்குதல்கள், இங்கிலாந்தில் சப்வே தாக்குதல்கள் என உலகெங்கிலும் தீவிரவாதிகளின் முக்கிய அறுவடை நிலையங்களாக ரயிலும்,ரயில் சார்ந்த இடங்களும் மாறி வருகின்றன.

வெகு சமீபத்தில், மொஸ்கோவின் சுரங்க ரயில் நிலையத்தில் இரண்டு மனித வெடிகுண்டுகள் தங்களை தாங்களே இயக்கி வெடித்துச்சிதறின. சடலங்களின் கணக்கு 38. வெடித்துச் சிதறியவர்கள் இருவரும் பெண்கள். இருவரும் "கறுப்பு விதவைகளாம்". யாரிந்த "கறுப்பு விதவைகள்"?

ஸ்டாலினின் ஆட்சியில் தொடங்கி இன்று வரை தொடரும் செச்னியா மீதான ரஷ்யாவின் அடக்குமுறைபல வடுக்களை ஏற்படுத்தியிருக்கின்றது. ஸ்டாலினால் சைபீரியாவிற்கு அனுப்பப்பட்ட பல்லாயிரக்கணக்கான செச்னியர்கள், பல வருடங்கள் கழித்தே தங்கள் மண்ணிடம் திரும்ப முடிந்தது.

தங்கள் மண்ணை ரஷ்யாவின் பிடியிலிருந்து விடுவிக்க நினைத்த இந்த செச்னியர்கள் அதற்கான போராட்டத்தை தொடங்கினர். போராட்டம் ஒரு கட்டத்தில் தீவிரவாதமாக மாறியது. இந்தக் குழுவின் ஒரு பிரிவுதான் "கறுப்பு விதவை"கள் என்றழைக்கப்படும், ரஷ்யாவின் அடக்குமுறையால் பலியான பல்வேறு ஆண்களின் மனைவிகளின் குழு. பத்து வருடங்களுக்கு முன், ஜுன் 7, 2000-த்தன்று Khava Barayeva மற்றும் Luiza Magomadova எனும் இரண்டு செச்னிய பெண்கள் ஆயுதங்கள் நிரம்பிய ஒரு லொறியை ரஷ்ய இராணுவத்தினர் தங்கியிருந்த ஒரு கட்டடத்தில் மோதி வெடிக்கச் செய்தனர். இந்தத் தாக்குதலில் ரஷ்ய இராணுவம் பெரும் உயிர் இழப்பைச் சந்தித்தது.

ரஷ்ய இராணுவத்தின் மீதான செச்னிய தீவிரவாதிகளின் முதல் மனித வெடிகுண்டுத் தாக்குதல் இதுதான். மனித வெடிகுண்டுகளாக பெண்களை ஈடுபடுத்துவதில் உள்ள பல சௌகரியங்களை உணர்த்திய இந்த நிகழ்வு, செச்னிய தீவிரவாதக் குழுவில் "கறுப்பு விதவைகள்" குழுவிற்கான விதையை விதைத்தது.

இதைத் தொடர்ந்து, "கறுப்பு விதவைகள்" அவ்வப்போது பெரும் அழிவை நிகழ்த்தி வந்திருக்கின்றனர். 2002இல் ஒரு நாடக அரங்கத்தை பல மணி நேரம் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த சம்பவம் இவர்கள் மீது உலகத்தின் கவனத்தை திருப்பியது. இதைத் தொடர்ந்து2003 ஆம் ஆண்டு ஒரு இசை நிகழ்ச்சியின் போது இவர்கள் நடத்தியதாக்குதலில் 14 பேர் உயிரிழந்தனர்.

இத்தகைய மனித வெடிகுண்டுத் தாக்குதலில் பெண்களை உபயோகிப்பது நல்ல பலன்களை(?!) அளிப்பதாகக்கூறப்படுகிறது. ஒரு ஆண் மனிதவெடி குண்டு சராசரியாக 13 மனித உயிர்களை மட்டுமே கொல்கிறான். ஆனால்ஒருபெண் மனித வெடிகுண்டு சராசரியாக 21 மனித உயிர்களை கொல்கிறாள் என்று புள்ளி விவரம் சொல்கிறது.

மேலும், ஒரு பெண் உடனடியாக எந்தவித சந்தேக வட்டத்துக்குள்ளும்



விழுந்துவிடுவதில்லை. அவள் தனது நோக்கத்தையாருக்கும் எந்தவித சந்தேகத்தை அளிக்காதபடி தனக்கு கொடுக்கப்பட்ட பணியை முடித்து விடுகிறாள். இதில் குறிப்பிடப்பட வேண்டிய இன்னொரு விஷயம், இந்தப் பெண் வெடி குண்டுகள் தங்கள் இறப்பின் மூலம் மற்ற ஆண் மற்றும் பெண்களையும்மனித வெடிகுண்டுகளாக மாற உந்துகின்றனர்.

தனது மரணத்திற்கு முன் Barayeva மற்றஎல்லா மனித வெடிகுண்டுகளைப் போலவே, தன்னுடைய செய்திஒன்றை விட்டுச் சென்றார். அதில், "வீட்டில் முடங்கிக்கிடப்பது என்பது பெண்களின் பணி. அதை ஆண்கள் கைக்கொள்ளக்கூடாது. துணிந்து களத்தில் இறங்கி" போராட அழைப்பு விடுத்தார். அவரது அழைப்பிற்கு இதுவரை 32 ஆண்கள் செவிசாய்த்துள்ளனர்.

Barayeva-வின் இந்த அழைப்புபெண்களையும் ஈர்த்திருக்கிறது. "கறுப்பு விதவை" குழு உருவானதில் அவரது இந்த ஒளிப்பேழைமுக்கிய பங்குவகிக்கிறது. இதுவரை 15 முதல் 37 வயது



> பதற்ற சூழலுக்கு உரித்தான ஜுர வேகத்தில் இயங்கிய என் மனம் தன்னுடைய அனைத்து திறனையும் உபயோகித்து பல சாத்தியங்களை அடுக்கியபடி இருந்தது. மனதில் பல கேள்விகள். வெடிகுண்டாக இருக்குமோ?' இதற்கு மேல் மனம் துளியும் நகரவில்லை. அங்கேயே நின்று கொண்டது.

வரையிலான 23 பெண்கள் மனிதவெடி குண்டுகளாக வெடித்துச்சிதறியுள்ளனர்.

இதுவரை பல்வேறு தீவிரவாத குழுக்களும் பெண்களை தங்கள் பணிகளுக்காக பயன்படுத்தியுள்ளனர். அல்-கொய்தா, அல்-அக்ஸா, ஹமாஸ், அயர்லாந்து நாட்டின் ஐ.ஆர்.ஏ(IRA), விடுதலைப்புலிகள் போன்ற பல குழுக்கள்.

ஆண் மனித வெடிகுண்டுகளின் உளவியல் அமைப்பை மிக எளிதாக நம்மால் புரிந்து கொள்ளமுடியும். டெஸ்டஸ்டோரோனின் ஊட்டச் செயல் பாடு, கொள்கை, தன் ஆண்மை குறித்த அதீத பெருமை, 72 சுவன கன்னியர் இப்படிப் பல காரணங்கள். ஆனால் பெண்கள் விஷயத்தில்?

இஸ்ரேலைச் சேர்ந்த பெண் ஆய்வாளரான முனைவர் அனட் பெர்கோ (Anat Berko), "உடல், மனம் மற்றும் பாலியல் சார்ந்தவன்கொடுமைகளே பெண்களை தீவிரவாதச் செயல்களில் ஈடுபட வைக்கின்றன"என்கிறார். இந்த வகை சுரண்டல்கள், வன்கொடுமைகள் அவர்கள் சார்ந்த குடும்பம் அல்லது தீவிரவாதக் குழுவில் நடைபெறுவதாக சுட்டுகிறார். இவர்களின் இந்த முடிவிற்கு பின்புலமாக எந்தவிதகோட்பாட்டுப் பற்றுதலோ அல்லது சுயதேர்வோ காரணமல்ல என்கிறார். இஸ்ரேலியச் சிறைகளில் இருக்கும் வெடிக்காத பெண் மனித வெடிகுண்டுகளுடன் தான் நடத்திய பலமணி நேர உரையாடல்களே தன்னை இந்த முடிவிற்கு இட்டுச் சென்றதாகக் கூறுகிறார்.

பாலஸ்தீனின் முதல் பெண் மனித வெடிகுண்டான வா.:.பா இத்ரிஸ் (Wafa Idris), ஜனவரி 2002 அன்று ஒரு 81 வயது முதியவரைக் கொன்று, மேலும் 100 பேர் காயமுறக் காரணமானார். தன் கணவனுக்கு ஒரு வாரிசைத் தரமுடியாத காரணத்தால் வா.:.பா தனது கணவனால் கைவிடப்பட்டவர். தன்னைத் துறந்து வேறொரு பெண்ணுடன் வாழ்க்கையைத் தொடர்ந்த கணவன் அந்தப் பெண் மூலம் இரண்டு வாரிசுகளுக்கு தந்தையானார். இது வா.:.பாவுக்கு சகிக்க முடியாத கசப்பான அனுபவமாக அமைந்தது.

தான் அடைந்த இந்தத் துயரத்திலிருந்து மீளவும், தன்னுள் ஒரு புதிய ஆளுமையை கட்டமைத்து, அதன் மூலம் பிறரிடம் தன்னுடைய பாதிப்பை செலுத்தும் வேட்கையே அவரை வெடி குண்டாக மாற்றியதாக அனட் பெர்கோ கூறுகிறார்.

ஆனால் தன்னுடைய முயற்சியில் தோற்று, எதிராளிகளிடம் சிக்கிக் கொள்ளும் போது, தங்கள் செயலை நியாயப்படுத்திக் கொள்ள சித்தாந்த சார்புகள் தேவைப்படுகின்றன.

மேலும், அவர்கள் இப்போது ஒரு கூட்டத்துடன் அடைக்கப்படுகின்றனர். இந்தக் கூட்டத்தில் தன்னைக் குறித்த ஒரு புது ஆளுமையை கட்டமைக்க முயல்கின்றனர். தனக்கென ஒரு வீரனுக்கான பிம்பத்தை இவர்களே உருவாக்கிக் கொள்கின்றனர்.

ஆனால் உண்மைக் காரணங்கள் வேறு. உதாரணமாக, கணவனால் நிராகரிக்கப்படும் பாலஸ்தீன பெண்களின் நிலை மிகவும் பரிதாபகரமானது. எந்தவித பாதுகாப்பு மில்லாமல் இருக்கும் இவர்களை தீவிரவாத குழுக்கள் தங்கள் தேவைக்குப் பயன்படுத்திக் கொள்கின்றன. தங்களுக்கு கிடைக்கும் பாது காப்பிற்கு பதிலுதவியாக அந்தக் குழுக்களின் தீவிரவாத நடவடிக்கைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதாக அனட் பெர்கோ குறிப்பிடுகிறார்.

பாலஸ்தீனப் பெண்கள் மட்டுமல்லாமல் 'கறுப்பு விதவைகள்' குழுவையும் இந்த கோணத்தில் நம்மால் பார்க்க முடியும். ரஷ்ய இராணுவத்தால் தங்கள் குடும்ப ஆண்களை இழந்து தவிக்கும் பெண்கள் சமூகத்தின் தொடர் துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர். தங்கள் வாழ்வில் எந்தவித பாதுகாப்பும் இல்லாத இவர்கள், தங்கள் வாழ்விற்கு புது அர்த்தம் அளித்துக்கொள்ள இத்தகைய தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் குறிப்பிடுகிறார்.

வெவ்வேறு நிலவெளிகளில் வாழும் இந்தப் பெண்களிடையே சில ஒற்றுமைகள் உண்டு. இவர்கள் வயிற்றில் கட்டப்படும் வெடிகுண்டுகள் இவர்களின் சுயதேர்வல்ல. வெடிகுண்டுகளைச் செயற்படுத்தும் விரல் களும் நிஜத்தில் இவர்களுடையதல்ல. அனைத்தும் எங்கோ நிழலில் வாழும் மனிதர்களால் நடத்தப்படுகிறது.

தீவிரவாத நடவடிக்கைகளில் முக்கிய அங்கம் வகிக்கும் பெண்கள், தங்கள் குழுக்களில் அவர்களுக்குக் கிடைக்கும் இடம் என்ன? ஒன்று மில்லை என்பது தான் கசப்பான உண்மை. சில விதிவிலக்குகளைத் தவிர்த்து, உலகின் எந்த தீவிரவாத அமைப்பிலும் பெண்கள் தலைமைப் பொறுப்பை வகிப்பதில்லை. தங்கள் ஐம்பது வருட வரலாற்றில் பெண் மனித வெடிகுண்டுகளின் நிலை இதுதான். தங்கள் குழுவிலும் இரண்டாம் தர குடிமக்களாகவே இவர்கள் நடத்தப்படுகிறார்கள்.

பல நேரங்களில் தங்களுக்கு அளிக்கப்பட்ட பணியை செய்து முடிக்க போதிய பயிற்சியோ வழிகாட்டுதலோ இல்லாமல்தான் இவர்கள் களத்திற்கு அனுப்பப்படுகிறார்கள். 1950-களில் பிரெஞ்ச் ஆதிக்கத்தை எதிர்த்த அல்ஜீரிய தீவிரவாதக் குழுக்களில் பயன்படுத்தப்பட்ட புர்கா அணிந்த பெண்கள் முதல் விடுதலைப்புலிகள் வரை இதுதான் நிதர்சனம்.

**குறிப்பு:**

Popular Front for the Liberation of Palastine எனும் தீவிரவாத குழுவின் லைலா காலீத் எனும் பாலஸ்தீன பெண் தீவிரவாதி 1969-இல் ஒரு விமானத்தை கடத்தி பலத்த கவனிப்பிற்கு உள்ளானார். தனது குழுவின் பல ஆண்களையும் மீறி தனக்கான ஒரு இடத்தை இவர் உருவாக்கிக்கொண்டார்.

# கிழக்கு விஜயம் திருப்தியில்லை

## இந்தியக் குழுவை சாடுகிறார்

## கூட்டமைப்பு எம்.பி. பொன் செல்வராசா



(கொழும்பு)

இந்தியாவில் இருந்து வருகைதந்த சர்வகட்சி குழுவைச்சேர்ந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு கிழக்கிற்கு குறிப்பாக மட்டக்களப்பிற்கு வந்து எந்தப் பாதிக்கப்பட்ட பொதுமக்களையும் பார்வையிடாமல் சிவிலியன் குழுக்களை சந்திக்காமல் இரண்டு வைபவங்களில் மட்டும் பங்கேற்றுவிட்டு திரும்பிச் சென்றது எம்மைப் பொறுத்த வரை ஒரு கவலைக்குரிய விடயாமாகும் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியக் குழுவினர் இந்தியாவிலிருந்து வெளியேறும் போது வடக்கு கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை குறிப்பாக இடம்பெயர்ந்தவர்களையும் மீளக்குடியேற்றப்படாதவர்களையும் பார்வையிட்டு அவர்களின் நலன்களை விசாரிக்க வருகின்றோம் என்று கூறிவிட்டு வந்தவர்கள்.

கிழக்கிற்கு அதுவும் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்து எந்தப் பாதிக்கப்பட்ட மக்களையும் பார்வையிடாமல் சிவிலியன் குழுக்களையும் சந்திக்காமல் இரண்டு வைபவங்களில் மட்டும் பங்கேற்றுவிட்டு அவர்கள் திரும்பிச் சென்று விட்டனர். இது எம்மைப் பொறுத்தவரை கவலையளிக்கின்ற விடயமாகும்.

குறிப்பாக கிழக்கிற்கு வரும்போது திருகோணமலையில் மூதூர் பிரதேசத்தின் சம்பூரில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் இன்னும் நலன்புரி முகாம்களில், இடைத் தங்கல் முகாம்களிலும் சீவித்துக் கொண்டிருக்கிறார்கள். சுமார் 1268 குடும்பங்களைச் சேர்ந்த 5000 இற்கும் மேற்பட்ட மக்கள் மூதூர் பிரதேசத்திலுள்ள கிளிவெட்டி, பட்டிதிடல், மணற்சேனை கட்டை பறிச்சான் ஆகிய கிராமங்களிலுள்ள' இடைத்தங்கல் முகாம்களிலேயே கடந்த 3 வருடங்களாக துன்பங்களை அனுபவித்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

கடந்த 4 மாதமாக உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்பட்டு வந்த உணவு கூட இவர்களுக்கு நிறுத்தப் பட்டிருக்கின்றது. இதே மக்கள் 2006 முதல் 2009 வரை மட்டக்களப்பிலும் 2009 ஆம் ஆண்டில் இருந்து இற்றை வரை மேற்கூறிய இடைதங்கல் முகாம்களிலும் பல இன்னல்களுக்கு மத்தியில் சீவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாதம் 26 ஆம் திகதியுடன் அதாவது தந்தை செல்வாவின் நினைவு தினத்துடன் 6 வருடங்கள் கடந்து 7 ஆவது வருடத்தில் கால் வைக்கிறார்கள்.

ஆகவே இவர்களையாவது இந்திய நாடாளுமன்றக்குழு பார்வையிட்டிருக்க வேண்டும் ஆனால் அதற்குத் தவறி விட்டார்கள். இந்திய நாடாளுமன்றக் குழுவின் கிழக்கு விஜயமானது எம்மைப் பொறுத் தவரையில் அர்த்தமற்ற ஒன்றாகவே போய்விட்டது. அதை தமிழக மக்கள் ஏற்கனவே அறிந்திருக்கிறார்கள் என்பது மட்டும் உண்மை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மின்சார நிலையத்தில் தீ விபத்து

## இருளில் மூழ்கியது களனி



(கொழும்பு)

களனி உப மின் உற்பத்தி நிலையத்தில் நேற்றுக் காலை திடீரென தீ பரவியதால் பெரும் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.


இத் தீ பரவல் சம்பவம் அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதன் போது மின் உற்பத்தி இயந்திரங்கள் எரிந்து சேதமாகியுள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் விமலதர்மராம அபயவிக்கிரம தெரிவித்தார்.

இவ் இயந்திரங்கள் இயங்காத பட்சத்தில் மின்சார உற்பத்தியை மேற்கொள்ள முடியாது என மின்சார சபையின் தலைவர் குறிப்பிட்டார்.

இவ் விபத்துச் சம்பவத்திற்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை என மேலும் விமலதர்மராம அபயவிக்கிரம தெரிவித்தார்.

# மின்சார ஊழியர்கள் நாடளாவிய போராட்டம்




(கொழும்பு)

நாடளாவிய ரீதியாக எதிர்வரும் மே மாதம் 29ஆம் திகதி தொழிற்சங்க போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளதாக மின்சார ஊழியர்கள் தீர்மானித்துள்ளனர்.

மின்சார சேவையாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜயலால் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் நண்பகல் கூடிய மின்சார சபையின் தொழிற் சங்க சம்மேளனக் கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப் பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

மின்சார சபையின் நிறைவேற்று தர அதிகாரிகளின் வேதனத்தை மீண்டும் அதிகரிப்பதற்கு அரசாங்கம் கடந்த தினத்தில் தீர்மானித்தது.

எனினும், இந்த வேதன அதிகரிப்பு கனிஷ்ட தர அதிகாரிகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு உரிய பதில் கிடைக்கப்படாமை காரணமாகவே இந்த தொழிற் சங்க போராட்டம் முன்னெடுக்கப்பட வுள்ளதாகவும் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்

# தம்புள்ளை பள்ளிவாசலுக்கு மாற்று அமைவிடம்

## கோத்தபாய அவசர உத்தரவு



(கொழும்பு)

தம்புள்ள பிரதேசத்திலுள்ள பள்ளிவாசல் ஒன்றினை அகற்றக்கோரி அங்கு பௌத்த பிக்குகள் தலைமையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியுள்ளனர். இதனால் குறிப்பிட்ட பள்ளிவாசலுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பள்ளிவாசலுக்கு எதிரான நடவடிக்கைக்காக ஆர்ப்பாட்டக்காரர்களால் இருகாரணங்கள் முன்வைக்கப்படுகின்றது.

முதலாவது காரணமாக குறிப்பிட்ட பள்ளிவாசல் அமைக்கப்பட்டுள்ள காணி பன்சலை ஒன்றுக்கு சொந்தமானது எனவும்,

இரண்டாவதாக குறிப்பிட்ட பள்ளிவாசல் அமைந்துள்ள பிரதேசம் புனிதபூமியாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள நிலையில் அங்கு பிற வணக்கஸ்தலங்கள் அமைய முடியாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் தம்புள்ளையில் ஏற்பட்டுள்ள அசமந்த நிலையை அறிந்த பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ சீல் வைக்கப்பட்டுள்ள பள்ளிவாசலுக்கான பொருத்தமான காணி ஒன்றினைப் பெற்றுக்கொடுக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளதாகப் பாதுபாப்பு அமைச்சின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றது.

இதேநேரம் இது விடயம் தொடர்பில் எதிர்வரும் தினங்களில் உயர்மட்டச் சந்திப்புக்களுக்கான வாய்ப்புக்கள் உண்டென வும் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# மேதின எழுச்சி

## ஐ.தே.கட்சி தயாராகிறது




(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் சகல உறுப்பினர்களும் கொழும்பில் ஒன்று கூடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 24, 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் கட்சித் தலைமைக் காரியாலம் சிறிகொத்தாவில் ஒன்று கூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தலைமையில் இந்த கூட்டம் கூடவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் போது கட்சியின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள மே தினக் கொண்டாட்டம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பள்ளிவாசல் மீதான தாக்குதல் நாட்டின் நற்பெயருக்கு களங்கம்



## திருமலை எம்.பி. எம்.எஸ்.தௌபீக் விசனம்

(கொழும்பு)

தம்புள்ளையில் இயங்கி வந்த பழம்பெரும் பள்ளிவாசல் தாக்கி. சேதப்படுத்தப்பட்டமை இலங்கையின் நற்பெயருக்கு பெரும் களங்கமாகும் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்எஸ்.தௌபக் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சுமார் 100 ஆண்டு கால பழமைவாய்ந்த இப்பள்ளிவாசல் புனித பூமி என்ற காரணத்தைக் காட்டி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தாக்கப்பட்டுள்ளது.

பள்ளிவாசல் என்பதும் இறைவனை வணங்குகின்ற ஒரு இடமேயன்றி கேளிக்கை புரியும் இடமல்ல. அந்த வகையில் இதுவும் புனிதமானதுதான்.

கதிர்காமத்தில் இன்றும் கூட சகல வணக்கஸ்தலங்களும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அமைந திருப்பது இந்தப் புனிதத் தன்மையினால்தான். இதனைப் புரிந்து கொள்ளாதவர்கள் இந்நாட்டில் இருப்பது இலங்கையின் நற்பெயருக்கு பெரும் களங்கமாகும்.

ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு ஆதரவு அளித்தவற்றுள் பெரும் பாலான்வை முஸ்லிம் நாடுகள். எனவே, பள்ளிவாசலைத் தாக்கிய இந்த ஈனச் செயலானது அந்நாடுகளின் முகத்தில் கரி பூசியதைப் போன்றதாகும்.

இதுபோன்ற நிலை தொடர்ந்து நீடிக்குமானால் இந் நாடு சர்வதேச மட்டத்தில் பல் வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிவரும் எனபதில் எவ்வித ஐயமுமில்லை.

எனவே, ஜனாதிபதி இவ்விடயத்தில் நேரடியாகத் தலையிட்டு பள்ளிவாசலைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் மூலம் முஸ்லிம்களின் பேரபிமானத்தை பெற முடியும்.

# கொலையாளிகளை சாட்சிகள் காட்டினர்



(கொழும்பு)

கோட்டை ரஜமஹா விகாரையில் மார்ச் 20 ஆம் திகதி பிக்குகள் இருவரை கொன்றவர்கள் என இரண்டு சந்தேக நபர்களை நேரில் கண்ட 5 சாட்சிகள் அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டினர்.


இந்த அடையாள அணி வகுப்பு நுகேகொடை பதில் நீதவான் திஸ்ஸ விஜேரத்ன முன்னிலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது, மார்ச் 20 ஆம் திகதி பி.ப 9.30 மணிக்கு வண. பண்டித்த பிட்டிகல கினரத்ன தேரர், வண பொலரஸ்கமுவ குணேரத்ன தேரர் ஆகிய இருவரினதும் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் என மகரகமவை சேர்ந்த பத்திராகே ஹர்ஷா மஞ்சுசிரி மனிக்கீர்த்தி பெரேரா மற்றும் தனமன்விலையைச் சேர்ந்த நம்முனி ஆராச்சிகே சுரேஷ் சானக ஆகியோரை ஒரு பிக்கு, ஒரு பெண் அடங்களாக ஐந்து பேர் இனம் காட்டினர்.

இரண்டாவது சந்தேக நபரான நம்முனி ஆராச்சிகே சுரேஷ் சானக இரண்டு பிக்குகளையும் கத்தியால் குத்தியவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

முதலாவது, சந்தேக நபர் மனிக்சிரி பெரேரா கொலைக்கு உடந்தையாக இருந்தவர் என பொலிஸாரால் விசாரணைகள் மூலம் அறியப்பட்டவர் ஆவார்.

நேரில் கண்ட சாட்சியங்களான 6 பேரில் பெண்ணொருவரை தவிர ஏனைய 5 பேரும் சந்தேக நபர்களை அடையாளம் காட்டினர். அடையாள அணி வகுப்பின்போது சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி எவரும் ஆஜராகவில்லை. சந்தேக நபர்களை மே 4 வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதவான் பணித்தார்.



# விமர்சிக்கும் நாடுகளையும் ஆதரிக்கச் செய்யமுடியும்!

**- ஜெஹான் பெரேரா கட்டுரையிலிருந்து.**

ஜெனிவா தீர்மானத்தினை வாக்கெடுப்புக்கு விட்டு அதில் இலங்கை தோற்கடிக்கப்பட்டமை தொடர்பாக இலங்கை அரசாங்கத்தில் உள்ளவர்கள் தமக்கு நியாயமற்ற வகையில் முடிவு தீர்மானிக்கப்பட்டது என உணர்வு பூர்வமாக சிந்தித்து ஏற்படுத்திக்கொண்ட அனுமானத்தை இலங்கையின் மக்கள் தொகையில் ஒரு பிரிவினரும் கொண்டிருந்தனர்.

இருந்த போதிலும் சில சார்பு நிலையிலான தலைப்புகளும் இடம் பெற்றிருந்தன. அவற்றில் அரசாங்கத்தில் பங்கு கொள்ளாத வர்களது கருத்துகளைக் காணக்கூடிய தாயிருந்தது. ஐக்கிய அமெரிக்காவின் தீர்மானம் இலங்கைக்கு தீங்கு விளைவிப்பதல்ல, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவைக்கு அடிக்கடி (தொடர்ச்சியாக) அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய ஆபத்து தவிர்க்கப்பட்டுள்ளது. தமிழர்கள் நியாயம் பெறவேண்டும், அவர்களும் கண்ணியமான வாழ்க்கையை மேற்கொள்ள வழிசெய்ய வேண்டும் என்பன அவ்வாறான எதிர்மறையற்ற தலைப்புச் செய்திகளாகும்.

இலங்கை ஒரு சாதகமான தீர்ப்பினை பெறுவதிலிருந்து ஒதுக்கப் பட்டு விட்டது என்ற பலமான உணர்வு இலங்கையில் காணப்பட்டது. அவ்வாறான கருத்து அரசாங்கத்திற்கு சார்பற்றவர்கள் மத்தியிலும் கூட காணப்பட்டதாகவும் கூறப்படுகின்றன. விடுதலைப்புலிகளின் நோக்கங்களை ஆதரித்த வெளிநாடுகளில் உள்ள தமிழர்களும் யுத்தத்திற்கு நிதி வழங்கியவர்களும் ஜெனீவாவில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் தீவிரமாகச் செயற்பட்டவர்களுடன் இணைந்து காணப்பட்டமை இவ்வாறான உணர்வுகள் இலங்கையர் மத்தியில் காணப்பட்டமைக்கு காரண-மாக இருக்கலாம். அவர்களில் பலர் உலகத் தலைவர்களுடன் இணைந்து காட்சி தந்தனர்.


யுத்தத்தின் இறுதிக் காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் சிறுவர்களை பலவந்தமாக படையில் இணைத்துக் கொண்டனர் என்பதனை யோ அல்லது பொதுமக்களை பணயக் கைதிகளாக வைத்துக்கொண்ட மையினையோ அவர்கள் ஒத்துக் கொள்ள மறுப்புத் தெரிவித்திருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரில் ஒரு பகுதியினரும் கூட பொதுமக் களையும் சிறுவர்களையும் யுத்தப் பகுதிகளிலிருந்து வெளியேற அனுமதிக்குமாறு விடுதலைப்புலிகளை வற்புறுத்தத் தவறியிருந்தனர். ஆனால் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் வெளிநாட்டிலுள்ள தமிழர்கள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் ஆகியோர் அங்கே செயல்பட்ட பிரசித்தமான சர்வதேச மனித உரிமைகள் குழுவின ருடன் இணைந்து ஒரே மேடையில் இருந்து செயற்பட்டனர்.

கடந்த காலத்தைப் பின்நோக்கி சென்று பார்ப்போமேயானால் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதஉரிமைகள் பேரவையின் தீர்மானத்தின் ஆரம்ப உரையாக கூறப்பட்ட சில கருத்துகளை, உதாரணமாக விடுதலைப்புலிகளதும் அவர்களது ஆதரவாளர்கள் எவ்வாறு யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் மனித உரிமை களை மீறுவதான செயல்களில் ஈடுபட்டிருந்தனர் என்பதனையும் எடுத்துக் கூறியிருந்தால் இலங்கை பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்ட பொதுசன அபிப்பிராயம் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளக்கூடியதாகக்கூட இருந்திருக்கும்.

எதிர்வரும் காலங்களில் ஐ.நா. சபை மனிதஉரிமைகள் பேரவையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள மனித உரிமை மற்றும் நல்லிணக்கம் என்பன தொடர்பாக மதிப்பிடும் போது இப்பிரச்சினையை கவனத்தில் எடுத்துக் கொள்ளலாம். நீதிக்கோயிலில் நுழைந்து நியாயம் வழங்கப்போகிறவர்களின் கை சுத்தமானதாக இருக்கும் போதுதான் நீதி வழங்கப்படும் என்ற நம்பிக்கை காணப்படும்.

இலங்கை மீது கடும் கண்டனத்தைத் தெரிவித்திருக்கும் நாடுகளும் குழுக்களும் கூட மனித உரிமை மீறல்களை செய்துள்ளனர் என்ற மனக்குறை இலங்கை அரசாங் கத்திற்கும் நாட்டின் பெரும்பாலான மக்களுக்கும் உண்டு. எனவே இலங்கை மக்களது மனதில் மாற்றத்தினைக் கொண்டு வரவேண்டு மானால் இந்தக் கருத்தினைப் பொறுத்து பொருத் தமான மாற்றங் கள் வரவேண்டும்.



ஐ.நா.சபை மனித உரிமைப் பேரவையில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் இலங்கை காட்டிக் கொடுக்கப் பட்டதாக இலங்கை அரசாங்கத் தலைவர்கள் எண்ணும் அதேநேரத்தில் இலங்கை சர்வதேச சமூகத்தின் ஒரு அங்கம் என்பதனை யோ இலங்கையின் முன்னாள் அரசாங்கங்கள் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட கொள்கைகளுக்கு ஏற்ப அனுசரித்து செயற்பட வேண்டும் என்பதனையோ உணர்ந்து செயற்பட தவறக்கூடாது.

இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போரிட்டபோது ஐ.நா. மனித உரிமை பேரவையில் இப்போது தீர்மானத்தை கொண்டு வந்த ஐக்கிய அமெரிக்கா அதனை ஆதரித்து வாக்களித்த இந்தியா உட்பட அநேகமாக முழு சர்வதேச சமூகமும் இலங்கைக்கு அரசியல் மற்றும் இராணுவ உதவிகளை வழங்கியமையினை மறக்கமுடியாது.

இவ்வாறு அரசியல் மற்றும் இராணுவ உதவிகளை வழங்கிய சர்வதேச சமூகம் இலங்கையில் யுத்தம் முடிவடைந்த பின்னர் இலங்கையில் நிலவும் முரண்பாட்டிற் கான அரசியல் ரீதியிலான அடிப்படைப் பிரச்சினைகளைக் களையும் வகையில் அரசியல் அமைப்பு சார்ந்த சீர்திருத் தங்களை இலங்கை அரசாங்கம் கொள்ளும் என்ற நம்பிக்கையையும் கொண்டதாகவே இருந்தமையும் மறுக்கமுடியாததாகும்.

இந்தியப் பிரதமர் தனது கடிதத்தில் இவற்றினை மீள்நினைவுபடுத்தும் வகையில் கூறிய வாசகங்கள் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். இலங்கையின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகை யில் 13ஆவது திருத்தச்சட்டத்தினை அர்த்தமுள்ள வகையில் விருத்தி செய்து இலங்கையின் அனைத்து மக்களுக்கும் இனவேறுபாடற்ற முறை யில் நீதி, கண்ணியம், சமத்துவம், சுயமரியாதை என்பன நிரந்தரமாக கிடைக்கக்கூடிய வகையில் அரசியல் தீர்வு ஒன்றினை கொண்டு வருவீர்கள் என்ற நம்பிக்கையுண்டு என கூறியுள் ளமை இந்தியப் பிரதமரது எண்ணங் களை பிரதிபலிப்பதாக உள்ளது.

க.பா.ந.ஆ. அறிக்கையில் கூறப் பட்டுள்ள சிபாரிசுகள் சரியாக நடை முறைப்படுத்தப்படுவதன் மூலம் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் கணிசமான தீர்வுகள் ஏற்படலாம். அவ்வாறு அரசியல் சீர்திருத்தம் சரி யான முறையில் ஏற்படும் பட்சத்தில் இப்போது இலங்கையைப் பற்றி விமர் சித்து வரும் நாடுகள் எதிர்வரும் காலங்களில் இலங்கையை ஆதரிக்க முன்வரும் என நம்பலாம்.

# தென்னாட்டு சுல்தான்

ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் செல்வாக்கும் உயர்மதிப்பும் கொண்ட மிக முக்கியமான மனிதர்களை பட்டியலிடுவது இந்தியா டுடே பத்திரிகையின் வழக்கம். இந்த ஆண்டும் அப்படியொரு பட்டியலை வெளியிட்டுள்ளது.

இந்த பட்டியலில் தமிழ் நாட்டின் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் இடம்பெற்றுள்ளார். இத்தனைக்கும் கடந்த இரு ஆண்டுகளாக அவர் நடித்த படங்கள் ஏதும் வெளிவர வில்லை. உடல் நலக் குறைவு, "ராணா" தள்ளிப்போனது என பிரச்சினைகள் இருந்தாலும் மக்கள் செல்வாக்கு, ரசிகர் களின் அபிமானம், வரவிருக்கும் "கோச்சடை யான்" மீதான எதிர்பார்ப்பு போன்றவற்றால், அவரே செய்திகளின் நாயகனாகத் திகழ்கிறார்.

இந்தியா டுடே வெளியிட்டுள்ள அந்த "டொப் -50" பட்டியலில் அன்னா ஹசாரே, ரத்தன் டாடா, முகேʼ அம்பானி, அனில் அம்பானி, அமிதாப் பச்சன், ஏ.ஆர். ரஹ்மான், யுவ்நாடார், சச்சின் டெண்டுல்கர். அஜீம் பிரேம்ஜி என பல பிரபலங்கள் இடம்பிடித்திருக்கிறார்கள்.

"தொன்னாட்டு சுல்தான்" ஏன்ற தலைப்பில் 61 வயதான, ரஜினியின் செல்வாக்கு நிலைக்கான எட்டு காரணங்களை இந்தியா டுடே பட்டியல் இட்டு இருக்கிறது. அந்த காரணங்கள் இவைதான்:

**1.** சல்மான்கான் போன்ற சூப்பர் ஸ்டாருக்கு பொலிவூட் பட்டம் சூட்ட எண்ணிய போது அவர்கள் தந்த பெயர் "ரஜினிகாந்த்".

**2.** நோயுற்று மே 2011 ஆம் திகதி சிங்கப்பூர் மருத்துவமனையில் அவர் இருந்த போது தமிழகத்தின் இதயத் துடிப்பு நின்று போனது போலிருந்தது.

**3.** "கோச்சடை யான்" எனும் இந்தியாவின் முதலாவது தொழில்நுட்ப மோசன் கப்சரிங் சினிமாவில் நடிக்கிறார்.

**4.** இவரது வயது ஏறிக்கொண்டிருக்க இவரது கதாநாய கிகளின் வயது குறைந்துகொண்டே போகிறது. கோச்சடையானில் இவரது கதாநாயகி தீபிகா படுகோனின் வயது இருபத்து ஆறுதான்.


**5.** எந்திரனின் வெற்றி சூப்பர் ஸ்டாரைப் பற்றிய புதிய ஐபொட் மென்பொருளை அறிமுகப்படுத்த அப்பிளுக்கு உணர்த்தியது.

**6.** 20 ஆண்டுகளுக்குப் பிறகு ரெக்கோர்டிங் ஸ்டுடியோவுக்கு வந்து கோச்சடையானுக்காகப் பாடினார்.

**7.** ரஜினியின் அதிகாரபூர்வ வாழ்க்கை வரலாறு அவரது 62 வது பிறந்த நாளான 12.12.12 அன்று வெளியிடப்படும்.

**8.** கோச்சடையானின் தெலுங்கு திரையரங்கு உரிமை ரூபா 30 கோடிக்கு விற்பனையானது.

இத்தனை அம்சங்க ளையும் கொண்ட ஒரு மனிதன் தமிழ் நாட்டில் இருக்கின்றான் என்றால் அது நிச்சயம் சூப்பர் ஸ்டாராகத்தான் இருக்க முடியும்.



# அழைப்பு

தூரத்தில் நான் கேட்டேன்
குரல் ஒன்று
தூரத்தில் நான் கேட்டேன்
பாதி இரவினிலும் பட்டப்பகலின் அனலினிலும்
மோதித் தெறித்து
மெல்ல முனகி அழுவதுபோல்
தூரத்தில் நான் கேட்டேன்
குரல் ஒன்று
தூரத்தில் நான் கேட்டேன்

பக்கத்தில் ஒரு கோயில்
அதன்பக்கத்தில் ஒரு அரவு-
சொர்க்கத்தின் வழிபோல
இலை சோவெனக் கலகலக்கும்.
சற்று அப்பால் ஆலைகளில்
சருகுதிரும்.
இடைவெளியில் திக்கற்ற கன்றொன்று
தாயைத் தேடிவரும் – அப்போதும்,
தூரத்தில் நான் கேட்டேன்.

உலகருகே நிற்பேன்,
ஊரைக்காவலிடும் தென்னைகளில்
படரும் இருள் தூரத்தில்
அஞ்சிப்பறக்கும் சிலபறவை
தொடரவரும் பிறப்பெல்லாம்
எங்கோ தூரத்தில் கேட்டதுபோல்
குரலும் அதுகேட்கும்
என் குழந்தை நினைவெல்லாம்
தூரத்தில் நான் கேட்டேன்
குரல் ஒன்று
தூரத்தில் நான் கேட்டேன்



**- சண்முகம் சிவலிங்கம்.**
**("நீர் வளையங்கள்" கவிதைத்தொகுப்பு)**

# சாமானியனின் முகம் — 03

- சுகா -

எனக்குத் தெரிந்து மலையாளத்தில்தான் அதிக அளவில் சாமானிய முகங்கள், சர்வசாதாரணமாகத் திரையில் தோன்றி மின்னுகின்றன. இருபதாண்டுகளுக்கு முன் நான் பார்த்த கே.ஜி.ஜோர்ஜின் "மற்றோர் ஆள்" படத்தின் ஒரே ஒரு காட்சியில் வருகிற ஒரு முகத்தை என்னால் இன்றைக்கும் மறக்க முடியவில்லை.

நடிப்பதற்கான, வசீகர உடற்கட்டுக்கான எந்தவித பிரத்தியேக பளபளப்பையும் மலையாள நடிகர்களிடம் அங்குள்ள இயக்குநர்கள் எதிர்பார்ப்பதில்லை. நடிகர்களும் அதற்காக விசேஷமாக மினக்கெடுவதில்லை. நடிப்புக்கலையின் அடிப்படையான பல தகுதிகளை இயல்பாகவே அவர்கள் வளர்த்துக் கொள்கிறார்கள்.





அவர்களது தாய்ப்பாஷையின் அழகை, ,அதன் நுணுக்கங்களை, இலக்கணத்தோடு அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அவர்களது ஊரின் முக்கியமான இலக்கியப் படைப்புகளைப் பற்றி அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. உடை, உணவு, வாழ்வியல் முறை என அவர்களது கலாசாரத்தைத் தழுவியே பெரும்பாலும் அவர்களது வாழ்க்கைமுறை இருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக அவர்கள் மக்களோடு மக்களாக வாழ்கிறார்கள்.

ஆனால் தமிழ் சினிமாவில் ஒருவன் நடிகனாக வேண்டுமென்றால் அவன் வளர்த்துக் கொள்ளும் தகுதிகளே வேறு. முதலில் தன்னை சாமானியர்களிடமிருந்து விடுவித்துக் கொள்கிறார்கள். ஸ்டண்ட் மாஸ்டரிடம் ஃபைட்டும், டான்ஸ் மாஸ்டரிடம் டான்ஸும், கற்றுக்கொண்டு நிறைய ஜூஸ் குடித்து, இங்கிலீஷில் பேசுகிறார்கள். இவர்களது இலக்கே, நட்சத்திரமாவதுதான். நடிகனாவதுகூட இல்லை.

மலையாளத்தில் நட்சத்திரங்களான பின் அங்குள்ள நடிகர்கள், கலைஞர்கள் ஆக முயல்கிறார்கள். உதரணத்துக்கு மலையாளத்தில் ஒரு நடிகன் தயாரிக்கும் படத்தில் அவன் எல்லா கதாபாத்திரங்களுக்கு முன்னும் வந்து வலிந்து நிற்க மாட்டான். உச்ச நட்சத்திரமான மோகன்லாலிலிருந்து, சுரேஷ் கோபி, திலீப் வரை அவர்கள் அனைவருமே வானத்திலிருந்து குதித்த larger than life கதாபாத்திரங்களைத் தவிர்த்து விட்டு, மக்கள் மனதுக்கு நெருக்கமான கதாபாத்திரங்களை உருவாக்கும் இயக்குநர்களிடம் தங்களை ஒப்படைத்துக் கொள்கிறார்கள்.

கதகளி கலைஞனாக இயக்குநர் ஷாஜி கருணின் இயக்கத்தில் மோகன்லால் நடித்த "வானப்பிரஸ்தம்" திரைப்படத்தை அவரே தயாரித்தார். தேசிய விருது வழங்கி கௌரவப்படுத்தப்பட்டார்.

ஷேக்ஸ்பியரின் "ஒத்தெல்லோ" வைத் தழுவி இயக்குநர் ஜெயராஜால் எடுக்கப்பட்ட "களியாட்டம்" திரைப்படத்தில் நடித்தவர், பெரும்பாலான படங்களில், குளிக்கும் போதும்கூட துப்பாக்கியுடன் குளிக்கும் கோபக்கார போலீஸ் அதிகாரி சுரேஷ்கோபி. "தெய்யம்" கலைஞ ராக தன்னை மனதார மாற்றிக் கொண்டு நடித்த சுரேஷ்கோபியைத் தேடி வந்தது, தேசிய விருது.

கொச்சியிலுள்ள "கலாபவன்" குழுவில் மிமிக்ரி கலைஞனாக பயிற்சி பெற்று, பின் இயக்குநர் கமலிடம் உதவி இயக்குநராகப் பணிபுரிந்து, கதாநாயகனாகி புகழ் பெற்ற நட்சத்திரமான திலீப், தானே தேடிப் போய் இயக்குநர் டி.வி.சந்திரனைப் பார்த்து தான் தயாரிக்கும் படத்தை இயக்கச் சொன்னார்.

ஆனால் இன்றைய மலையாளத் திரையுலகம், வணிகரீதியாக எடுக்கப்படும் தமிழ்த் திரைப்படங்களின் பாதையைப் பின்பற்றி தனது சுயத்தை இழந்து வருவது வேதனையான ஒன்று.

அந்த வகையில் ஹிந்தித் திரையுலகம், முற்றிலுமாக ஒரு புதிய திசை நோக்கி ஆரோக்கியமாக பயணித்துக் கொண்டிருக்கிறது. எந்தவித கலாரசனையுமில்லாத மலிவான மசாலாப் படங்கள் ஒருபுறம் எடுக்கப்பட்டு வந்தாலும், விஷால் பரத்வாஜ், அனுராக் காஷ்யப், மதுர் பண்டார்கர், ரிதுபர்னோ கோஷ், திபாகர் பேனர்ஜி போன்ற நல்ல இயக்குநர்களைத் தேடிச் சென்று அங்குள்ள நட்சத்திரங்கள் நடிக்கின்றனர்.

அதுவும் இந்தியாவின் உச்ச நட்சத்திரமான



அமிதாப்பச்சன், தனது நட்சத்திர பிம்பத்தின் எந்த சாயலுமில்லாமல், பால்கி என்னும் இயக்குநரின் முதல் படத்தில் ஒரு சாமானியனாக நடிக்க முடிகிறது.

நடிகர்கள்தான் என்றில்லை. அழகுப்பதுமைகளாக திரையில் ஜொலித்துக் கொண்டிருந்த சில நடிகைகளும், வாழ்வின் யதார்த்தத்தை பிரதிபலிக்கிற கதைகளைத் தேடிப் போயினர். பல தென்னிந்தியத் திரைப்படங்களில் முழு மேக்கப்பில் நாம் பார்த்துப் பழகிய சௌந்தர்யாவின் அழகு பிம்பம்தான், அவரது அகால மரணத்துக்குப் பிறகு நம் மனதில் தங்கியுள்ளது.

புகழின் உச்சத்தில் இருக்கும்போது எல்லா நட்சத்திரங்களுக்கும் வரும் சொந்தப்படம் தயாரிக்கும் ஆசை, சௌந்தர்யாவுக்கும் வந்ததில் ஆச்சரியமில்லை. ஆனால் அதற்காக அவர் தேர்ந்தெடுத்த இயக்குநர், தன் வாழ்நாள் முழுதும் சமரசம் செய்து கொள்ளாமல் தீவிரமாக இயங்கி வரும் சொற்ப இந்திய திரைப்பட இயக்குநர்களில் ஒருவரான கிரீஷ் காசரவல்லி. சௌந்தர்யாவின் ஆத்மார்த்தமான கலாரசனைக்கு பலனாக அவரது தயாரிப்பில் உருவான "த்வீபா" கன்னடப் படத்துக்கு தேசிய விருது கிடைத்தது. அத்திரைப்படத்தில் எந்த ஒரு மிகை உணர்ச்சியும் காட்டாமல், ஒரு மலை கிராமத்துப் பெண்ணாகவே வாழ்ந்திருப்பார் சௌந்தர்யா.

---

# வல்லரசுகளின் பிடியில் சிக்கியிருக்கும் உலகு!

- எம். மணிகண்டன் -

ஈரான் என்றால் மத அடிப்படைவாதிகளின் நாடு என்கிற கருத்து உலகமெங்கும் விதைக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு ஏற்றாற்போல இஸ்ரேலை வரைபடத்தில் இருந்து அகற்றிவிடுவோம், ஹோமுரூஸ் நீரிணையை அடைத்து உலகத்துக்கே எண்ணெய் கிடைக்கவிடாமல் செய்துவிடுவோம் என்று ஈரான் தடாலடியாகப் பேசுகிறது. ஆனால் உண்மையில், இந்த இரண்டு செயல்களையும் ஈரானால் செய்யவே முடியாது.

ஹோமுரூஸ் நீரிணையைத் தடுத்தால், அதைத் தகர்ப்பதற்கு அமெரிக்கக் கடற்படைக்கு சில மணி நேரங்கள் போதும். இஸ்ரேல் மீது நேரடியாகத் தாக்குதல் நடவடிக்கையில் இறங்கினால், ஈரான்தான் வரைபடத்திலிருந்து காணாமல் போகும். தடாலடியாகப் பேசுவதெல்லாம் ஈரானுக்கேயுரிய வாய்ச்சவடால்தான்.

இப்படிப்பட்டவரின் கையில் அணு ஆயுதம் கிடைத்தால் என்ன ஆகும் என்பதுதான் உலகின் இப்போதைய கவலை.

அணு ஆயுதம் தயாரிப்பது என்பது இப்போது பிரச்சினையில்லை. அணு ஆயுதப் பரவல் தடுப்பு, பேரழிவு ஆயுதங்கள் ஒழிப்பு பற்றி முன்னர் கொடுத்த வாக்குறுதிகளையெல்லாம் எல்லா நாடுகளும் எப்போதோ வசதியாக மறந்துவிட்டன. இப்போது உலகம் விவாதித்துக் கொண்டிருக்கும் பிரச்சினை, யாரெல்லாம் அணுஆயுதத்தைத் தயாரிக்கலாம், வைத்திருக்கலாம் என்பதுதான்.

சரி, எந்தெந்த நாடெல்லாம் அணு ஆயுதங்களை வைத்திருக்கலாம் என்பதை யார்தான் தீர்மானிப்பது? அமெரிக்காவும் பிரிட்டனும்தான் என்றால், வரலாற்றில் பலமுறை துரோகம் இழைத்திருக்கும் இந்த இரு நாடுகளையும் யார் நம்புவார்கள்? அதுவும் ஈரான் எப்படி இவர்களை மேற்பார்வையாளர்களாக ஏற்கும்?

"நீ எந்த ஆயுதத்தை எடுக்க வேண்டும் என்பதை உனது எதிரிதான் தீர்மானிக்கிறான்" என்பார்கள். அந்த வகையில் ஈரான் அணு ஆயுதம் தயாரிக்கிறது என்று வைத்துக்கொண்டால், அதற்கு முழுக்க முழுக்க அமெரிக்காவும் பிரிட்டனும்தான் காரணம்.

இங்கே ஒரு வரலாற்றுச் சம்பவத்தை நினைவுபடுத்தியாக வேண்டும். இன்றைக்கு இஸ்லாமிய அடிப்படைவாத நாடு என்று கேலியாகச் சித்திரிக்கப்படும் ஈரான், ஒரு காலத்தில் முழுமையான ஜனநாயக நாடாக இருந்தது.

1950 - களில் அங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் ஆட்சி நடந்து வந்தது. முகமது மொசாதே பிரதமராக இருந்தார். பல்வேறு பொருளாதாரச் சீர்திருத்தங்களைச் செய்தார். அதில் ஒன்றுதான் எண்ணெய் வளத்தை நாட்டுடைமையாக்குவது. ஈரானில் கிடைத்த எண்ணெயில் 80 சதவிகிதம்வரை உறிஞ்சிக் கொண்டிருந்த பிரிட்டனுக்கு மொசாதேயின் இந்த நடவடிக்கை பேரதிர்ச்சியாக இருந்தது.



ஜனநாயகத்தின் காவலர்கள் என்று பல நூற்றாண்டுகளாகக் கூறிக் கொண்டிருக்கும் அமெரிக்காவும், பிரிட்டனும் அன்று ஓர் அற்பமான செயலைச் செய்தன. தங்களது நாடுகளின் உளவு அமைப்புகளை ஏவிவிட்டு, ஜனநாயக அரசுக்கு எதிரான குழுக்களைத் தூண்டின.

"ஒபரேஷன் அஜாக்ஸ்" என்கிற பெயரில் சி.ஐ.ஏ நடத்திய அந்த மாபெரும் அரசியல் மோசடியில், அரசியல்வாதிகள் முதல் உள்ளூர் ரௌடிகள் வரை பல தரப்பினருக்கும் லஞ்சம் கொடுக்கப்பட்டது. அதிருப்திக் குழுக்களுக்கு நிதியுதவி செய்தார்கள். இதைத் தொடர்ந்து, நாடு முழுவதும் போராட்டமும் வன்முறையும் நடந்தன. அதைப் புரட்சி என்று ஊடகங்களில் எழுத வைத்தார்கள்.

முடிவில் மொசாதேவின் ஆட்சியை அகற்றி பிரிட்டனும் அமெரிக்காவும் தங்களது ஆசைகளை நிறைவேற்றிக் கொண்டன.

இவையெல்லாம் வெறும் கற்பனையோ கதையோ கிடையாது. சி.ஐ.ஏ.வின் ஆவணங்களிலும், பிற நூல்களிலும் இந்தச் சதித் திட்டம் குறித்த ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன.

ஈரானில் அகமதிநிஜாத்தை எதிர்த்து பச்சை இயக்கம் என்கிற பெயரில் போராடித் தோற்றுக் கொண்டிருக்கிறார்களே, அவர்களெல்லாம் மொசாதேவின் வழிவந்தவர்கள்.

அன்றைக்கு மொசாதேவின் ஜனநாயக அரசை சதி செய்து தூக்கி எறிந்தவர்கள்தான், அகமதிநிஜாத்தை எதிர்க்க வேண்டும் என்பதற்காக பச்சை இயக்கத்துக்கு ஆதரவாக இப்போது பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுகிறது என்று கூறுவது இதைத்தான்.

மேற்கத்திய நாடுகள் என்ன குற்றச்சாட்டுகளை முன்வைத்தாலும், அணு ஆயுதம் தயாரிப்பது எங்கள் நோக்கமில்லை என்றுதான் ஈரான் தொடர்ந்து கூறி வருகிறது.

ஒருவேளை அணுஆயுதம் தயாரிக்க முயன்றாலும், இன்றைய சூழலில் அதற்கான முழு உரிமையும், தேவையும் ஈரானுக்கு இருக்கிறது என்பதை கடந்த காலச் சம்பவங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

அமெரிக்கா குற்றம்சாட்டியதைப் போல இரசாயன ஆயுதங்கள் ஈராக்கில் இருந்திருந்தால், சதாம் உசேனை இப்படித் தூக்கில் தொங்கவிட்டிருக்க முடியாது. அமெரிக்காவின் பேச்சுக்கு ஏமாறாமல், தனது அணு ஆயுதத் திட்டங்களைத் தொடர்ந்திருந்தால், கடாஃபிக்கு இப்படியொரு இழிநிலை நேர்ந்திருக்காது.

லிபியா, ஈராக், ஆப்கானிஸ்தான் போன்றவற்றின் அழிவுக்குக் காரணம், அவற்றிடம் பேரழிவு ஆயுதங்கள் இல்லாததுதான். வடகொரியாவை நெருங்க முடியாததற்குக் காரணம் அவர்களிடம் அணுகுண்டுகள் இருப்பதுதான். இந்த உண்மையை மறுப்பதெப்படி?

இப்படியொரு சூழலில், அமெரிக்காவுக்கு நேரடியாகச் சவால்விட்டுக் கொண்டிருக்கும் ஒரு நாடு, பேரழிவு ஆயுதங்களை வைத்திருக்கக்கூடாது என்று கூச்சலிடுவது, அந்த நாட்டை ஒழிப்பதற்கான சூழ்ச்சியல்லாமல் வேறென்ன?

அணுஉலை, அணுகுண்டுகளுக்கு நாம் எதிரானவர்களாக இருக்கலாம். அதே நேரத்தில், லிபியாவுக்கும் ஈராக்குக்கும் ஏற்பட்ட நிலை தனக்கு ஏற்படாமல் இருக்க அணு ஆயுதம் அவசியம் என்று ஈரான் கருதுவதை எப்படித் தவறு என்று கூறமுடியும்?

புரட்சிகர பாடகர் டிரேசி சாப்மன் பாடல் வரிகளில் குறிப்பிடுவதைப் போல, ஏவுகணைகளைக் கொண்டு மக்களைக் கொல்லும் படைகளைத் தான் நாம் அமைதி காக்கும் படைகள் என்கிறோம்.

வல்லரசுகளின் தந்திர அரசியலில் சிக்கியிருக்கும் இந்த உலகில் வெறுப்புதான் அன்பு, பொய்தான் உண்மை, போர்தான் அமைதி.

# சட்டவிரோதமாக புலம்பெயர்ந்தவர்கள் விபரங்களை வெளியிட முடியுமா?

## ஐ.நா. விடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற காலத்தில் நாட்டை விட்டு புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் பற்றிய தகவல்களை வழங்குமாறு அவர்களின் உறவினர்கள் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் பல தமிழர்கள் நாட்டை விட்டு சட்டவிரோதமான முறையில் புலம்பெயர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நாட்டை விட்டு வெளி யேறிய பலர் பற்றிய எவ்வித தரவுகளும் இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

சிலர் மோசமான சட்டவிரோத ஆட்கடத்தல் கும்பல்களிடம் சிக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்ரேலியா கனடா போனற நாடுகளுக்கு அழைத்துச் செல்வதற்காக 25000 முதல் 50000 அமெரிக்க டொலர்கள் வரையில் ஆட்கடத்தல்காரர்கள் அறவிட்டுள்ளனர்.

இந்தியா, தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளுக்கு முதலில் அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து படகு மூலம் அவுஸ்ரேலியா போன்ற நாடுகளுக்கு இலங்கையர்கள் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இவ்வாறான பயணங்களின் போது பல இலங்கையர்கள் காணாமல் போயுள்ளனர். மேலும் சிலர் குறித்த நாடுகளின் அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.


இரண்டு ஆண்டுகளுக்கு முனனர் படகு மூலம் அவுஸ்ரேலிய நோக்கிப் புறப்பட்டுச் சென்ற தனது கணவரான ஜயவீரசிங்கம் சிவகுரு என்பவர் பற்றிய எவ்வித தகவல்களும் இதுவரையில் கிடைக்கவில்லை என அவரது மனைவி கோகிலா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழினி என்பவர் தனது சகோதரனைக் காணவில்லை என தெரிவித்துள்ளார்.

வீடுகளையும் நகைகளையும் அடகு வைத்து இவ்வாறு வெளிநாடுகளுக்கு பயணம் செய்கின்றனர்.

இதேவேளை, காணாமல் போனவர்களை கண்டு பிடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் பொலிஸ் துறை ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

காணாமல் போனவர்களை கண்டு பிடிக்க இன்டர்போலின் உதவியையும் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.



நாடு பூராகவும் மேற்கொள்ளப்பட்ட வீட்டுத்தோட்ட விதை தானியம் வழங்கும் நிகழ்வுகளில் தொல்புரம் கிராமசேவையாளர் பிரிவில் பயனாளி ஒருவருக்கு கிராமசேவையாளர் கணேசலிங்கம் விதை பொருட்கள் வழங்குவதைக் காணலாம்.

# இராஜதந்திர துஷ்பிரயோகம் நெருப்பு எடுக்கும் எதிர்க்கட்சிகள்

## சூடுபிடிக்கிறது பிரசன்ன டி சில்வா விவகாரம்

(லண்டன்)

லண்டனில் இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றும் மேஜர் ஜெனரல் பிரசன்ன டி சில்வா விடயத்தில் இராஜதந்திரப் பாதுகாப்பு துஷ்பிரயோகம் செய்யப்படுகிறதா என்பது குறித்து விசேட விவாதம் நடாத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

பிரிட்டனிலுள்ள இலங்கை உயர ஸ்தானிகராலயத்தில் பாதுகாப்பு விவகார அதிகாரியாக பணியாற்றும் மேஜர் ஜெனரல் பிரசன்ன டி சில்வா மீதான போர்க் குற்றச்சாட்டுகள் குறித்து பிரித்தானிய நாடாமன்றத்தில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சியோபாய்ன் மெக்டொனாக் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேஜர் ஜெனரல் பிரசன்ன டி சில்வா விசாரிக்கப்படாமல் நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்கப்பட்டால் அது போர்க் குறறவாளிகள் சகித்துக்கொள்ளவதில்லை என்ற பிரிட்டனின் புகழுக்கு பங்கமாகி விடும் என பிரித்தானிய நாடாளுமன்றத்தில் தொழிற்கட்சி எம்.பி.யான மெக்டொனாக் வியாழனன்று கூறினார்.

மேஜர் ஜெனரல் பிரசன்ன டி சில்வா மீதான போர்க் குற்றச்சாட்டுகள் குறித்த குறிப்பொன்று 3 மாதங்களுக்குமுன் பிரித்தானிய வெளிவிவகார அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டதாகவும் ஆனால் அவர் மீதான ராஜதந்திரப் பாதுகாப்பை விலக்குவதற்கு அவ்வலுவலகம் மறுத்துவிட்டதாகவும் மெக்டொனாக் கூறினார்.

இது குறித்தும் ராஜதந்திர பாதுகாப்பு துஷ்பிரயோகம் செய்யப்படுவது குறித்தும் விவாதமொன்றை நடத்தலாம் என எண்ணுகிறேன். அவர் விசாரிக்கப்படாமல் வெளியேற அனுமதிக்கப்பட்டால் போர்க் குற்றவாளிகள் சகித்துக்கொள்ளவ தில்லை என்ற பிரிட்டனின் புக ழுக்கு பங்கமாகிவிடும்.

இலங்கை மீது நாம் மென்போக்கைக் காட்டினால், நாம் அட்டூழியங்களை புரிபவரகளுக்கு அடைக்கலம் வழங்குபவர்கள் என ஏனைய ஆட்சியாளர்களும் நிச்சயமாக கருதத் தொடங்குவர் என அவர்கூறினார்.

# வங்கி ஊழியர்கள் போராட்டம் யாழ். வாடிக்கையாளர் ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை வஙகிக் கிளைகள் யாவும் பூட்டபட்டிருந்தன.

சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைதது இலங்கை வங்கி உழியர்களால் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் காரணமாக பல்வேறு தேவைகள் நிமிர்த்தம் வங்கிக் கிளைகளுக்குச் செல்லும் வாடிக்கையாளர் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

குறிப்பாக சனிக்கிழமை விடுமுறை தினங்களில் வங்கிக் கிளைகள் கடந்த காலங்களில் திறக்கப்பட்டமையால் அரச மற்றும் தனியர்துறை ஊழியர்கள் பெரிதும் நன்மையடைந்தனர்.

எனினும் ஊழியர்களின் இவ்வாறான போராட்டங்கள் காரணமாக பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, இது விடயத்தில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (26)

# கப்பம் பெற்ற பொலிஸார் பணிநீக்கம்

(கொழும்பு)

தமபதியினரிடமிருந்து பலவந்தமாக 20 ஆயிரம் ரூபாவை பெற்றுக் கொண்ட மூன்று பொலிஸ் கான்ஸ்டபில்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்ற திடலுக்கருகில் கார் ஒன்றுக்குள் இருந்த தம்பதியினரிடமிருந்து குறித்த கான்ஸ்டபில்கள் பணத்தை பலவந்தமாகப் பெற்றுள்ளனர். இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மிரிஹானா பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு கான்ஸ்டபில்கள், ஹோமாகம பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஒரு கான்ஸ்டபில் ஆகியோருக்கு எதிராக தம்பதியினரால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

# குடிநீரில் மலக்கழிவு நோய்த் தாக்கத்தில் மக்கள்

## லிந்துலை பிரதேசத்தில் தலைவிரித்தாடும் சுகாதாரச் சீர்கேடு

(கொழும்பு)

லிந்துலை பிரதேசத்தில் பரவிய வயிற்றோட்டத்திற்கு குடிநீரில் மலம் கலந்தமையே காரணம் என பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தலவாக்கலை - லிந்துல நகரசபையின் தலைவர் அசோக்க சேபால தெரிவிக்கின்றார்.

இதனுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

நீர் மாதிரிகள் அரச வைத்திய பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பப்பட்டு, அதற்கான அறிகை தமக்கு கிடைக்கப்பெற்றதாக அவர் குறிப்பிட்டார்.

மலம் கலந்த நீரிலுள்ள ஒருவகையான பக்ரீரியாவே வயிற்றோட்டம் ஏற்படுவதற்கான காரணம் என பரிசோதனைகளில் கண்டறியப்பட்டதாக அவர் கூறினார்.

பொதுமக்களின் சுகாதார நிலைமையினைக் கருத்திற்கொண்டு எதிர்வரும் திங்கட்கிழமை, பாவனைக்கு உதவாத நீரினை விநியோகித்தமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தலவாக்கலை - லிந்துல நகரசபையின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

எவ்வாறயினும் மலம் கலந்த குடிநீரை விநியோகித்ததாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை முழுமையாக நிராகரிப்பதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் கருணாசேன ஹெட்டியாராச்சி குறிப்பிட்டார்.

கடற்தொழிலுக்கு கட்டுப்பாடு காரணமாக வெய்யிலில் உறங்கும் மீன்பிடிப் படகுகள் வேறு எங்கும் அல்ல சுழிபுரம் திருவடிநிலைக் கடற்கரையில்தான்.




# வளர்ப்பு பெண் நாய்களுக்கான கருத்தடை சத்திர சிகிச்சை

(கொழும்பு)

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவில எதிர்வரும் 23.04.2012 தொடக்கம் 25.04.2012 ஆம் திகதி வரை வளர்ப்பு பெண் நாய்களுக்கான இலவச கருத்தடை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

23.04.2012 ஆம் திகதி அராலிப் பொதுச் சுகாதார பரிசோதகர பரிவில் அராலி தெற்கு கிராம முன்னேற்றச் சங்கம், செட்டியார் மடம், அராலி மத்தி கிராம சேவகர அலுவலகத்திற்கு அருகாமையிலும் 24.04.2012 ஆம் திகதி சங்கானை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட நிச்சாமம் சரஸ்வதி சனசமூக நிலையம், அராலி வீதி குடியேற்றத் திட்டம், சங்கானை மீன் சந்தைக்கு அருகாமையிலும், 25.04.2012 ஆம் திகதி வட்டுக் கோட்டை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட முதலி கோவிலடி அம்பாள் சனசமூக நிலையம், செம்பாட்டான்தோட்டம் பொது நோக்கு மண்டபம், வட்டுக்கிழக்கு அறிவொளி சன சமூக நிலையம், துணவி வளர்மதி சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் வளர்ப்பு பெண் நாய்களுக்கான கருத்தடை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது. எனவே வளர்ப்பு நாய் உரிமையாளர்கள் அப்பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர்களுடன் முற்பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.



# கல்வி முரசு

## ஆங்கிலம் மூலம் அறிவோம்



# The Little Pink Rose

**-Adapted from a story by Sara Cone Bryant**



Once there was a little pink Rosebud, and she lived down in a little dark house under the ground. One day she was sitting there, all by herself, and it was very still. Suddenly, she heard a little TAP, TAP, TAP, at the door.

"Who is that?" she said.

"It's the Rain, and I want to come in;" said a soft, sad, little voice.

"No, you can't come in," the little Rosebud said.

By and by she heard another little TAP, TAP, TAP on the window pane.



"Who is there?" she said.


The same soft little voice answered, "It's the Rain, and I want to come in!"

"No, you can't come in," said the little Rosebud.

Then it was very still for a long time. At last, there came a little rustling, whispering sound, all round the window: RUSTLE, WHISPER, WHISPER.

"Who is there?" said the little Rosebud.

"It's the Sunshine," said a little, soft, cheery voice, "and I want to come in!"



"N—no," said the little pink rose, "you can't come in." And she sat still again.

Pretty soon she heard the sweet little rustling noise at the key-hole.

"Who is there?" she said.

"It's the Sunshine," said the cheery little voice, "and I want to come in, I want to come in!"

"No, no," said the little pink rose, "you cannot come in."

By and by, as she sat so still, she heard TAP, TAP, TAP, and RUSTLE, WHISPER, RUSTLE, all up and down the window pane, and on the door, and at the key-hole.

"WHO IS THERE?" she said.


"It's the Rain and the Sun, the Rain and the Sun," said two little voices, together, "and we want to come in! We want to come in! We want to come in!"

"Dear, dear!" said the little Rosebud, "if there are two of you, I s'pose I shall have to let you in."

So she opened the door a little wee crack, and in they came. And one took one of her little hands, and the other took her other little hand, and they ran, ran, ran with her, right up to the top of the ground. Then they said,—


"Poke your head through!"


So she poked her head through; and she was in the midst of a beautiful garden. It was springtime, and all the other flowers had their heads poked through; and she was the prettiest little pink rose in the whole garden!




# Abbreviations / Acronyms


ICC - International Criminal Court
ICCPR - International Covenant on Civil and Political Rights
ICERD - International Convention on the Elimination of All Forms of Racial Discrimination
ICESCR - International Covenant on Economic> Social and Cultural Rights
ICRC - International Committee of the Red Cross
ILO - International Labour Organization
IPKF - Indian Peace Keeping Forces
LTTE - Liberation Tigers of Tamil Eelam
NGO - Non-governmental organization
OHCHR - Office of the High Commissioner for Human Rights
RAW - Research and Analysis Wing
UDHR - Universal Declaration of Human Rights
UN - United Nations
UNAMIR - United Nations Assistance Mission for Rwanda
UNAMSIL - United Nations Mission in Sierra Leone
UNAVEM III - United Nations Angola Verification Mission III
UNCLOS - United Nations Convention on the Law of the Sea, also known as LOS
UNCRO - United Nations Confidence Restoration Operation in Croatia
UNCTAD - United Nations Conference on Trade and Development
UNDCP - United Nations Drug Control Programme UNDOF United Nations Disengagement Observer Force
UNDP - United Nations Development Programme
UNEP - United Nations Environment Programme UNESCO United Nations Educational, Scientific, and Cultural Organization
UNFICYP - United Nations Peacekeeping Force in Cyprus
UNFPA - United Nations Population Fund
UNHCR - United Nations High Commissioner for Refugees
UNHCRHR - United Nations High Commissioner for Human Rights
UNICEF - United Nations Children's Fund
UNICEP - United Nations International Comparison Programme
UNICRI - United Nations Interregional Crime and Justice Research Institute
UNIDIR - United Nations Institute for Disarmament Research
UNIDO - United Nations Industrial Development Organization
UNIFIL - United Nations Interim Force in Lebanon
UNIKOM - United Nations Iraq-Kuwait Observation Mission
UNITAR - United Nations Institute for Training and Research
UNMEE - United Nations Mission in Ethiopia and Eritrea
UNMIBH - United Nations Mission in Bosnia and Herzegovina
UNMIK - United Nations Interim Administration Mission in Kosovo
UNMIL - United Nations Mission in Liberia
UNMIS - United Nations Mission in the Sudan
UNMISET - United Nations Mission of Support in East Timor
UNMOGIP - United Nations Military Observer Group in India and Pakistan
UNMOP - United Nations Mission of Observers in Prevlaka
UNMOT - United Nations Mission of Observers in Tajikistan
UNMOVIC - United Nations Monitoring and Verification Commission
UNOMIG - United Nations Observer Mission in Georgia
UNOCI - United Nations Operation in Côte d'Ivoire
UNOMSIL - United Nations Mission of Observers in Sierra Leone
UNOPS - United Nations Office of Project Services
UNRISD - United Nations Research Institute for Social Development
UNRWA - United Nations Relief and Works Agency for Palestine Refugees in the Near East
UNSC - United Nations Security Council
UNSMIH - United Nations Support Mission in Haiti
UNSSC - United Nations System Staff College
UNTAET - United Nations Transitional Administration in East Timor
UNTSO - United Nations Truce Supervision Organization
UNU - United Nations University
USA - United States of America *(to be continued)*




*(to be continued)*



# கல்வி முரசு

## ஆங்கிலம் மூலம் அறிவோம்



# Mom Advice: How to Be Proper

**எங்கட அம்மாக்களைப் போல வெளிநாட்டு அம்மாமாரும் தங்கட பிள்ளைகளுக்கு ஏதோ சொல்லிக்கொண்டு தான் இருக்கினம்...**



A simple lesson in manners paid off big time for Academy Award-winning actress Sissy Spacek

Mother would set the table properly for every meal and instruct us on the correct use of silverware, which seemed kind of useless to me. "Why do we have to learn stupid manners?" I'd complain. "It's just gonna slow us down, and we're hungry."


"Because I want you to be able to dine with the president," she would say.

"Oh, Mother, that's crazy."

But sure enough, an invitation came one day from the White House, and I was ready. Thanks, Mother

By Sissy Spacek from Reader's Digest | May 2012

**வான வெளியிலும் இந்தப் பிரச்சனை இருக்கத்தான் செய்யுது!**




"Can you hear me now?"

**தற்போது மேல்நாட்டவர் போல் எங்களுடைய வாழ்விலும் மணமுறிவு ஏற்படுவது அதிகமாக இருக்கின்றது. அதனைத் தவிர்ப்பதற்கு ஒரு யோசனை.**




## The Happy Relationship Tips to Avoid Marriage Counseling

**Build healthy boundaries**

Marriages need what experts call a semi-permeable boundary that allows friends and family to connect with you but that doesn't interfere with your own desires and plans. This can be especially complicated when it comes to your families of origin.

The biggest challenge is often deciding how you'll handle the holidays. Will it be his family's house, yours, or will you start a new tradition in your own home? How often will you talk on the phone or visit—and how much will you share about the details of your marriage? "Parents can work with or against a new couple," Claudia Arp says. "They need to be getting on with their own marriage, going from being child-focused to partner-focused. Your marriage can be a transition time for them as well. Don't cut them off—you really need that love and support. Do communicate your decisions about your needs in a kind, calm way."

## The ABCs of Color: 7 Color Psychology Tips for Your Home



**The hues chosen for a room's walls and ceiling can help determine whether your interior design is a hit or miss. Here are a few color psychology tips to keep in mind when planning your home's color scheme.**

The hues chosen for a room's walls and ceiling can help determine whether your interior design is a hit or miss. Here are a few color psychology tips to keep in mind when planning your home's color scheme.

1.Bright colors — that is, **vibrant shades of green and blue, yellow, and orange** — provide an expansive feeling. These are friendly, happy colors that encourage communication and are therefore especially welcome in the dining area and kitchen.

2. Dark colors, such as **red, purple, blue, and dark shades of green**, can have a constricting and gloomy effect. But when applied in the right place or as accent elements, they can help convey comfort and security.

3. Warm colors — **orange and yellow** hues, for example — raise the perceived temperature of a room. For that reason, they're best used in rooms that face north. Because they inspire activity, avoid them in rooms meant for relaxation, like the bedroom.

4. Cold colors, such as **icy blues and green**, have a calming effect. They are especially well-suited for bedrooms; they help you to go to bed relaxed in the evening and wake up refreshed the next morning.


5. **Navy blue** inhibits people's willingness to com -municate; do not use it in living and dining areas.

6. **Red** raises the energy level of a room, but it may also make people more irritable and hostile — so it's not a good choice for a child's room. Use it as an accent rather than a base room color.

7. **Gray** should be avoided for the dining area and kitchen — unless you want to dampen your appetite.

**ஆங்கிலத்தில் காதல் கடிதம் எழுதுவதும் வாசிப்பதும்**

## How to Write (and Read) a Love Letter



One man's advice for composing the perfect mash note.

A long time ago, when I was living in my favorite apartment behind a bamboo patch in Tuscaloosa, Alabama, I wrote my first love letter. It was a liquid hot afternoon, and I was sitting on my screened porch, enjoying my boredom, thinking that I was full up with the very thought of her. I drew a pretty cool heart on a piece of newsprint, rolled that into a manual typewriter, and then pecked out about 15 sentences. I took more than an hour. I had to. I couldn't edit, and I couldn't use Write-Out. It worked too. That woman was happy.

So happy that she stuck it on the door of her refrigerator, where it clung to a magnet-laden collage of birthday cards, Easter cards, thinking-of-you cards. This irked me. "It's a love letter," I told her. "It's only for you. You're supposed to save it. It's supposed to be folded up in a book somewhere." She didn't get it. She treated it like a card.

When it comes to writing a love letter, remember: It's not a card. It's a letter.

**First, sit. Letters take time.**

Letters have a rhythm. Letters must be written, and writing takes a while. Three lines can't do the work of three paragraphs. This is not to say your letter must be long. Three paragraphs can do the work of three pages. Just give them some time.

**Be loyal to the past you share.**

If your love emerged on a kayak trip, then you don't just mention that experience — you make it. Let the river become your palette. Tell a story that only the two of you know. Or narrate a moment in which she was unaware that you were watching her. Use detail to show what you remember and that you remember.

**Let the example precede sentiment.**

A good love letter declares itself plainly, then illustrates particularly. "I saw you watching the men play chess in the park. So quiet. I love the way you look at things." Show her what you love in her before you tell her what you love in her. Show, then tell.

**Don't repeat yourself.**

Emotional declarations matter more if you space them a little. Even in a short letter, you must create room. With love, there's value in scarcity. That's why it feels like such a jackpot.

**Most of all, remember that it's private.**

Say something that surprises you about yourself. Let her know that she is redefining your terms. In this way most, a love letter is like love itself. There must be risk.

By Tom Chiarella | from Esquire from Reader's Digest | February 2012

# போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேலை வழங்கத் தயார்

## Eut தளபாட நிலைய தொழிலதிபர்



போரினால் பாதிக கப்பட்டவர்கள், புனர்வாழ்வளிக்கப் பட்டவர்களுக்கு கல்வித் தகைமையின் அடிப்படையில் தொழில் வாய்ப்புகள் மற்றும் தொழிற் பயிற்சிகளை வழங்கத் தயாராக உள்ளதாக Eut தளபாட உற்பத்தி மற்றும் விற்பனை நிலைய தொழிலதிபர் வே.ஸ்ரீஸ்கந்தராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தின் அனைத்து பிரதேச நுகர்வோரையும் இணைக்கக்கூடிய மத்திய பகுதியான சுன்னாகத்தில் இந்தத் தளபாட உற்பத்தித் மற்றும் விற்பனை நிலையத்தில, ஆண்கள் பெண்கள் என இருவரையும் இணைத்து பயிற்சிகள் வழங்கப்பட்டு, பயிற்சிக் காலங்களில் 5000 ரூபா சம்பளம் வழங்கப்படுகின்றது. பின்னர் அவர்களின் வேலைகளுக்கு ஏற்றவாறு 10,000 தொடக்கம் 25000 ரூபா வரை சம்பளம் வழங்கப்படுவதுடன், ஓய்வூதியத் திட்டங்களும் வழங்கப்படுகின்றன. இருப்பினும் எவரும் நிலைத்து வேலை செய்வதில் ஆர்வம் காட்டுவதில்லை, படித்தவர்கள் அனைவரும் அரசாங்க வேலையை விரும்புகின்றனரே தவிர இப்படியான வேலைகளைச் செய்ய முன்வருபவர்கள் குறைவாகவே உள்ளனர் என்றும் கூறினார்.

ஆரம்பத்தில் இங்கு மரத்திலாலான மூலப் பொருட்களை மட்டுமே கொண்டு உற்பத்திசெய்யப்பட்ட தளபாடங்கள், தற்போது மலேசியாவிலிருந்து பல வகையான பிளாஸ்ரிக், இரும்பு, அலுமினியம், போன்ற மூலப்பொருட்களை இறக்குமதி செய்து, நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய தளபாடங்கள் உற்பத்தி செய்யப்படுவதாகவும், 15 வருடங்களை கடந்து 20இற்கும் மேற்பட்ட பயிற்றப்பட்ட நிரந்தர ஊழியர்களுடன் சிறப்பாக செயற்படும் இந்த Eut (ஐக்கிய நம்பிக்கை உபகரணம்) நிறுனத்தின் வளர்ச்சிக்கு தான் வடிவமைப்பு மீது கொண்ட ஆர்வமே காரணம் எனவும் நிறுவனத்தின் தொழிலதிபர் குறிப்பிட்டார்.

இங்கு உற்பத்திசெய்யப்படும் தளபாடங்கள் தற்போது வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய மாவட்டங் களுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் அவர் கூறினார்.

Eut தளபாடங்களுக்கு மக்கள் மத்தியில் அமோக வரவேற்புக்காணப்படுவதால் அவர்களின் தேவையைப்பூர்த்தி செய்வதே எமது கடமையாக உள்ளபோதும், மூலதனப்பற்றாக்குறை, இடவசதியின்மை, ஊழியர் பற்றாக்குறை என்பன எமக்குப் பெரும் சவாலாகவே உள்ளது. அத்துடன், வங்கியினால் வழங்கப்படும் கடன்கள் வியாபாரத் தேவைகளுக்குப் போதுமானத்ாக இல்லை.

அத்துடன், போரினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களுக்கு தொழில வாய்ப்புக்கள் மற்றும் தொழிற் பயிற்சிகளைக் கொடுப்பதற்குத் தயாராக உள்ளபோதும் எவரும் வேலைசெய்ய முன்வருகிறார்கள் இல்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (சி)

# பத்து வருடங்களி பயன்தரும் முந்திரிகை

## - முன்னோடிச் செய்கையாளர் சா.தங்கராசா





(பகீ)

கொடி முந்திரிகைச் செய்கை மூலம் பத்துவருடங்களுக்கு பயன்பெறமுடியும் எனவும், இதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்பை வழங்க முடியும் என்றும் இணுவில் கிழக்கு கலாயோதி கிராமத்தில் 30 வருடங்களுக்கு மேலாக முந்திரிகைச் செய்கையில் ஈடுபட்டுவரும் சா.தங்கராசா என்பவர் கூறினார்.

தனது தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 1000ரூபா வழங்கப்படுவதாகவும், வருடத்தில் 3 மாதங்களைத் தவிர ஏனைய மாதங்களில் இவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

10 பரப்பு நிலப்பரப்பில் முந்திரிகைச் செய்கை மேற்கொளளும் இவர், இதற்கென 600,000 ரூபா செலவுசெய்துள்ளதாகவும், இதனால் தனக்கு இலாபம் கிடைப்பதாகவும் கூறியதுடன், தனது தோட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் முந்திரிகை நேரடியாக கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும், தென்னிலங்கையில் இருந்து வருபவர்களிடம் உடன் காசுக்கு விற்பனை செய்யவதாகவும் கூறினார்.

அத்துடன், உள்ளூர்ச் சந்தை வியாபரிகள் மற்றும் ஏனைய கொள்வனவாளர்கள் 1கிலோ முந்திரிகைப்பழத்தினை 200 ரூபாவிற்கு வாங்கிச் செல்வதாகவும், இம்முறை தனது தோட்டத்தில் அதிக விளைச்சல் கிடைத்துள்ளமையால் இதிலிருந்து முந்திரிகைப்பழ வயின் தயாரிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, இணுவில் பிரதேசத்தில் முந்திரிகைச் செய்கை பண்ணும் நிலத்தில் மண்ணாய்வுகள் எதுவும் மேற்கொள்ளப் படாமல் இருப்பதனால் பழங்களின் சுவை மாறுபட்டுக் காணப் படுவதாகவும், புதிய இனங்களை நடமுடியாதுள்ளதாகவும், அவர் கவலை தெரிவித்தார்.

யாழ்பாணத்தில் தற்போது இளவாலை, சிறுப்பிட்டி, இருபாலை, நெல்லியடி, பருத்தித்துறை, இணுவில் ஆகிய பிரதேசங்களில் முந்திரிகைச் செய்கை மேற்கொள்ளப்படு கின்றமை குறிப்பிடத்தக்கது.

(சி)

## - மாடு திணறியதால் -

# சுவர் இடிந்து வீழ்ந்து குடும்பஸ்தர் படுகாயம்

(அனு,கஜா)

பண்டத்தரிப்பு பிரான்பற்று பகுதியிலுள்ள வீடொன்றின் சுவர் இடிந்து விழுந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

வீட்டின் முன்பக்க விறாந்தையின் தூணில் கட்டப்பட்டிருந்த மாட்டை அவிழ்க்க முற்பட்டபோது, மாடு திணறியடித்ததனாலேயே வீட்டின் சுவர் இடிந்து குறிப்பிட்ட நபரின் தலையில் வீழ்ந்து மூளை வெளியில் வந்துள்ளது.

இதனைக் கண்ட அயலவர்களால் குறித்த நபர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# பதிவிறக்கப் பெட்டகம்

வான்கோவின் ஒரு ஓவியத்தில் பயனிழந்த பிய்ந்த செருப்புகள் மட்டும் உள்ளன. ஏதோ ஒரு ஏழை விவசாயியின் செருப்புகள். பலமுறை தைத்து உபயோகப்படுத்தியவை. இன்று இவற்றைக் கலைக்கூடத்தில் மக்கள் வரிசையாக நின்று பார்த்து மகிழ்கிறார்கள். வான்கோ செய்தது என்ன? அவற்றை அடையாளப்படுத்துகிறான். தன் கலையின் மூலம் அவற்றின் அக உண்மையைத் துலங்கச் செய்தான். சாலையோரம் கிடக்கும பழைய செருப்பு ஒரு குப்பை. வான்கோ அதில ஓர் ஏழையின் விடாப்பிடியான, துயரம் தோய்ந்த, உழைப்பு நிரம்பிய வாழ்வைக காட்டினான். க்ரிச் சுரங்கத் தொழிலாளிகள் அமர்ந்திருக்கும் விதத்தில் "கிறிஸ்துவின் கடைசி உணவு" எனும் புராதன ஓவியத்தைப் பிரதிபலிக்க வைத்து மானுடத் துயரத்தின் தொடர்ச்சியைக் காட்டினான். நமது அன்றாட வாழ்வில நாம் தவறவிடும் உண்மையை கலைஞன் அழுத்திக் காட்டியதும் நாம் அறிந்து பரவசமடைகிறோம். அப்பரவசமே அதை அழகுடையதாக ஆக்குகிறது. பிரியம் தருவது அழகு. உவபபுத் தருவது அழகு. மனதின் பழக்கம் உண்மையை விரும்பாத போது உண்மை அழகற்றதாக ஆகிவிடுகிறது. **– நித்யா**

ஒவ்வொரு கலைஞனிடமும் அவன் வாழ்ந்த காலம் ஏதோ ஒரு விதத்தில் பிரதிபலிப்புக் கொள்கிறது. இப்பிரதிபலிப்பு இயந்திர ரீதியில் நிகழ்வதில்லை. சிலேட்டு உடைநததில் விசும்பும் குழந்தையின் துக்கம் தீண்டக் கவிதை எழுதும் கவிஞன், அணுகுண்டு வீச்சுப் பற்றிப் பிரலாபிக்காததது என்ன எனக் காத்துக் கொண்டிருக்கும் அரசியல் மொண்ணைகளுக்குக் கலைப் பிரதிபலிப்பின் சூட்சுமமோ, சிக்கலோ, தீயணைக்கும் படையினருக்கும் கலைஞர்களுக்கும் உள்ள வித்தியாசமோ தெரியாது என்பது வெளிப்படை. கலைஞனின் பிறப்பு, அவன் வாழும் இடம், காலம், நம்பிக்கைகள், அவனுடைய சுயநலங்கள், அவன சார்ந்து நிற்கும் மதிப்பீடுகள் போன்றவற்றுக்கு உள்நின்று காலத்தின் கோலங்கள் அவன் படைப்பில் பிரதிபலிப்பு கொள்கின்றன. பிரதிபலிப்பின் இயல்புகள் ஒரு எல்லை வரையிலும் வகைப்படுத்த இடம் தருபவை; பின் சூட்சுமத் தின் இருட்டில் மறைந்து நிற்பவை. அனுபவங்கள் கலைஞனைப் பாதிப்பது போலவே, கலை ஆளுமையால் அனுபவங்களும் பாதிக்கப்பட்டே கலை வெளிப்பாடு நிகழ்கிறது. கலைப்பார்வைக்கு அனுபவம் உள்ளாவதே கலை. **– சுந்தர ராமசாமி**

நினைத்திராத நொடிப் பொழுதுகளில் நமக்குள்ளிருந்து வெளிப்படுகிறான் நாமறிந்திராத வேறொருவன். அவன் பரிணாமத்தின் தொடக்கத்தில் குகைகளிலும், கானகங்களிலும் ஒளிந்து வாழ்ந்த காலத்திலிருந்தே மனிதர்களுடன வசிப்பவன். வேறு ஒருவிதத்தில் கூறுவதெனில், கலை இலக்கியங்களின் நோக்கமே சமூக ஒழுக்க விழுமிய மதிப்பீடுகளுக்குப் பழகாத பிறிதொருவன் நம்மிடமிருந்து வெளிப்படும் எதிர்பாராத தருணங்களை பரிச்சயம் கொள்ளவும், அவற்றின் தர்க்கமின்மையை எதிர்கொள்ள நம்மைத் தயார் செய்வதுமே எனப் படுகிறது. **– பிரபஞ்சன்**

ஓர் இலக்கியப் படைப்பு மகத்தானது என்று கருதப்பட அழிப் படையாக அமைகின்ற கூறுகள் எவை? வேறு ஒரு தேசத்தில், வேறு ஒரு சூழலில், வேறு ஒரு மொழியில் நிகழும் படைப்பு எவ்விதத்தில் அந்நியோன்யமான ஒன்றாக நமக்குள் இடம் பெயர்கின்றது; உறவு கொள்கின்றது? நாம் நேரில் காணும் மனிதர்களைக் காட்டிலும் படைப்பாளியின் கற்பனையில் உருக்கொள்கிற கதாபாத்திரங்கள் ஏன் நம்மை அதிகம் பாதிக்கிறார்கள்? யதார்த்த வாழ்க்கையில் நாம் வெகுசுலபமாக உதாசீனம் செய்துவிட்டு நகர்கிற மதிப்பீடுகள் ஒரு படைப்பில் வெளிப்படுகையில் ஏன் மனம் நெகிழ்ந்து குற்ற உணர்வில் தவிக்கிறோம்? இவற்றிற்கெல்லாம் திட்டவட்டமான பதில்கள் ஏதும் இல்லை. ஒரு பெரும் படைப்பு என்பது அதைப படிப்பவன் எண்ணங்களின் வழி புலன்களுக்கு எட்டாத நுண்ணிய இடைவெளிகளில் மௌனமாக ஊடுருவிப் பரவுகிறது. அவனது பார்வையை, கனவுகளை, சிந்தனையை, மதிப்பீடுகளை அவனறியாமலே குலைக்கிறது, தலை கீழாக்குகிறது, வரிசை மாற்றுகிறது. மண்ணின் புழுதியில் கால்கள் அளைந்து கொண்டிருப்பவனை மனம் கூசச் செய்து விண்ணின் எல்லையின்மையை நோக்கி சில கணமேனும் மேலெழும்பிப் பறக்கத் தூண்டுகிறது. இயற்கையின் படைப்பில் இப்பேரண்டத்தில் தானும் ஒரு மகிமை மிக்க துளி என்ற பேருணர்வால் இதயம் விம்மும்படி செய்கிறது.

**– க. மோகனரங்கன**

# கலைஞர் தொலைக்காட்சிக்கு 233 கோடி; கனிமொழியிடம் மீண்டும் விசாரணை



(சென்னை)

கலைஞர் தொலைக் காட்சிக்கு ஸ்வான் டெலிகாம் நிறுவனத்திடம் இருந்து ரூபா 233 கோடி கடன் பெறப்பட்டது. ஸ்பெக்ட்ரம் உரிமம் ஒதுக்கீடு பெறுவதற்காகவே ஸ்வான் டெலிகாம் நிறுவனம், இந்த அளவு பணத்தை கலைஞர் டி.வி.க்கு கொடுத்ததாக குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டன.

ஆனால் ரூபா 233 கோடி பணம், கடனாகப் பெற்றது என்றும், அந்தக் கடன் திருப்பிக் கொடுக்கப்பட்டு விட்டது என்றும் கலைஞர் தொலைக்காட்சி விளக்கம் அளித்தது.

கலைஞர் தொலைக் காட்சியில் கனிமொழி எம்.பி.க்கு 20 சதவீத பங்குகள் உள்ளன. எனவே ஸ்வான் டெலிகாம் நிறுவனத்துக்கும் கலைஞர் தொலைக்காட்சிக்கும் இடையே நடந்த பண பரிமாற்றம் குறித்து சி.பி.ஐ. மற்றும் அமுலாக்கப்பிரிவினர் விசாரணை நடத்தினர்.

சி.பி.ஐ. வழக்கில் கைதான கனிமொழி திகார் ஜெயிலில் அடைக்கப்பட்டு பிறகு ஜாமீனில் விடுதலையானார். இந்த நிலையில் தற்போது அமலாக்கப்பிரிவு அதிகாரிகள் கனிமொழியிடம் விசாரணை நடத்த தயாராகி வருகிறார்கள். ரூபா 233 கோடி பணம் எப்படி, எந்த அடிப்படையில் கை மாறியது என்ற விசாரணையை அமலாக்கப்பிரிவு ஏற்கனவே நடத்தி விட்டது.

வங்கி கணக்குகளும் சரிபார்க்கப்பட்டன. இது தொடர்பாக விளக்கம் அளிக்க வருமாறு கனிமொழி எம்.பிக்கு அமலாக்கப் பிரிவு சம்மன் அனுப்பி உள்ளது. வருகிற 26 ஆம் திகதி புதுடில்லியில் உள்ள அமுலாக்கப்பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி உரிய ஆவணங்களைக் கொடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


# "பசுமைவேட்டை"யை கைவிடக் கோரி போராட்டம்



மாவோயிஸ்டுகளுக்கு எதிரான எல்லைப்பாதுகாப்பு படையினரின் "பசுமைவேட்டை"யை கைவிடக்கோரி ஒடிசா மாநிலத்தில் நேற்று முதல் 2 நாள் முழுஅடைப்பு போராட்டத்தை மாவோயிஸ்டுகள் நடத்துகின்றனர்.

இந்நிலையில் நேற்று மாவோயிஸ்டுகள் போராட்டத்தில் களமிறங்கினர்.

தலைநகர் புவனேஸ்வர் அருகே உள்ள பென்டஜம் என்ற கிராமத் தில் புகுந்த ஆயுதம் தாங்கிய மாவோயிஸ்டுகள் ஒரு காண்டிராக்டருக்கு சொந்தமான 3 லொரிகள் மற்றும் ஒரு டிப்பருக்கு தீ வைத்து பரபரப்பை ஏற்படுத்தினர்.




மேலும் பல இடங்களில் சாலைகளில் மரங்களை வெட்டிப்போட்டு போக்குவரத்தை தடை செய்தனர். மாவோயிஸ்டுகளின் போராட்டத்தால் சாலைகள் வாகன போக்குவரத்து இல்லாமல் வெறிச்சோடி காணப்பட்டது.

# யாருக்கும் பயப்பட மாட்டேன்


**- மம்தா -**



(புதுடில்லி)

என்னுடைய அரசுக்கு எதிராகவும், எனக்கு எதிராகவும் நடத்தப்படும் பொய்ப் பிரசாரம், என்னை எந்த வகையிலும் பாதிக்காது. யாருக்கும் பயப்பட மாட்டேன். மேற்கு வங்க மக்களுக்காக தொடர்ந்து பாடுபடுவேன் பொய்ப் பிரசாரத்தை முறியடிப்பேன் என மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

திரிணமுல் காங்கிரஸ் கட்சியின் பிரமாண்ட பொதுக் கூட்டத்தில், மம்தா பானர்ஜி கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் சமீபகாலமாகவே என்னையும், என் அரசையும் விமர்சித்து, அதிகமான விமர்சனங்கள் வருகின்றன. குறிப்பாக, சில தொலைக்காட்சிகள் எனக்கு எதிராக பொய்ப் பிரசாரத்தை கட்ட விழ்த்து விடுகின்றன. தினமும், எனக்கு எதிரான செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த பொய்ப் பிரசாரம், என்னை எந்த வகையிலும் பாதிக்காது. யாருக்கும் பயப்பட மாட்டேன். மேற்கு வங்க மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கும், மக்களின் முன்னேற்றத்துக்காகவும் தொடர்ந்து பாடுபடுவேன். எனக்கு எதிரான பொய்ப் பிரசாரம் தவறானது என்பதை, என்னுடைய செயற்பாடு மூலமாக நிரூபிப்பேன். கடந்த, 34 ஆண்டுகளாக, இடது சாரி கட்சிகளின் ஆட்சியால், மேற்கு வங்க மாநிலம், வளர்ச்சி அடையாமல் உள்ளது. இந்த நிலையை மாற்றுவதற்காகவே, ஓய்வின்றி உழைக்கிறேன் என்றார்.




## 109 வயது உழைப்பாளி விருது வழங்கக் கோரிக்கை



தமிழ்நாடு கீழக்கரையைச் சேர்ந்த செய்யது அபுதாகிர் (வயது 109 என்ற முதிய வருக்கு தமிழக அரசு சார்பில் சிறப்பு விருது வழங்க வே ண்டும் என்று அவ்வூர் மீனவ சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை பேரூராட்சியைச் சேர்ந்த செய்யது அபுதாகிர், அவ்வூர் மீன் சந்தையில் மீன்களை சுத்தப்படுத்தும் வேலை பார்த்து வருகிறார்.

தன்னுடைய வயது முதிர்விலும் இன்று வரை இளைஞர்களுக்கு எடுத்துக்காட்டாகவும், உழைப்பிற்கு வயதில்லை என்பதை நிரூபிப்பது போல் சுறுசுறுப்பாக உழைத்துக் கொண்டிருக்கும் செய்யது அபுதாகிர் பலரையும் ஆச்சரியபடுத்துகிறார்.


மீன்களை சுத்தப்படுத்தும் தொழிலில் வாடிக்கையாளர்கள் கொடுக்கின்ற கூலியை பேரம் பேசாமல் பெற்றுக்கொள்கிறார்.

இது போன்ற கடினமான வேலையில் ஈடுபடும்போது சிறிது கவனம் சிதறினாலும் கைகளில் ரத்தகாயம் ஏற்பட்டுவிடும். ஆனால் இந்த முதிய வயதிலும் இவர் இவ்வளவு துல்லியமாக வெட்டுவதற்கு காரணம் செய்யும் தொழிலில் இருக்கும் ஈடுபாடு தான் என்று அவ்வூர் மக்கள் புகழ்கின்றனர். உழைப்பிற்கு எடுத்துக்காட்டாக திகழும் 100 ஆண்டுகளைக் கடந்த மூத்த குடிமகனான அபுதாகிர் அவர்களுக்கு சிறப்பு விருது கொடுக்க அரசு முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டது.

ஏற்கனவே இவருக்கு றோட்டரி சங்கம் சார்பில் விருது வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# நர்ட்டுப் பிரிவினையால் இளம் வயதில் வீடு இழந்தேன்

**பிரதமர் மன்மோகன் சிங்**




(கவுகாத்தி)

நாட்டு பிரிவினையால், இளம் வயதில், நான் வீடு இல்லாத நபராக இருந்தேன். என்னை ராஜ்ய சபாவுக்கு தேர்வு செய்ததன் மூலம், அசாம் மக்கள் தான், எனக்கு வீடு கொடுத்தனர். இதனால், அசாம் மாநில மக்களுக்கு எப்போதும் நன்றிக் கடன்பட்டிருக்கிறேன், என, பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மன்மோகன் சிங், அசாம் மாநிலத்தில் நேற்று முன்தினம் ஒரு நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அசாம் மக்களின் புத்தாண்டுக் கொண்டாட்டம் மற்றும் அசாம் சட்டசபை தொடக்கப்பட்டதன் 75 ஆவது ஆண்டு விழாக் கொண்டாட்டங்களில் பங்கேற்பதற்காகச் சென்றார்.

கவர்னர் பட்நாயக், முதல்வர் தருண் கோகோய் ஆகியோர், கவுகாத்தி விமான நிலையத்தில் பிரதமரை வரவேற்றனர். இதன்பின், கவுகாத்தியில் நடந்த, சட்டசபை 75 ஆவது ஆண்டு விழாவில் அவர் கலந்து கொண்டார். அப்போது அவர் பேசியதாவது: நாட்டு பிரிவினையின் போது, நாங்கள் வசித்த வீடு, பாகிஸ்தான் வசம் போய்விட்டது. இதனால், இளம் வயதில் எனக்கு வீடு இல்லை. சொந்த வீடு இல்லாமல் இருந்த எனக்கு, அசாம் மக்கள் தான், வீடு அளித்தனர். ராஜ்ய சபாவுக்கு என்னை தேர்வு செய்ததன் மூலம், அசாம் மக்கள் எனக்கு முகவரி தந்தனர்.

இதற்காக அசாம் மக்களுக்கு எப்போதும் நன்றிக் கடன் பட்டிருக்கிறேன். கடந்த சில ஆண்டுகளாக, அசாமுக்கு நான் அடிக்கடி வருவதும் இதற்காகத் தான். அசாம் மக்கள், என் மீது, அன்பும், பாசமும் வைத்துள்ளனர். பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, அசாம் மாநி லம் கடந்த சில ஆண்டுகளாக வளர்ச்சிப் பாதையில் செல்கிறது. அரசியல் நிலைத்தன்மையும் ஏற்பட்டுள்ளது. என்றார்.

வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்




பெயர் : மதிரூபன் - கிர்த்திக்

முகவரி: பிரதாலயா, சமரபாகு

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# தெற்கு சூடான் படை வாபஸ்; போர்ப் பதற்றம் தணிவு



சூடான் எல்லையில் இருந்து சர்ச்சைக் குரிய எண்ணெய் வள பகுதியிலிருந்து, தனது படைகளை வாபஸ் பெற தெற்கு சூடான் முடிவு செய்துள்ளது.

சூடானில் 20 ஆண்டுகளாக நீடித்த உள்நாட்டு சண்டையில் 15 லட்சம் பேர் பலியாயினர். இதனையடுத்து ஐ.நா தலையீட்டின் பேரில், கடந்தாண்டு தெற்கு சூடான் தனி நாடாக உருவானது. சூடான் மக்கள் விடுதலை இயக்கத்தினர் தற்போது தெற்கு சூடானை ஆட்சி செய்து வருகின்றனர்.

இருநாட்டு எல்லையில் உள்ள ஹெக்லிக் என்ற இடத்தில் எண்ணெய் வளம அதிகமாக உள்ளது. இதை தங்களிடம் ஒப்படைக்கும் படி சூடான் அரசு தெற்கு சூடானை எச்சரித்து வந்தது. இதற்கு தெற்கு சூடான் மறுப்பு தெரிவித்ததால், இருநாடுகளுக்கி டையே சமீபத்தில் சண்டை நடந்தது. இந்த சண்டையில் இருதரப் பிலும் 22 வீரர்கள் பலியாயினர்.

ஹெக்லிக் பகுதியிலிருந்து தெற்கு சூடான் தனது படையை வாபஸ் பெற வில்லையென்றால், அந்நாட்டுடன் போர் நடக்கும் என சூடான் ஜனாதிபதி ஓமர் அல் பீஷர் தெரிவித்திருந்தார்.

மேலும் சண்டை நடந்தால் தெற்கு சூடானுக்கு ஆதரவளிப்போம் என உகாண்டா தெரிவித்திருந்தது. நிலைமை மிக மோசமடைவதை கண்ட ஐ.நா பொது செயலர் பான் கி மூன், சர்ச்சைக்குரிய ஹெக்லிக் பகுதியிலிருந்து தெற்கு சூடான் தனது படைகளை வாபஸ பெற வேண்டும் என கூறியிருந்தார்.

சர்வதேச வரைப்படத்தின் படி ஹெக்லிக் சூடான் வசம் தான் உள்ளது. இருப்பினும் இந்த பகுதி தங்களுக்கு தான் சொந்தம் என தெற்கு சூடான் உரிமை கொண்டாடி வருகிறது.

இந்த பகுதி இன்னும் சரியாக வரையறுக்கப்படாத காரணத்தால் சர்ச்சை நீடிக்கிறது. சூடான் நாட்டுடன் நடந்த பேச்சுவார்த்தையை தொடர்ந்து, மூன்று நாட்களுக்குள் தன்னுடைய படைகளை வாபஸ் பெறுவதாக தெற்கு சூடான் ஜனாதிபதி சால்வா கிர் உறுதியளித்துள்ளார். இதன் மூலம் இங்கு நிலவிய போர் பதற்றம் தணிந்துள்ளது.

## இந்தோனேஷியாவில் மீண்டும் நடுக்கம்

இந்தோனேஷியாவின் கிழக்கு பகுதியில் நேற்றுக் காலை மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் அச்சத்தில் உறைந்தனர்.

பப்புவாயில் உள்ள மனோக்வாரியை மையமாகக் கொண்டு இந் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

நிலநடுக்கத்தில் வீடுகள் குலுங்கியதால் மக்கள் வீதிகளில் தஞ்சம் அடைந்தனர். நிலநடுக்கத்தைத் தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப் படவில்லை.

உலகச் செய்திகள்

### – வீட்டுப்பாடம் எழுதாததால் –
## மகளை உயிருடன் மண்ணில் புதைத்த தந்தை



சீனாவில் வீட்டுப்பாடம்(Homework) எழுதாத 6 வயது மகனை அடித்து உதைத்து உயிருடன் மண்ணில் புதைத்து, அவரது தந்தை கொலை செய்துள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சீனாவின் யுன்னான் மாகாணத்தைச் சேர்ந்தவர் லீ. என்பவர் தனது ஆறு வயது மகன் பாடசாலையில் இருந்து திரும்யதும் வீட்டுப்பாடம் சரியாக எழுதவில்லை என்பதனை அறிந்து மகனை அழைத்து விசாரித்துள்ளார். இதற்கு அவன் சரியாக பதில் சொல்லாததால் மகளை நெஞ்சில் எட்டி உதைந்துள்ளார். சிறுவனை தூக்கி சுவரில் அடித்து வீசி எறிந்துள்ளார். இதில் பலத்த காயமடைந்த மகன், மயங்கி விழுந்துள்ளார்.

பெற்ற மகனை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கு பதிலாக அங்குள்ள மலைப்பகுதிக்கு தூக்கிச் சென்று உயிருடன் மண்ணில் புதைத்து கொலை செய்துள்ளார்.

அப்போது மகனைத்தேடி வந்த சக மாணவர்கள் இதனை பார்த்து விட்டதால் அவர்களிடம் வெளியே சொன்னால் உங்களையும் கொலை செய்து விடுவதாக மிரட்டியுள்ளார்.

இதுகுறித்து பொலிசாருக்கு தகவல் தெரியவரவே உடனடியாக லீயை கைது செய்துள்ளார் புதைக்கப்பட்ட 6 வயது மகனை தோண்டி வெளியே எடுத்து பிரேத பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# அத்தியாவசிய மருந்துகள் பாகிஸ்தானில் இல்லை

பாகிஸ்தானில் மருந்துப் பொருட்கள் துறையில் நடந்த ஊழல் காரணமாக, அத்தியாவசிய மற்றும் முக்கியமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மருந்துப் பொருட்கள் துறையில் நடந்துள்ள ரூ.700 கோடி ஊழல் அத்துறையைக் கடுமையாகப் பாதித்துள்ளது.


இந்த ஊழலில் பாகிஸ்தான் பிரதமர் கிலானியின் மகன் அலி மூஸா கிலானியின் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிசார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் அலி மூஸா, பிரதமரின் முதன்மைச் செயலர் குஸ்நூத் லஷரி மற்றும் மருந்து கட்டுப்பாட்டாளர் ஷேக் அன்சார் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த ஊழலைத் தொடர்ந்து மருந்து சேமிப்புக் கூடங்களிலிருந்து உயிர்காக்கும் பொருள்கள் காணாமல் போயுள்ளன அல்லது மிக அதிக விலைக்கு விற்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

இந்த விஷயத்தில் அதிகாரிகள் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் என்று பாகிஸ்தான் மருந்துப் பொருள் தயாரிப்பு தொழில் கூட்டமைப்பின் தலைவர் கவாஜா முகமது ஆஸத வலியுறுத்தியுள்ளார்.


மருந்து உற்பத்திக்குத் தேவையான சில மூலப் பொருள்களை இறக்குமதி செய்ய தயாரிப்பு நிறுவனங்களுக்கு 5 மாதங்களாகும். கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்படும் சில மூலப் பொருளகளை குறைந்த அளவிலேயே சேமித்து வைக்க முடியும்.



அவற்றிற்குத் தொடர்ந்து தேவை இருந்து கொண்டிருப்பதால், அவற்றைத் தொடர்ந்து இறக்குமதி செய்து வருகிறோம். இந்த ஊழலுக்குப் பிறகு இறக்குமதி நடவடிக்கைகள் முழுவதும் ஸ்தம்பித்துப் போயுள்ளன என்று கவாஜா தெரிவித்தார்.

இந்த நிலை மேலும் சில வாரங்களுக்குத் தொடர்ந்தால் உயிர்காக்கும் முக்கிய மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு விடும். மூலப் பொருள்கள் குறைந்து கொண்டே வருவதால், மருந்துத் தயாரிப்பு நிறுவனங்கள் விரைவில் உற்பத்தியை நிறுத்த வேண்டியிருக்கும் என்றும் கவாஜா எச்சரித்தார்.

## பத்திரிகை ஆசிரியர் பாகிஸ்தானில் படுகொலை



(கராச்சி)

பாகிஸ்தானின் பிரபல "டான்" பத்திரிகையின் மூத்த உதவி ஆசிரியர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இது குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர். பாகிஸ்தானில் இருந்து 'டான்' பத்திரிகை வெளிவருகிறது. மிக பிரபலமான இப் பத்திரிகையின் பெயரில் இதழும் வெளிவருகிறது. இந்தப்பத திரிகை சார்பாக வெளியாகும் இதழ்களின் தலைவர் மற்றும் மூத்த உதவி ஆசிரியராக இருந்தவர் முர்தஸா ராஸ்வி. இவர், கராச்சியில் உள்ள அலுவலகத்தில் நேற்று முன்தினம் படுகொலை செய்யப்பட்டார்.

இதுகுறித்து பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில், "கராச்சி இராணுவ வீட்டுவசதி குடியிருப்பு பகுதியில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் டான் இதழ் அலுவலகம் செயற்பட்டு வருகிறது. அலுவலகத்தில் ராஸ்வி கொடூரமாக கொலை செய்யப்பட்டிருந்தார். அவரது கைகள் கட்டப்பட்டிருந்தன. அவரது உடலின் பல பகுதிகளில் ரத்தக் காயங்கள் இருந்தன. இந்த கொலை குறித்து விசாரித்து வருகிறோம். என்றார்.

# இராணுவ ஆட்சிக்கு எதிராக எகிப்தில் மீண்டும் போராட்டம்



எகிப்தில் ஜனாதிபதியாக பதவி வகித்த ஹோஸ்னி முபாரக்கிற்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தினர், இதனைத் தொடர்ந்து முபாரக் பதவி விலகினார்.

தற்போது எகிப்தில் இராணுவ ஆட்சி நடக்கிறது. இந்நிலையில் எகிப்து தலைநகர் கெய்ரோவில் உள்ள தாரிர் சதுக்கத்தில், இராணுவ ஆட்சிக்கு எதிராக ஆயிரக்கணக்கான பொதுமக்கள் நேற்று முன்தினம் போராட்டம் நடத்தினர்.

இராணுவ ஆட்சிக்கு எதிராக் கோஷமிட்ட அவர்கள் ஆட்சிப் பொறுப்பை பொதுமக்களிடம் ஒப்படைக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தனர். எகிப்தின் இஸ்லாமிய எதிர்ப்புக் கட்சியினரும், இளைஞர் விடுதலை இயக்கத்தினரும் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

எகிப்தில் கடந்தாண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இஸ்லாமியக் கட்சி 70 சதவீத தொகுதிகளைக் கைப்பற்றியது. ஆனால் அக்கட்சியினர் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு தேர்தல் நடத்த வேண்டுமென இஸ்லாமியக்கட்சி கடந்த வாரம் இராணுவ ஆட்சியாளர்களை கேட்டுக் கொண்டது. ஆனால் அவர்களது கோரிக்கையை இராணுவம் நிராகரித்து விட்டது. அதுமட்டுமின்றி இஸ்லாமியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை, இராணுவம் தகுதி நீக்கம் செய்துள்ளது.

# தினமும் 10 லீற்றர் குளிர்பானம் பெண்ணின் உயிரைக் குடித்தது

தினமும் 10 லீட்டர் அளவுக்கு கோகாகலா குளிர்பானத்தை குடித்த பெண் திடீரென மாரடைப்பால் மரணம் அடைந்தார்.

நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்தவர் நடஷா ஹாரிஸ் (வயது-30). என்பவர் எட்டு குழந்தைகளுக்கு தாயராவார் காலை எழுந்தது முதல் இரவு படுக்கும் வரை அடிக்கடி, கோககோலா குளிர்பானத்தை பருகி வந்தார்.

ஒரு நாளைக்கு 10 லீட்டர் கோககோலாவை இவர் பல ஆண்டுகளாக குடித்து வந்தார். கடந்த 2010 ஆம் ஆண்டு திடீரென மாரடைப்பால் இறந்துவிட்டார்.

இவர் திடீரென இறந்ததற்கான காரணம் குறித்து பல்வேறு துறை மருத்துவர்கள் ஆய்வு செய்தனர். நடஷாவின் கணவரை அழைத்து அவரது மனைவி என்னென்ன உணவு பழக்கங்களை கொண்டிருந்தார் என கேட்டனர்.

நடஷா ஒரு நாளைக்கு எட்டு முதல் 10 லிட்டர் கோககோலா குடித்ததாகவும், 30 சிகரெட் வரை பயன்படுத்தியதாகவும், ஆனால் குறைவான உணவு மட்டுமே உட்கொண்டு வந்ததாகவும் நட'ாவின் கணவர் கூறினார்.

சமீபத்தில் நடஷாவின் மரணம் குறித்த மருத்துவ அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், தண்ணீராக இருந்தாலும் அது அளவுக்கு அதிகமாக உட்கொண்டால், உடலுக்கு கெடுதலை தான் செய்யும். அதிகப்படியான கோககோலாவினால் அவரது உடலில் பொட்டாசியத்தின் அளவு குறைந்து விட்டது.

இதனால் அவருக்கு ரத்த அழுத்தமும், சக்திக்குறைவும் ஏற்பட்டுள்ளது. இது தான் அவருக்கு மரணத்தை ஏற்படுத்தி விட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் கோககோலா நிறுவனம் தங்களுடைய குளிர்பானம் மிகவும் பாதுகாப்பானது என அறிக்கை அளித்துள்ளது.

# கணினி உலா

AJ.Nimalrajan

## போலியான face book profile லை இனம் காண இதோ சில வழிகள்

☞ இவர்களின் Profile Picture ஐ வைத்து ஓரளவு கணிக்கலாம். Profile Picture ஐ நீண்டகாலம் மாற்றாமல் வைத திருப்பார்கள். ஏதாவது ஒரு பிரபல, கவர்ச சியான பெண்களின் புகைப்படத்தை Profile Picture ஆக வைத்திருப பார்கள். இவர்களின் புகைப்பட அல்பத் தில் இரண்டிற்கு மேற்பட்ட படங்கள் இருப்பது அரிது.

☞ இவர்களுடைய நண்பர்கள் பட்டியலில் அதிகளவான ஆண்கள் நண்பர்களாக இருப்பார்கள். (பெண்கள் தமது சுய பாதுகாப்பு கருதி முகம் தெரியாத ஆண்களை நண்பர்களாக இணைப்பதில்லை)

☞ யார்மேலாவது சந்தேகம் ஏற்பட்டால் அவர்கள் Facebook இல் இணைந்த திகதியினையும் அவர்களது நண்பர்கள் எண்ணிக்கையையும் ஒப்பிட்டுப் பாருங்கள். குறைந்த காலத தில் ஆயிரக்கணக்கான நண்பர்கள் பட்டியலில் இருந்தால் அந்தக்கணக்கு போலியாக இருப்பதற்கான சாத்தியம் அதிகம். காரணம் விளம்பரத்துக்காக கண்டபடி நண்பர்களை சேர்ப்பார்கள்.

☞ இவர்களுடைய Wall I பாருங்கள். Wall முழுவதும் நண்பர்களை இணைத்துக்கொண்ட தகவல்கள் மட்டுமே இருக்கும். இணையத்தளங்கள் வைத்திருக்கும் போலி கணக்காயின் wall முழுவதும் அவர்களின் பதிவுகள் பகிரப்பட்டிருக்கும்.

☞ அவர்களுடைய Page Likes ஐ பாருங்கள். எந்தவொரு Page Likes உம் இருக்காது. அப்படி ஒன்று இரண்டு இருந்தாலும் அது அவர்களின் சொந்த (இணையத் தளங்களின்) Page ஆகத்தான் இருக்கும்.

☞ போலி என சந்தேகப்படுவோரின் Activities ஐ பாருங்கள். உதாரணமாக Comments,Likes, Status. போலி கணக்காயின் இவை அதிகம் இருக்காது.

☞ ஆண்களுக்கு!... பெண்களின் பெயரில் Friend Request வந்தால் அவர்களின் Profile ஐ முழுவதுமாக ஆராயுங்கள். காரணம் உண்மையான கணக்கு வைத்திருக்கும் பெண்கள் வலிந்து போய் முகம்தெரியாத ஆண்களுக்கு Friend Request கொடுப்பதில்லை.



☞ போலி கணக்குகளில் அநேகமானவை பெண்களின் பெயரிலேயே இருக்கும். அதுவும் 1988 தொடக்கம் 1992 ஆம் ஆண்டு பிறந் ததாகவே Profile இல் குறிப்பிடப் பட்டிருக்கும்.

## கூகுளின் புதிய வசதி

கூகுள் நிறுவனம் தற்பொழுது blogger வலைப்பூக்களுக்கு பல புதிய வசதிகளை அறிமுகப்படுத்தி உள்ளது. சமீபத்தில் Meta tag , Image Properties, Google+ விட்ஜெட் இந்த வரிசையில் தற்பொழுது புதிய வசதியை அறிமுகப்படுத்தி உள்ளது. இனி ப்ளொக்கரில் போட்டோ அல்லது வீடியோக்களை Webcam மூலமாக நேரடியாக உங்கள் வலைப்பூவில் இணைக்கலாம்.


உங்கள் வலைப்பூவில் போட்டோக்களை இணைக்க எப்பொழுதும் செல்வது போல Insert image அல்லது Insert வீடியோ பட்டனை க்ளிக் செய்யுங்கள். அதில் இப்பொழுது புதிதாக From your Webcam என்ற வசதியைக்காணலாம்

அதில் க்ளிக் செய்து நேரடியாக உங்கள் போட்டோ மற்றும் வீடியோக்களை வெப்கேம் மூலமாக இணைத்துக் கொள்ளலாம்.



## சந்தைக்கு வர இருக்கும் கூகுளின் அதிசய கண்ணாடி

இன்ரர்நெட் உலகத்தையே ஆட்டிப் படைக்கும் கூகுள் நிறுவனம், உலகின் முதல்தர தேடுபொறியாக உள்ளது. இந் நிறுவனம் பல பில்லியன் டொலர்களைச் செலவுசெய்து புதுப் புது தொழில் நுட்பத்தைக் கண்டு பிடிக்கிறது. இதன் ஒருவடிவமாக கூகுள் கண்ணாடியை அது கண்டுபிடித்துள்ளது. இக் கண்ணாடி 2012ஆம் ஆண்டு இறுதியில் விற்பனைக்குவர உள்ளது. கம்ப்யூட்டர் செயற்பாடுபோல இயங்கும் இக் கண்ணாடியில் உள்ள அம்சங்களே தனி. இதில் GPS என்னும் செயற்கைக்கோள் (சற்றலைட்) வழிநடத்தல் இருக்கிறது. இதனூடாக நடை பயணிகள் ஒரு தெருவை அல்லது வீட்டை இலகுவாகக் கண்டுபிடிக்க முடியும். வீடியோ படம் எடுக்க முடியும். எடுத்த படத்தை நண்பர்களுக்கு 1 செக்கனில் அனுப்பவும் முடியும். அதுமட்டுமா ! நாம் சொல்லும் கட்டளைகளை அது நிறைவேற்ற வல்லது. படம் எடு என்று மட்டும் சொன்னால் போதும் அது உடனே படம் எடுக்க ஆரம்பித்துவிடும். 4ஆம் தலைமுறை இன்ரர்நெட் வசதிகொண்டதாக அது அமைந்துள்ளது. சிறந்த தேடுபொறியாகவும் அதனைப் பயன்படுத்தலாம். மொபைல் தொலைபேசி உள்ளது. அழைக்கும் நபரின் உருவம் கண்ணாடியில் தோன்றும். பிறிதொருவர் இதேபோல ஒரு கண்ணாடியை அணிந்திருந்தால், அவர் உங்கள் நண்பராக இருந்தால் அதனையும் அது காட்டவல்லது. அந் நபர் எவ்வளவு தூரத்தில் இருக்கிறார் என்பதனைக் கூட அது துல்லியமாகக் காட்டிவிடும். இந்த கண்ணாடிகள் இன்னும் சந்தைக்கு வரவில்லை. கூடிய விரைவில் வரலாம். விலை $250 இருந்து $600 வரை இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.



## கணினிப் பாவனையாளர்கள் எதிர்கொள்ளும் நடைமுறைச் சிக்கல்களும், சுயமான தீர்வுகளும்



புதிய கணினிப் பாவனையாளர்கள் என்றதும், அது எனக்குப் பொருந்தாது என்று கருதுபவர்கள் பலர் இருக்கிறார்கள். இருந்தாலும், என்னதான் பல வருடங்கள் கணினியைப் பாவித்து வந்தாலும், கணினியின் தொழில்நுட்ப அறிவுடன் தொடர்புடைய ஒரு தொழிலில் ஒருவர் ஈடுபட்டால் ஒழிய, ஏனையவர்கள் கணினியின் நாளாந்தச் சிக்கல்களை எப்படி விரைவாகவும் எளிதாகவும் தீர்ப்பது என்று அறிந்திருக்க நியாயமில்லை.

பலரும் தங்களது கணினியில் சிக்கல்கள் வரும்போது, அது ஒரு மிகச்சாதாரணமான ஒன்றாக இருந்தால் கூட, தங்களது வழமையான கணினி திருத்துனரிடம் தொடர்புகொண்டு அதைச் சீர் செய்துகொள்வதுடன், அந்தச் சிக்கல் குறித்து அறிந்து வைத்துக்கொள்ளக் கூட ஆர்வம் காட்டுவதில்லை.

இன்னும் ஒரு வகையினர் தங்களது பிள்ளைகள், நண்பர்கள், உறவினர்களில் யாராவது கணினி அறிவுடைய ஒருவரைத் தங்களது 'கணினிக் காவலராக' வைத்துக் கொள்வார்கள். எந்தவொரு சிக்கல் வந்தாலும், ஒரு நபரையே நச் சரித்து, அவர் எத்தகைய சிரமங்களில் அகப்பட்டிருந்தாலும், அதையெல்லாம் ஓரமாய் வைத்துவிட்டு இவரது கணினிச் சிக்கலைத் தீர்க்கும்வரை உண்ண உறங்க இருக்க விடாமல் கலைத்துக் கொண்டே இருப்பார்கள்.

உண்மையில் கணினியைப் பாவிக்கும்போது உருவாகக்கூடிய நடைமுறைச் சிக்கல்களில் 75 வீதமானவை, சுயமாக ஒரு சாதாரண மனிதனால் தீர்த்துக் கொள்ளக் கூடியவையே. கணினியில் ஒரு பிரச்சினை வரும்போது அதன் உரிமையாளருக்கு மிகவும் அவசியமானது பொறுமை ஒன்றே.

பொதுவாக ஒரு கணினிப் பாவனையாளர் தனது கணினியில் ஒரு பிரச்சினையை எதிர்நோக்கியதும், அந்தப் பிரச்சினை என்ன என்பதை அதுவாகவே ஒரு சிறிய கட்டத்துக்குள் சுட்டிக்காட்டும். அதில் என்ன எழுதியுள்ளது என்பதைக் கூட சிலர் வாசிக்க மாட்டார்கள். அதை வாசித்தாலே சிலவேளை கணினியின் பிரச்சினை இலகுவாக விளங்கிவிடும். ஆனால் இவர்களுக்கு அந்தத் தகவலை வாசிக்கக்கூடப் பொறுமையில்லை.

உடனே தொலைபேசியில் தன் கணினிக் காவலரை அழைப்பார். அவர் எங்கே என்ன வேலையில் இருந்தாலும், அதைத் தவிர்த்து, உடனே இவரது கணினிப் பிரச்சினையைத் தீர்க்க வந்துவிட வேண்டும். அல்லது அதுவே ஒரு பூதாகரமான குடும்பப் பிரச்சினையாக உருவாகிவிடும். இப்படி மற்றவரிலேயே முழுமையாகத் தங்கி வாழும் கணினிப் பாவனையாளர்கள், தங்களது சுயஅறிவிலும் முயற்சியிலும் நம்பிக்கை வைத்து, பொறுமையையும் சற்று காப்பார்களாக இருந்தால், கணினிப் பிரச்சினைகள் பல மிக இலகுவாகத் தீர்க்கப்படக் கூடியவை என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

மிகவும் அடிப்படையானதும் முக்கியமானதுமான ஒரு விடயம் கணினியுலகில் பயன்பாட்டிலுள்ள சொற்களைத் தெரிந்து வைத்திருப்பது. உதாரணமாக வன்பொருள் (hardware) அல்லது மென்பொருள் (software) என்றால் என்ன என்று தெரிந்து வைத்திருந்தாலே, தகவல் கட்டங்கள் (Dialog Box) கணினியின் பிழைகளைச் சுட்டிக்காட்டும்போது எங்கே பிழை என்பதை ஓரளவு விளங்கிக் கொள்ள வாய்ப்புக் கிடைக்கும்.

hardware அல்லது software என்ற சொற்களை மிக அதிகமாக கணினி உலகில் பாவிப்பார்கள். சுருக்கமாக விளக்குவதாக இருந்தால், கண்ணால் பார்க்கவும் கையால் தொட்டு உணரக்கூடியதுமான கணினியின் அங்கங்கள் பாகங்கள் கருவிகள் அனைத்தும் hardware அடங்கும். உதாரணமாக keyboard, mouse, monitor, hard drive, printer,scanner உட்பட அத்தனை உபகரணங்களும் ஹார்ட்வெயர் என்ற குடும்பத்தில் சேரும்.

கணினியின் இயங்கு பகுதிகளை இயக்கும் மென்பொருட்களான வின்டோஸ் இயக்கி, வேர்ட், எக்செல், றியல் பிளேயர், மீடியா பிளேயர், அவுட்லுக் இப்படி அத்தனை இலத்திரனியல் இயக்கிகள் மற்றும் மென்பொருட்கள் அத்தனையும் software என்ற பெயரில் அழைக்கப் படுகின்றன.

பொதுவாக கணினி இயங்காமைக்கு அல்லது ஏதாவது குழப்பங்கள் உருவாகுவதற்கு இந்த இரண்டு குழுக்களில் ஒன்றே காரணமாகிறது. அதற்கான காரணத்தை, ஒரு கட்டத்திற்குள் விளக்கும் சுட்டியொன்று எம்முன்னே தோன்றியதும், நாம் முதலில் வாசித்து அறிந்து கொள்ள வேண்டியது, இது எந்தக் குடும்பத்தினால் ஏற்பட்ட தவறு என்பதையே.

சிலவேளைகொள்வோம். உங் கள் கண்முன்னே ஒரு சிறு கட்டத்திற்குள் நடந்த தவறு என்ன என்பதை கணினி தெளிவாகச் சொல்லும். அதை ஆறுதலாக வாசித்துப் பார்த்தால், சொப்ட்வெயரிலா அல்லது ஹார்ட்வெயரிலா தவறு என்பதை இலகுவாகக் கண்டு பிடித்துவிடலாம்.

மேலே கூறிய தவறொன்றின் போது, keybord அல்லது hardware என்ற இரண்டில் ஒரு சொல்லை நீங்கள் கண்டதும், தவறு எங்கே ஏற்பட்டிருக்கலாம் என்பதை ஓரளவிற்கு நீங்கள் ஊகித்துக் கொள்ளலாம்.

software இல் தவறு இருக்கும் பட்சத்தில், எந்த software தவறு ஏற்பட்டுள்ளது என்பதை அது உங்களுக்கு சுட்டிக்காட்டும். உதாரணமாக, word, excel, yahoo messenger இப்படி எங்கே பிழை ஏற்பட்டுள்ளதோ, அந்தக் காரணத்தை அங்கே வாசித்தறிந்தால், அதற்குரிய மென்பொருளைத் துண்டித்து, மீள இணைப்பதன் மூலமோ, அல்லது அந்த softwareஐ முழுமையாக மூடிவிட்டு, மீளத் திறப்பதன் மூலமோ, எதுவும் சரிவராத நிலையில், அந்த மென்பொருளை கணினியிலிருந்து முற்றாக நீக்கிவிட்டு மீள உள்ளீடு (reinstall) செய்வதன் மூலமோ கணினியின் தற்காலிகச் சிக்கலை இலகுவாகத் தீர்த்துவிட வாய்ப்பு உருவாகும்.

# தனங்கிளப்பு கொலை வழக்கு சந்தேக நபர்களுக்கு பிணைமறுப்பு

(திருநெல்வேலி)

தனங்கிளப்பு பெண் கொலை வழக்கில் சந்தேக நபர்கள் மூவருக்கும் சாவகச்சேரி நீதிமன்றில் பிணை வழங்க மறுத்து விளக்க மறியலை நீடித்துள்ளது.

தனங்கிளப்பைச் சேர்ந்த சுப்பிரமணியம் புஷ்பமலர் (வயது -24) என்னும் இளம்பெண் கடந்த வருடம் நவம்பர் மாதம் 11 ஆம் திகதி காணாமல் போயிருந்தார். சில நாட்கள் கழித்து இவரது எலும்புக்கூடு கண்டுபிடிக்கப் பட்டது.

இது சம்பந்தமாக சாவகச்சேரி பொலிஸார் சந்தேகத்தின் பேரில் மூவரைக் கைதுசெய்து சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்ப் படுத்திய போது மூவரையும் விளக்கமறியலில், வைக்குமாறு சாவகச்சேரி நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டார்.


இவ்வழக்கு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கை விசாரணை செய்த நீதிவான் சந்தேக நபர்கள் மூவரையும் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு வழக்கினை எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

விளக்க மறியலில் வைக்கப் பட்ட 3 சந்தேக நபர்களில் ஒருவர் கொலை செய்யப்பட்ட இளம் பெண்ணின் காதலர் எனவும், இளம்பெண் இரண்டு மாதக் கர்ப்பிணியாக இருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3 ஆவது சந்தேகநபர் நீதவானுக்கு வாக்குமூலமொன்றை சுயவிருப்பத்தின் பேரில் அளிக்க விரும்புவதாகத் தனது சட்டத்தரணி மூலமாக விண்ணப்பித்திருந்தார். எதிர்வரும் 25 ஆம் திகதி இவரது வாக்மூலம் பதிவுசெய்யப்படவுள்ளது.

இரண்டாவது, மூன்றாவது சந்தேகநபர்கள் சார்பில் சட்டத் தரணிகள் என்.ஶ்ரீகாந்தா, எம். சத்தியேந்திரா ஆகியோர் ஆஜராகியிருந்தார்கள். (137)

# வென்றது சென்னை



(சென்னை)

ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கெதிரான போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. ஐ.பி.எல். தொடரின் 26 ஆவது போட்டி நேற்று சென்னையில் நடைபெற்றது.

இதில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஷா 52, ராவிட் 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் குலசேகர 17 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு 147 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் பிளிசர்ஸ் 73, ரெய்னா 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கூப்பர் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். போட்டியின் ஆட்டநாயகனாக பிளிசர்ஸ் தெரிவானார்.

# மாடுகளுக்குத் தடுப்பூசி விரைந்து செயற்பட அறிவுறுத்தல்

பருத்தித்துறை கால்நடை வைத்தியத் திணைக்களத்தினால் மாடுகளுக்கான நோய்த் தடுப்பூசி, மருந்து வழங்கப்பட்டு வருகின்றது. இத்தடுப்பூசி மருந்தானது ஆனி, ஆடி, ஆவணி மாதம் மற்றும் மழை காலத்திற்கு முற்பட்ட காலப்பகுதியில் மாடுகளுக்கு ஏற்படும் தொண்டை அடைப்பான் (H.S) மற்றும் கால்வாய் நோய் (FMD) போன்ற நோய்களுக்காக வழங்கப்பட்டு வருகின்றது. பண்ணையாளர்கள் தத்தமது கால் நடைகளைப் பதிவுசெய்து, கால் நடைகளுக்கான இலக்கத்தகடுகளையும் குற்றிக்கொள்ளுமாறும், கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இதேவேளை, இவ் இலவச மருந்துத் தடுப்பூசி மருந்துகள் பண்ணைகள் அமைந்துள்ள இடங்களுக்குச் சென்று இலவசமாக வழங்கப்படும் என கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் யூலியானா தெரிவித்துள்ளார். (116)

# 3 ஆலயங்களில் ஒரே இரவு திருட்டு

கோப்பாய் மத்திப் பகுதியில் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலயம், பலானை கண்ணகை அம்மன் ஆலயம், கோப்பாய் காளிகோயில் ஆகிய இடங்களில் ஒரே இரவில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

வியாழக்கிழமை இரவு பிள்ளையார் ஆலயத்தில் விக்கிரகத்தை உடைத்து அதிலிருந்த தங்கத் தகடுகள் திருடப்பட்டுள்ளன. ஏனைய ஆலயங்களில் பெறுமதி வாய்ந்த பித்தளைப் பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக ஆலயங்களின் நிர்வாகத்தினர் கோப்பாய் பொலிஸில் முறையிட்டுள்ளனர். பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன. (135)

## தம்புள்ளை பள்ளி...

நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததாக என்.எம்.அமீன் தெரிவித்தார். தம்புள்ளையில் வசிக்கும் பல்லின மக்கள் கலந்துகொண்ட கூட்டமொன்றும் பள்ளிவாசல் முன்னால் இடம்பெற்றது. இதில் உரையாற்றிய வசந்தகுமார நவரட்ண என்பவர் தான் 47 வருடங்களாக தம்புள்ளையில் வசிப்பதாகவும் இப்பள்ளிவாசல் அங்கிருப்பதை தனது சிறுவயது முதல் அறிந்திருந்ததாகவும் கூறினார். தம்புள்ளை மக்கள் இப்பள்ளிவாலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. நேற்றைய ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்களில் 5 சதவீதமானோர் மாத்திரமே அப்பகுதியைச் சேர்ந்தவர்கள். ஏனையோர் வெளியிடங்களைச் சேர்ந்தவர்களே.

உள்ளூர் அரசியல்வாதிகள் இருவர் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவளித்தனர். புனித பிரதேசம் என்ற பெயரில் இங்குள்ள மககளை வெளியேற்றுதற்கு திட்டமிடப்படுகிறது. அதற்காக பள்ளிவாசலை பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்றார். மக்களிடம் தான் கேட்டறிந்த கருத்துக்கள் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுசெல்லபடும் என அமைச்சர் பௌஸி கூறினார். புத்தசாசன அமைச்சின் ஏற்பாட்டில் நாளை நடைபெறவுள்ள கூட்டத்தின் போது பள்ளிவாசல் குறித்த ஏனைய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார். (முன்னர் வந்த செய்தி 9 ஆம் பக்கத்தில்)

## அமைச்சுப் பதவி...

அமைச்சர் பதவிகளை பெறுவதற்கான தருணம் இதுவெனவும் அக்கடிதத்தில் மேற்படி நான்கு எம்.பிகளும் குறிப்பிட்டுள்ளனர் இக்கோரிக்கை குறித்து தான் விரைவில் கருத்திற்கொள்வதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். மேற்படி கடிதம் ஜனாதிபதியிடம் கடந்த வியாழக்கிழமை கையளிக்கப்பட்டதாக முத்துஹெட்டிகம எம்.பி. டெய்லி மிரருக்குத் தெரிவித்தார்.

## இ.போ.ச. ஊழியரின்...

இலங்கை பேக்குவரத்து சபையின் சுமார் 4 ஆயிரம் சேவையாளருக்கு இந்த ஊக்குவிப்பு தொகை வழங்கப்பட வேண்டியுள்ளது. இந்த நிலையில், நான்கு கட்டங்களாக இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும் தொழில் அமைச்சர் காமினி லொக்குகே குறிப்பிட்டார்.

## பரிந்துரைகளை...

எனவே இத்தீர்மானமானது இலங்கைக்கு எதிரானது அல்ல, உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டியது இலங்கை அரசாங்கத்தின் கடமையாகும். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதன் மூலம் போரினால் ஏற்பட்ட காயங்களை குணப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் இலங்கைக்கு கிடைக்கும்.

எமது இந்த விஜயத்தின்போது காணாமல்போனோர், கடத்தப்பட்டோர், உயர் பாதுகாப்பு வலயங்களை குறைப்பது, படைத்தரப்பினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள தனியார் காணிகளை மீளளிப்பது மற்றும் வடக்கில் பொதுமக்கள் தொடர்பான விடயங்களில் இராணுவத் தலையீடுகள் குறைக்கப்பட வேண்டியது குறித்தும் சுட்டிக்காட்டியுள்ளோம். 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதன் அவசியம் குறித்தும் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளோம். அரசாங்கமும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இயன்றவரை விரைவாக பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவேண்டும்.

இலங்கைக்கான எமது விஜயத்தின்போது வடக்கின் தற்போதைய நிலைமைகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் கருத்துக்கள் மற்றும் வடக்குக் கிழக்கு மக்களை சந்தித்து அவர்களின் குறைகளையும் அறிந்துகொள்ளும் வாய்ப்பு எமது குழுவுக்கு கிடைத்துள்ளது. போருக்குப் பின்னரான இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து ஆராய்வதே இந்திய அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் முக்கிய நோக்கம்.

அரசியல் தீர்வு விடயத்தில் நாம் மிகவும் தீவிரமாக இருக்கிறோம் வடக்கில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுவதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறிய அவர், எனினும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான மக்கள் இன்னும் இடைத்தங்கல் முகாம்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளதாக தெரிவித் தார். அம்மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பும் வரை எமது இலக்கு முடிவடையப்போவதில்லை என அவர் கூறினார்.

இந்திய நாடாளுமன்றத் தூதுக்குழுவின் விஜயம் குறித்து தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்த கருத்து குறித்து செய்தியாளர்கள் கேட்ட போது, இது ஓர் உல்லாசப் பயணம் அல்லவென நான் ஜெயலலிதாவுக்கு கூறியுள்ளேன். தினமும் காலை 6.30 மணி முதல் இரவு 11.30 மணிவரை நாம் பணியாற்றினோம். நாம் எங்கும் ஷொப்பிங் போகவில்லை. கொழும்பை சுற்றிப் பார்க்கவும் இலலை. அதற்கு எமக்கு நேரம் இருக்கவில்லை என்றார்.

தனி ஈழம் அமைப்பது குறித்து இலங்கையின் வடக்கு, கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியமை குறித்து கருத்து தெரிவிக்க அவர் மறுப்புத் தெரிவித்தார்.

இதேவேளை, மூன்று வருடங்களுக்கு முன்னர் இலங்கை வந்தபோது வவுனியா இடம்பெயர்ந்தோர் முகாம்களில் மூன்று இலட்சம் பேர் இருந்தனர். இப்போது 6000 பேர் மாத்திரமே உள்ளனர். அப்போது வடபகுதி மக்களிடையே தங்கள் எதிர்காலம் குறித்து அச்ச உணர்வு காணப்பட்டது. இப்போது அவர்கள் ஓரளவு சுதந்திரமாக உணர்கிறார்கள். எனினும் இராணுவப் பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும் என அவர்கள் விரும்புவதை உணரமுடிந்தது என இந்த சந்திப்பில் கலந்துகொண்ட சுதர்சன நாச்சியப்பன் கூறினார்.

2009 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த இந்திய நாடாளுமன்றத் தூதுக்குழு வட பகுதிக்குச் சென்ற போது அவதானித்தவற்றுக்கும் இப்போது அவதானித்தவற்றுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்று கேட்டபோதே சுதர்சன நாச்சியப்பன் எம்.பி. இவ்வாறு கூறினார். இலங்கை தமிழ் மக்களுக்கு இந்தியா எப்போதும் ஆதரவளிப்பதுடன் உதவிகளை வழங்கவும் தயாராகவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

பாக்கு நீரிணை மீனவர் பிரச்சினை குறித்த கேள்வியொன்றுக்கு பதிலளித்த அவர், இவ்விடயத்தில் இரு நாடுகளின் மீனவர்களும் கலந்துரையாடி தீர்வுகாண வேண்டும் என்றார். இதற்கு முன்னரும் அவ்வாறான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன. இரு நாடுகளின் அரசாங்கங்களின் ஆதரவுடன் இப்பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து முன்னெடுத்து செல்லப்பட வேண்டும் என அவர் கூறினார். இதேவேளை, தமது இலங்கைக்கான விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு இந்திய எம்.பி.க்கள் குழுவினர் இந்தியாவிற்கு பயணமாகினர்.

## அரசின் தந்திர...

மற்றும் புல்மோட்டை, திரியாய் போன்ற கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவருடன் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம்.சுமந்திரன் மற்றும் திருமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் ஆகியோரும் இணைந்துகொண்டனர்.

அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்திய சம்பந்தன் எம்.பி, தமிழ் பேசும் மக்களின் விடிவைக் கருத்திற்கொண்டு முஸ்லிம் மக்களின் தலைவர்கள் எம்முடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றேன். தமிழ்பேசும் மக்கள் இணைந்து செயற்பட வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம். இக்காலகட்டத்தை தமிழ் மக்களுக்காக மாத்திரமல்ல முஸ்லிம் மக்களுக்காக மாத்திரமல்ல இலங்கை தமிழ்பேசும் மக்களுடைய விடிவுக்காக அனைவரும் பயன்படுத்த வேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

## இந்தியக் குழுவின்...

உறுதிப்படுத்தும் வரையிலும் அந்த மக்கள் அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். அதன் பின்னர் மூன்று வருடங்கள் ஆகியும் இன்னும் அங்கேயே இருக்கின்றனர். அவர்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட்டதாக தெரியவில்லை.

இதனால் எதிர்க்கட்சிகளும், சிவில் அமைப்புகளும் அவர்களை மீள்குடியேற்றி தேவையான வசதிகளை ஏற்படுத்துமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்துவந்தன. இந்த அழுத்தங்களைத் தொடர்ந்து அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஒரு பகுதி மக்களை பல்வேறு இடங்களில் அரசு குடியேற்றியது. ஆனபோதும் இது மீள்குடியேற்றமல்ல. அந்த மக்களை மீள் பிரச்சினைக்கு கொண்டு செல்லும் நிலையே ஆகும்.

இந்நிலையில் தற்போது இந்திய நாடாளுமன்றக் குழுவொன்று இங்கே வந்தது. அவர்கள் தமி ழர்களின் பிரச்சினையை தீர்க்க வந்தவர்களாக தெரியவில்லை. முகாமில் இருந்த மக்கள் தங்களை தமது சொந்த இடங்களில் குடியேற்ற நடவடிக்கையெடுக்குமாறே தெரிவித்து வருகின்றனர். அதிகாரப் பகிர்வை கேட்கவில்லை. வந்தவர்கள் அதிகாரப் பகிர்வு குறித்துத்தான் கதைக்கிறார்கள். மக்களை மீள்குடியேற்றுவது தொடர்பாக பெரியளவில் அவதானம் செலுத்தியதாகத் தெரியவில்லை.

இதேவேளை, இவர்கள் அங்கு அரசியல் இலாபத்தை தேடிக் கொள்வதற்காகத் தான் இங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள். அத்தோடு இலங்கை அரசாங்கமும் இந்தியாவிற்கு அடிபணிய வேண்டியுள்ளது. நாட்டில் அரசாங்கம் மேற்கொள்ளும் திறமையற்ற செயற்பாடுகளினால் தான் இந்தியா, அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகள் இலங்கையில் தலையிட வேண்டியுள்ளது என்றார்.

# அதிகாலை 5 மணிக்கு முன்னர் பேருந்துச் சேவை வேண்டும்

## பல்வேறு தரப்பினரும் கோரிக்கை



(சுன்னாகம்)

யாழ். குடாநாட்டின் கிராமப் புறங்களிலிருந்து யாழ். நகரை நோக்கி நடத்தப்படும் பயணிகள் பஸ் சேவையை அதிகாலை 5 மணிக்கு முன்னரே ஆரம்பிக்க வேண்டுமென்று கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு அதிகாலையில் நகருக்கு வரும் பயணிகள் பஸ் சேவையானது யாழ். நகரிலிருந்து அதிகாலை 5.30 மணிக்கு வெளி மாவட்டங்களுக்கு புறப்பட்டுச் செல்லும் பயணிகள் பஸ் சேவையுடன் இணைப்பை ஏற்படுத்தும் வகையில் அமைய வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக யாழ். குடாநாட்டிலிருந்து வெளிமாவட்டங்களுக்கு செல்லும் அரச, தனியார்துறை ஊழியர்கள், மாணவர்கள், பொது மக்கள் என பல நூற்றுக்கணக்கானோர் யாழ். மத்திய பஸ் தரிப்பிடத்திற்கு அதிகாலையில் வரவேண்டிய சூழல் உள்ளது. அத்துடன் யாழ். போதனா வைத்தியசாலைக்கும் நோயாளிகள் சிகிச்சைக்காக வருகின்றனர்.

குடாநாட்டின் பெரும்பாலான இடங்களிலிருந்து காலை 6.00 மணிக்குப் பின்னரே போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்படுவதால் யாழ். மத்திய பேருந்து நிலையத்தை 5.40 இற்கு பின்னரே அந்த பஸ் வண்டிகள் வந்தடைகின்றன. இதனால் யாழ். நகரிலிருந்து 5.30 மணிக்கு புறப்படும் வெளிமாவட்ட பஸ் வண்டிகளை இப்பயணிகள் தவற விட வேண்டிய சூழல் ஏற்படுகின்றது.

இதனால் அரச ஊழியர்கள் தமது வேலைத்தளங்களிற்கு காலதாமதமாக செல்ல வேண்டியுள்ளது.

சிலவேளைகளில் குறித்த சில இடங்களிற்கான பஸ்கள் சென்று விடுவதால் ஊழியர்கள் தமது கடமைக்கு செல்ல முடியாத சூழல் ஏற்படுகின்றது.

போக்குவரத்து சேவையில் ஈடுபடும் அரச, தனியார் போக்குவரத்து பஸ்கள் 5.00 மணிக்கு முன்னர் சேவையில் ஈடுபடுவதன் மூலம் பொதுமக்களின் சிரமங்களை இயலுமான வரை தவிர்த்துக் கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(148)

# இலங்கை, இஸ்ரேலிடையே இரு தரப்பு கலந்துரையாடல்

(கொழும்பு)

இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கும் இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சுக்கும் இடையிலான இருதரப்பு கலந்துரையாடல் இலங்கை வெளிவிவகார அமைச்சில் நேற்று முன் தினம் நடைபெற்றதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

இலங்கையின் தூதுக்குழுவுக்கு வெளிவிவகார செயலாளர் கருணாரட்ன அமுனுகமவும் இஸ்ரேலிய தூதுக்குழுவுக்கு இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சின் ஆசிய பசுபிக் திணைக்களத்தின் தலைவரான ருத் கஹானொவும் தலைமை தாங்கினர்.

இரு தரப்பு உறவுகள் மற்றும் விவசாயம், சுற்றுலா, வர்த்தகம், வேலைவாய்ப்பு முதலான விடயங்களில் ஒத்துழைப்புகளை அதிகரித்தல் தொடர்பாக கலந்துரையாடல் இடம்பெற்றன.

இந்த வருடாந்த கலந்துரையாடல்கள் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான பல்துறை சார்ந்த உறவுகள், பரஸ்பர நன்மைகளுக்கான பொருளாதார ஒத்துழைப்பு வலிமையடையும் எனவும் எதிர்பார்க்கப்படுவதாக இரு தரப்பினரும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இலங்கையர்களுக்கு மேலும் கூடுதலான தொழில்வாய்ப்புகளை வழங்கவும் இஸ்ரேலிய தரப்பு இணங்கியதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

# உலக வங்கியில் பணியாற்ற கொழும்பில் பதவி விலகும் மிலிந்த



(கொழும்பு)

உலக வங்கியில் பணியாற்றவுள்ள நிலையில் கொழும்பு மாநகர சபையின் எதிர்கட்சித் தலைவர் மிலிந்த மொரகொட தமது பதவியிலிருந்தும், நகர சபை உறுப்புரிமையில் இருந்தும் விலகத் தீர்மானித்துள்ளதாக கொழும்பு மாநகரசபைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 25 ஆம் திகதி கொழும்பு மாநகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்றுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்திப்பில் மிலிந்த மொரகொட உத்தியோகபூர்வமாக பதவி விலகுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெற்றிடமாகும் கொழும்பு மாநகர சபையின் எதிர்கட்சித் தலைவர் பதவிக்கு உறுப்பினர்கள் மத்தியில் கடும் போட்டி நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மொஹமட் மஹரூப் மற்றும் மொஹமட் ஹுசேன் மனசில் ஆகியோருக்கு இடையில் இந்தப் போட்டி நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# ரணில் தலைமையில் விசேட கூட்டம்

ஐ.தே.கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அக்கட்சியின் சகல உறுப்பினர்களுமான கூட்டமொன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 24, 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் கட்சி தலைமைக் காரியாலயமான சிறிகொத்தாவில் அனைவரும் ஒன்றுகூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் போது கட்சியின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள மே தின கொண்டாட்டம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொதுமக்கள் - பொலிஸார் மோதல் கட்டுப்படுத்த கண்ணீர்புகை பிரயோகம்

தெடகொட, வனாதமுல்ல பிரதேசத்தில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் நேற்று மாலை இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதனால் பேஸ்லைன் வீதியில் பல மணிநேரங்கள் வரை பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டு அதனூடான போக்குவரத்து தடைபட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை, பொரளை, ரீ - 20 தோட்டப் பகுதியில் பொலிஸாரால் சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதலின் போது பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 5 சந்தேகநபர்கள், கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 12 சந்தேகநபர்கள், போதைப்பொருள் வைத்திருந்த 7 சந்தேகநபர்கள் உள்ளிட்ட 33 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். பொலிஸாரின் இந்நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதேசவாசிகள் சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்த முயற்சித்த போதே பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் மோதல் நிலை ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தினை மேற்கொண்டனர்.

# பொறுப்பற்ற அமைச்சர்களின் பதவியில் வருகிறது மாற்றம்

(கொழும்பு)

தமக்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சுப் பொறுப்பு தொடர்பில் தெளிவின்மையுடனும், பொறுப்பற்றும் செயற்பட்டுவருகின்ற அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் சிலருக்கு வேறு அமைச்சுப் பொறுப்புகளை வழங்குவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டினதும், நாட்டு மக்களினதும் நலன்கருதி பொறுப்புடன் செயலாற்றவேண்டும் என்ற நோக்கில் அமைச்சுப் பொறுப்புகள் அமைச்சர்களுக்கு வழங்கப்படுகின்றன. தற்போது அமைச்சுப் பதவிகளில் இருக்கின்ற அமைச்சர்கள் தம்மை வேறு அமைச்சுகளுக்கு மாற்றம் செய்யவேண்டும் என விரும்பினால் அறிவிக்க வேண்டும்.

அமைச்சர்களினால் இவ்வாறு அறிவித்தல் விடுக்குமிடத்து, அந்த அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் அமைச்சுகள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றிலுள்ள குறைகளை நிவர்த்தி செய்து தருவதாக ஜனாதிபதி மகிந்த அறிவித்துள்ளார்.

தமது அமைச்சர்களை மாற்றம் செய்து தரவேண்டுமென இதுவரையில் எந்தவொரு அமைச்சரும் மற்றும் பிரதி அமைச்சரும் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கவில்லையெனவும் அந்தத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொற்றாத நோய்களால் நாளாந்தம் 350 பேர் பலி

தொற்றா நோய் காரணமாக நாளொன்றுக்கு சுமார் 350 பேர் மரணிப்பதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தொற்றா நோயான மாரடைப்பு காரணமாக நாளொன்றுக்கு 150 பேரும், பக்கவாதம் காரணமாக நாளொன்றுக்கு 40 தொடக்கம் 50 பேர் வரையிலும், மரணிப்பதாக சுகாதார அமைச்சர் குறிப்பிட்டார்.

நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், புற்றுநோய் ஆகியவற்றின் காரணமாக நாளொன்றுக்கு சுமார் 150 பேர் வரையில் மரணிக்கின்றனர். இலங்கையில் நாளொன்றுக்கு 950 தொடக்கம் ஆயிரம் பேர் வரையில் இறக்கின்றார்கள். இவற்றுள் 350 மரணங்கள் தொற்றா நோய் காரணமாகவே இடம்பெறுகின்றன.

மக்களிடையேயான உணவு பழக்கவழக்கங்கள், சீன உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் மதுப்பாவனை, புகைத்தல் பொருட் பாவனை என்பன இந்த மரணங்களுக்கான காரணம் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

# தபால் சேவைகள் கருத்தறிய ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கையில் தபால் சேவைகள் தொடர்பில் பொது மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்கு தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.


ஒவ்வொரு பிரதேச ரீதியாகவும் கருத்துக்களை பெற்றுக் கொள்ள இருப்பதாக தபால் மா அதிபர் ரோஹண அபயவர்தன தெரிவித்தார்.

தபால் திணைக்களத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் நோக்கிலேயே இச்செயற்திட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும், தபால் திணைக்கள ஊழியர்கள் பல்வேறு நிறுவனங்களுக்கும் சென்று இந்த கருத்துப் பெறும் நடவடிக்கையில் ஈடுபடுவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, 200 வருடங்கள் பழைமை வாய்ந்த வரலாறு கொண்ட இலங்கை தபால் திணைக்களத் திற்கு 2011 ஆம் ஆண்டில் 4600 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

இந்த நட்டம் தபால் திணைக்களத்தின் வரலாற்றில் ஏற்பட்ட மாபெரும் தேறிய நட்டமாக கருதப்படுகிறது. கடந்த வருடம் தபால் திணைக்களத்தின் மொத்த வருமானம் 3.2 பில்லியனாக 27 சதவீதமாக வீழ்ச்சியடைந்ததமையும் செலவீனம் 5.7 பில்லியனாக அதிகரித்த தமையுமே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மக்களுக்கு நிவாரணங்களை அரசு வழங்க வேண்டும்



(கொழும்பு)

அரசாங்கத்தின் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வினைத் தேடிக்கொண்டு, மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

கண்டி - குண்டசாலையில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் பிரச்சினைகளை மக்கள் மீது சுமத்தக் கூடாது. அரசாங்கத்தின் பிரச்சினைகளை அரசாங்கமே தீர்த்துக் கொள்ள வேண்டும். இந்த நிலையில் எந்தவகையிலேனும் பொது மக்களுக்கான நிவாரணங்களை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஏப்ரல் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.